வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 13.03.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 98 | பக்கங்கள் : 20



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


08
மொட்டு கட்சிக்குள் பெரும் வெடிப்பு; அடுத்த நகர்வு என்ன?



09
ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்!


07
ஜனாதிபதியின் அழைப்பு டில்லியை சமாதானப் படுத்துவதற்கா?


16
இந்தியா, இலங்கை மீனவர்கள் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன?

# அனைத்து விடயங்களிலும் தனித்தே முடிவு எடுக்கின்றார் விக்னேஸ்வரன்!

## மோடியிடம் 13ஆவது திருத்தத்தை கோரும் முடிவும் கட்சியின் தீர்மானமல்ல என்கிறார் அருந்தவபாலன்



யாழ்ப்பாணம், மார்ச் 13

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் கட்சி விடயங்கள், முடிவுகள் குறித்து ஏனைய பிரதிநிதிகளுடனும் முக்கிய உறுப்பினர்களுடனும் கலந்து பேசி முடிவுகளை எடுத்து வந்த தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க. வி. விக்னேஸ்வரன், தான் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான பின்னர் எல்லா விடயங்களிலும் தனித்தே முடிவு எடுத்து வருகின்றார். 19

## எரிவாயு சிலிண்டர் ரூ. 835 உயர்கிறது?

கொழும்பு, மார்ச் 13

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை, 835 ரூபாயால் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிப்பது தொடர்பில், இதுவரையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது லிட்ரோ நிறுவன வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்று, 2,700 ரூபாய்க்கு 19

## மின்சாரம் தாக்கி இரு சிறுவர்கள் பலி!

சம்மாந்துறை, மார்ச் 13

விறகு தேடி சென்ற இரு சகோதர சிறுவர்கள் யானைக்காக அமைக்கப்பட்ட மின்வேலி ஆற்றில் உடைந்து விழுந்திருந்த நிலையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

இந்தத் துயர சம்பவம் சம்மாந்துறை - நைனா காடுப் பகுதியில் நேற்று மதியம் இடம் பெற்றுள்ளது.

இதில், அந்த 19

## அதிகரிக்கும் செலவினங்கள்; கிளர்ச்சிக்கு தயாராகும் மக்கள்!

### மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, மார்ச் 13

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை தாங்க முடியாமல் மக்கள் கிளர்ச்சிக்கு தயாராகி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு எரிபொருள் விலை 19


## பேருந்து கட்டணங்களை உயர்த்தும் திட்டமில்லை!

### போக்குவரத்து அமைச்சர்

கொழும்பு, மார்ச் 13

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பேருந்து உரிமையாளர்களுக்கு, டீசல் மானியத்தை வழங்க முடியுமா என்பது குறித்து, நிதி



அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளோம். இதன்போது, எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய இறுதி முடிவு அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## வார இறுதியிலும் இனி மின்வெட்டு!

கொழும்பு, மார்ச் 13

வார இறுதி நாட்களிலும் இனி மின்வெட்டை நடைமுறைப்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

நாட்டில் கடந்த 5ஆம் திகதிக்கு பின்னர் மின் 19

## புதிய அபிவிருத்தி திட்டங்களை கைவிடுமாறு அரசுக்கு பரிந்துரை

கொழும்பு, மார்ச் 13

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தற்காலிகமாகக் கைவிடுமாறு அரசுக்கு, இலங்கை மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது.

சுமார் ஓராண்டு வரை இந்த வேலைத் திட்டங் களைப் பிற்போடுமாறு 19

## அரசாங்கத்துக்கு எதிராக மக்களை திரட்டி போராட்டம்!

### விமல், கம்மன்பில வகுக்கின்றனர்

கொழும்பு, மார்ச் 13

“தாய் நாட்டை மீட்போம்“ என்ற தொனிப்பொருளின் கீழ் மாபெரும் போராட்டம் நடத்துவதற்கு அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரச எதிர்ப்பு ‘அலை’யை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில பங்காளிக் கட்சிகளும் மறைமுக ஆதரவை வழங்கக்கூடும் எனத் தெரியவருகின்றது.

கடும்போக்குடைய சிங்கள தேசிய வாத அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கூட்டம் நடைபெறும் நாளில், விமல் தரப்புக்கு ஆதரவை வெளிப்படுத்தவுள்ளனர் எனவும் தெற்கு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (ஐ)



தமிழகம் சென்றுள்ள எம். ஏ. சுமந்திரன் எம். பிக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் நேற்று இந்து மக்கள் கட்சியின் ஏற்பாட்டில் போராட்டம் நடைபெற்றபோது...!

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகின!

கொழும்பு, மார்ச் 13

2021 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று நள்ளிரவு வெளியாகின.

பரீட்சை முடிவுகளை https://www.doenets.lk/examresults இணையத் தளம் அல்லது https://www.exams.gov.lk/examresults இணையத் தளம் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு விழாவில் சிறிது தொலைவில் தன் தலைமையாசிரியரை பார்த்து விட்டான் சிறுவன் ஒருவன்.

தன்னை முன்பின் அறிந்திராத பக்கத்திலிருந்த சிறுவனிடம் சொன்னான், 'அதோ வருதே, அந்த கிழத்தைப் பார்த்தியா? என்ன அவலட்சணமான உருவம். எங்க பள்ளியிலேயே எல்லோரும் வெறுக்கும் ஒரே ஆள் அந்தக் கிழம்தான்' என்றான்.

உடனே அந்தச் சிறுவன், 'நான் யார் தெரியுமா? நீ திட்டிற அந்த ஆளோட ஒரே மகன்' என்றான்.

'என்னை யார்னு தெரியுமா?' என்று எச்சிலை விழுங்கிக் கொண்டே அச்சத்துடன் கேட்டான் சிறுவன்.

'தெரியாது.' என்றான்.

'அப்பாடா! தப்பித்தேன்' என்று ஓட்டம் பிடித்தான் அவன்.

வயதானவர்கள் ஏதேனும் கதைத்தால் அவருக்கு 'அறளை பேந்து விட்டது' என்பது நமது பேச்சுவழக்கு. இப்படிச் சொல்வதும் மனிதஉரிமை மீறல்தான்.

அப்படி சொல்வதற்கு காரணம், 'அவர்களுக்கு ஞாபக மறதி' என்பதைத்தான் என்று நினைக்கிறேன். தாங்கள் முன்னர் சொன்னவை அவர்களுக்கு மறந்துபோய்விடும். அதனால், அதனையே அவர்கள் திரும்பத் திரும்ப சொல்வார்கள். அதனையே நம்மவர்கள் 'அறளைபேந்துவிட்டது' என்பார்கள் போலும்.

அதற்காக நான் இனி சொல்ல வருகின்ற விடயத்தை பார்த்ததும், நான் அவரை அப்படி கேலிசெய்வதாக நினைத்துவிடாதீர்கள்.

அவர்மீது எனக்கு தனி மரியாதை உண்டு.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண முதல்வருமான நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் ஐயா, ஒரு சில தினங்களுக்கு முன்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பை விமர்சித்திருந்தார்.

நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் தமது நண்பருக்கு நெருக்கடியைக் கொடுக்கக்கூடாது என்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரிக்கை விடுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இப்போது அந்தச் சட்டத்தை நீக்கக்கோரி போராடிவருவது குறித்தே அவர் இந்த கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

இந்தப் பத்தியிலும் இவ்வாறான கருத்தை ஊர்க்குருவியார் முன்னர் ஒருதடவை முன்வைத்திருந்தார்.

அதனைப் படித்த நண்பர் ஒருவர், 'நமது குறைபாடு இதுதான், ஒருவர் ஒரு விடயத்தை செய்யும்போது, ஏன் இதனை முன்னர் செய்யவில்லை என்றுதான் கேட்பார்கள்' என்று, ஊர்க்குருவியாரை கேலி செய்வதுபோல ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார்.

நமது நோக்கம் எல்லாம், செய்யக்கூடிய நேரத்தில் செய்ய வேண்டியதை செய்யாமல் இருந்துவிட்டு, செய்யமுடியாத நேரத்தில் அதற்காக போராடுவதுதான் நமது அரசியல் தலைவர்களின் செயல்பாடாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுவதே' என்று அந்த நண்பருக்கு பதில் அனுப்பியிருந்தேன்.

இப்போது அதேபோன்ற ஒரு குற்றச்சாட்டை விக்னேஸ்வரன் ஐயாவும் முன்வைத்திருக்கிறார்.

அதுவல்ல இந்த பந்தியை எழுத தூண்டிய விடயம்.

அவ்வாறு கூட்டமைப்பை கடுமையாக விமர்சித்த விக்னேஸ்வரன் ஐயா, அந்த விமர்சனத்தைச் செய்த மறுநாள் தமிழ் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நீண்ட கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

அந்தக் கட்டுரையில் அவர் சொன்ன எல்லாவிடயங்களுமே இன்று ஒவ்வொரு தமிழர் மனதிலும் ஓடிக்கொண்டிருக்கின்ற கேள்விகள்தான்.

'தமிழரின் விடியலுக்காக திறந்த மனதுடன் கலந்துரையாடி ஓர் ஒற்றுமை ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம். அதன் பின்னர் அரசாங்கத்துடனும் சர்வதேசத்துடனும் பேசுவோம். நிலத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழறவுகள் இவ்வாறான ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை இலங்கையில் உருவாக்கப் பாடுபடுவோம்.'

இதுதான் விக்னேஸ்வரன் ஐயா விடுத்த வேண்டுகோளின் சாராம்சம்.

இப்படியொரு கோரிக்கையை விடுப்பதற்கு முன்னதாக, ஒற்றுமைப்பட வேண்டிய முக்கிய கட்சி ஒன்றை ஏன் அவ்வாறு விமர்சித்தார் என்பது புரிந்துகொள்ளக்கூடியதல்ல.

அதற்காக நான் மேலே சொன்னதுபோல, அதனை மறந்திருப்பார் என்பதல்ல.

மேலேயுள்ள கதைபோல, திட்டினாலும் தப்பிக்கலாம் என்று அந்தச் சிறுவன் நினைத்ததுபோல நினைத்தாரோ தெரியவில்லை.

இதுபோன்ற விமர்சனங்களை தவிர்த்து, அவரின் இந்த விருப்பத்தை செயலுருவாக்க அவர் கட்டுரையுடன் நின்றுவிடாது, தொடர்ந்து முயற்சிக்கவேண்டும்.

**- ஊர்க்குருவி.**

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கேட்டு பொது மக்கள் வீதிக்கு இறங்க வேண்டும்

## ஜே. வி. பி. கட்சி அழைப்பு

கொழும்பு, மார்ச் 13

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் உண்மையை நிலவரத்தை அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ராஜபக்ஷ குடும்பத்தால் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு கோரி, மக்கள் வீதிக்கு இறங்கி போராட வேண்டும் என்று அழைப்பு விடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வரலாற்றில் முதல் தடவையாக டொலருக்கு சமாந்தரமான ரூபாயின் பெறுமதி பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. முன்னைய காலங்களில் எரிபொருள் விலை 2 அல்லது 3 ரூபாய் அடிப்படையிலேயே அதிகரித்தது. ஆனால், தற்போது ஒரே சந்தர்ப்பத்தில் 75 ரூபாயால் அதிகரிக்கப்படுகிறது.

எரிபொருள் விலை



அதிகரிப்பு மற்றும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றமை ஆகிய இரு காரணிகளும் நாட்டின் அனைத்து துறைகளிலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். நாட்டில் பொருளாதாரம் மிகவும் பாரதூரமான நிலைமையிலுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்தினர் முழு நாட்டையும் சீரழித்துள்ளனர்.

நிதி அமைச்சரும், மத்திய வங்கி ஆளுநரும் நித்திரையிலிருந்து விழித்தவுடன் அவர்கள் மனதில் தோன்றும் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துகின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட தீர்மானங்களையே எடுக்கின்றனர். இலங்கை வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறான தொரு நெருக்கடி நிலைமை ஏற்படவில்லை. நாட்டின் தற்போதைய உண்மை நிலைமையை ஜனாதிபதி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி வேறொரு கனவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு பொருளாதார பேரவை நியமிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமானவர்களே அந்த பேரவையின் அங்கத்தவர்களாகவும் உள்ளனர். சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தி பெறாதவர்கள்கூட பொருளாதார பேரவையில் அங்கத்துவம் வகிக்கின்றனர். சஜித் தரப்பினரும் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளின் பங்காளிகளே ஆவர். இவர்கள் ஒருபோதும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வாக அமையமாட்டார் - என்றார். (ஐ)

# நாவலர் ஆண்டு - 2022 வினா - விடை போட்டி!

யாழ்ப்பாணம், மார்ச் 13

நாவலர் ஆண்டு - 2022ஐ முன்னிட்டு வண்ணை. சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் சைவவமய அபிவிருத்திக் கழகம் வினா - விடை போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மாணவர்களின் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு நடத்தப்படும் இந்தப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் யாவரும் பங்குபற்றலாம். முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 4 ஆயிரம் ரூபாயும், 3ஆம் பரிசாக 3 ஆயிரம் ரூபாயும் அடுத்த 10 இடங்களுக்கு தலா ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

இல. 144 (82), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (என். எஸ். பி. வங்கிக்கு அருகாமையில் உள்ள சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகத்தின் அலுவலகத்தில் வினா கொத்தைப் பெற்று அதிலேயே விடைகளை மாணவர்கள் தமது சொந்த கையெழுத்தில் எழுத வேண்டும். உதவிக்கு இணையத்தளம், நூலகம் என்பவற்றை நாட முடியும்.

விடைகள் எழுதிய வினாத் தாள்களை எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை முன்னதாக வழங்க வேண்டும்.

வெற்றி பெற்றோருக்கான பரிசு வழங்கல் எதிர்வரும் டிசெம்பர் 18ஆம் திகதி நாவலர் விழாவன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 021 790 4790 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ள முடியும். (ஐ)

# தேசிய சேமிப்பு வங்கி பொன்விழா; பருத்தித்துறையில் பயிர்கள் பகிர்வு

வடமராட்சி, மார்ச் 13

தேசிய சேமிப்பு வங்கியின் பொன்விழாவை முன்னிட்டு பொருளாதார ரீதியில் பெறுமதிமிக்க விவசாயப் பயிர்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச் சித்திட்டம் நேற்றுக் காலை பருத்தித்துறையில் நடைபெற்றது.

பருத்தித்துறையில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் வங்கியின் பருத்தித் துறை கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதற்கு பருத்தித்துறை கிளையின் முகாமையாளர் அப்புத்துரை கெங்காதரன் தலைமை தாங்கினார்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சேதன பசளை, பழ மரக்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, கரவெட்டி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. திலீப்குமார், விவசாய போதனா ஆசிரியர்களான துஷ்யந்தி தனஞ்சயன், பு. நிரோஜன் ஆகியோர்களால் வீட்டுத்தோட்டம் மேற்கொள்ளல் மற்றும் சேதன பசளைகளை உற்பத்தி செய்தல் தொடர்பான கருத்துக்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் தகவல் தொழில் நுட்பம் மற்றும் பிரதான தகவல் அதிகாரி பொது முகாமையாளர் கலாநிதி. ஏ.கே.எல்.இளேசிங்க கலந்து கொண்டிருந்தார். (ஐ-2)



கரித்தாஸ் கியூடெக் அமைப்பு நேற்று சனிக்கிழமை ஆனைக் கோட்டை முதியோர் சங்க முன்றலில் மகளிர் தின நிகழ்வை நடத்தியது. கரித்தாஸ் கியூடெக் அமைப்பின் இயக்குநர் அருட்பணி இயூஜியன் பிரான்சிஸ் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

ஈழநாடு
Eelanadu
13.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தலை(மை)யில்லாத தமிழ் மக்கள்?

பேச்சு வழக்கில் ஒரு கூற்றுண்டு - அதாவது, கழுதை தேய்ந்து, கட்டெறும்பான கதை. தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமையின் நிலையும் கிட்டத்தட்ட இப்படியானதொரு நிலையில்தான் இருக்கின்றது. 2009இற்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருடங்களில், தமிழ் மக்களின் அரசியல் தலைமை தொடர்ந்தும் பலவீனமடைந்தே வந்திருக்கின்றது. இந்த நிலைமை தற்போது அதன் வீழ்ச்சியின் உச்சத்தை அடைந்திருக்கின்றது. இந்த நிலையில் ஒன்றில், பலமானதோர் ஐக்கிய முன்னணிக்கான அடித்தளம் போடப்பட வேண்டும் அல்லது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்து - அதனை கட்டமைப்பு சார்ந்து பலப்படுத்த வேண்டும்.

இரண்டில் ஒன்று நிகழாவிட்டால், தமிழ்த் தேசிய இனம் தலைமையில்லாத இனமாகும் நிலைமை நிச்சயம் ஏற்படும். இன்று தமிழ் அரசுக் கட்சி ஒரு புறமாகவும், பங்காளிக் கட்சிகள் இன்னொரு புறமாகவும் செயல்படுகின்றன. தமிழ் அரசு கட்சியில்கூட அடுத்த தலைமைத்துவம் தொடர்பில் உள்ளுக்குள் இழுபறி காணப்படுகின்றது. சம்பந்தனுக்கு பின்னரான கூட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியுடன் நோக்கப்படுகின்றது. விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியின் எதிர்காலமும் நிச்சயமற்ற ஒன்றாகவே இருக்கின்றது. 24 கரட்தேசியவாதிகளாக தங்களை முன்னிலைப்படுத்தும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியானது, முற்றிலும் ஒரு யாழ்ப்பாண கட்சியாக சுருங்கிக் கிடக்கின்றது. இந்த நிலைமைகள் அனைத்தும், அரசியல் தலைமைத்துவத்தின் பலவீனத்திற்கான சான்றுகளாகும்.

ஓர் இனக் கூட்டத்துக்கான தலைமைத்துவம் என்பது அடிப்படையில் அவர்களுக்கான தலைபோன்றது. தலை சரியாக இருந்தால்தான் அனைத்தும் சரியாக இயங்க முடியும். ஒரு மக்களுக்கான அரசியல் தலைமைத்துவம் என்பது கட்டுறுதியுடனும் வினைத்திறனுடனும் இருக்கும்போதுதான் - அந்த மக்கள் கூட்டம் சரியான திசை நோக்கி நகர முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்ட உடைவுகள் கொஞ்சம்கொஞ்சமாக தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை சிதறடித்திருக்கின்றது.

இவ்வாறு சிதறடிக்கப்பட்டவர்களே தற்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் என்னும் பெயரில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால், ஜனநாயக அரசியலை பொறுத்தவரையில் ஒரு கட்சியின் பலம் என்பது, அதன் பாராளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படையில்தான் மதிப்பிடப்படுகின்றது. பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் சிதறும்போது, அடிப்படையில் தலைமைத்துவமே பலவீனமடைகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் பேரம் பேசும் பலம் இழக்கப்படுகின்றது. அத்துடன், ஒரு மக்கள் என்னும் அடிப்படையில் அரசியலை அணுகுவதற்கான தகுதியும் இழக்கப்படுகின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த சீனத் தூதுவர் - அங்கு சில பிரமுகர்களை சந்தித்திருந்தார். இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சீன எதிர்ப்பு தொடர்பில் அவரிடம் வினவியபோது - அவர் கேட்ட கேள்வி - வடக்கு கிழக்கில் கூட்டமைப்புக்கு எத்தனை விகித வாக்குகள் கிடைத்தன? இந்தக் கேள்வி ஜனநாயக பிரதிநிதித்துவத்தின் பலம் எந்தளவு முக்கியமானது என்பதை உணர்த்துகின்றது. ஏனெனில், ஒரு கட்சியோ அல்லது, ஓர் அரசியல் கூட்டணியோ - ஒரு நிலைப்பாட்டை அறிவிக்கும்போது - முதலில் குறித்த கட்சியின் பிரதிநிதித்துவ பலம்தான் கருத்தில் கொள்ளப்படும். பிரதிநிதித்துவ பலமில்லாதவர்கள் குறிப்பிடும் விடயங்கள் சபையேறாது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் - தமிழ் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவங்கள் ஓரிடத்தில் அதிகம் இருக்க வேண்டியது அவசியம். இன்றிருக்கும் சூழலில் ஐக்கிய முன்னணி ஒன்றின் மூலம் மட்டும்தான் அதனை அடைய முடியும். ஆரம்பத்தில் கூட்டமைப்பு அவ்வாறானதோர் இடத்தில் இருந்தது உண்மை. ஆனால், அந்த நிலைமை பெரியளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. கூட்டமைப்பிலுள்ள குறைபாடுகளை நீக்கி - புதியவர்களை உள்வாங்கி - கட்சித் தனித்துவங்களை புறம்தள்ளி - மக்களுக்கான ஒரு பலமான அரசியல் இயக்கம் என்னும் அடிப்படையில் சிந்தித்தால் - இது இயலாத காரியமல்ல. இல்லாவிட்டால், அரசியல் கட்சிகளுக்கு வெளியில் - அரசியல் கட்சிகளை கட்டுப்படுத்தும் ஒரு பலமான மக்கள் இயக்கம் தோற்றம் பெற வேண்டும். ஆனால், அதற்கான வாய்ப்புக்கள் முயல் கொம்பாகும். ஏனெனில், அப்படியானதொரு தகுதிநிலையில் எந்தவோர் அமைப்புக்களும் வட, கிழக்கில் இல்லை.

இந்த நிலையில் இருப்பதை கொண்டுதான் முன்நோக்கி பயணிக்க வேண்டும். பெயரளவில் இருப்பது தலைமையல்ல. இப்போது இருக்கும் அரசியல் கட்சிகள் என்பவை, தமிழ் மக்களுக்கான பெயரளவு தலைமைத்துவத்தையே வழங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படியானதொரு தலைமைத்துவத்தினால் இன்றைய அரசியல் சவால்களை ஒருபோதுமே எதிர்கொள்ள முடியாது. அதே வேளை, பெயரளவு தலைமைத்துவங்களால் எந்தவொரு வெளித் தரப்புக்களையும் கையாளவும் முடியாது.




# ஏன் இந்த அசாதாரண விலை உயர்வு?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

*இலங்கை வரலாறு காணாத பொருளா தார நெருக்கடியை சந்தித்துள்ள இந்த தருணத்தில், பொருட்களின் விலைகள் கடந்த சில தினங்களுக்குள் வரலாற்றில் முதல் தடவையாக கட்டுப்பாட்டை இழந்து அதிகரித்துள்ளன.*

*நாணய மாற்று வீதத்தை நெகிழ்வு போக்குடன் தீர்மானிக்க இலங்கை மத்திய வங்கி கடந்த 7ம் தேதி அனுமதி வழங்கியதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்திருந்தார். இதையடுத்து, இலங்கை ரூபாவிற்கு நிகரான டொல ரின் பெறுமதி வரலாற்றில் முதல் தடவையாக சுமார் 260 ரூபா வரை அதிகரித்தது.*

*இலங்கை ரூபாவிற்கு நிகரான டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள இந்த திடீர் அதிகரிப்பு காரணமாக இலங்கையின் பொருட்கள் மற்றும் சேவைகளில் விலைகளில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.*

*குறிப்பாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தமது எரிபொருள் விலையை சடுதியாக அதிகரித்திருந்தது. இதன்படி, அனைத்து ரக டீசலுக்கான விலையை ஒரு லீட்டருக்கு ஒரே தடவையில் 75 ரூபாவாலும், அனைத்து ரக பெற்றோலுக்கான விலையை ஒரு லீட்டருக்கு 50 ரூபாவாலும் அதிகரிக்க லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தீர்மானித்திருந்தது.*

*233 ரூபாவாக காணப்பட்ட ஒரு லீட்டர் 95 ஒக்டேன் ரக பெற்றோலின் விலை, தற்போது 283 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தினால் இதுவரை 139 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீட்டர் ஒடோ டீசலின் புதிய விலையாக 176 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*அதேபோன்று, 174 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீட்டர் சுப்பர் டீசலின் விலை 254 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. என்ஸ்ட்ரா ஒயில் டீசல் ஒரு லீட்டரின் விலை 145 ரூபா முதல் 220 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*கோதுமை மா இறக்குமதி நிறுவனங்களான செரண்டிப் மற்றும் பீரிமா ஆகிய நிறுவனங்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன. குறிப்பாக செரண்டிப் நிறுவனம் 35 ரூபாவால் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதுடன், பீரிமா நிறுவனம் 35 முதல் 40 ரூபா வரை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.*


*இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் எரிபொருளுக்கான விலையை அதிகரிக்கும் பட்சத்தில், பஸ் கட்டணத்தை அதிகரிக்க நேரிடும் என பஸ் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. அத்துடன், முச்சக்கரவண்டி கட்டணங்களையும் அதிகரிக்க பேச்சு வார்த்தை இடம்பெற்று வருவதாக அறிய முடிகின்றது.*

*இதேவேளை, ஆப்பிள், திராட்சை, தோடம் பழம் உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் 367 பொருட்களுக்கு நிதி அமைச்சர் அண்மையில் தடை விதித்திருந்தார்.*

*இலங்கையில் டொலருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்ற பின்னணியில், அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு நிதி அமைச்சர் இவ்வாறு தடை விதித்துள்ளது.*

*இலங்கை ரூபாவிற்கு நிகரான டொலரின் பெறுமதி எதிர்வரும் நாட்களில் மேலும் வீழ்ச்சி அடையும் சாத்தியம் எழுந்துள்ள நிலையில், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.* •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்
## 13.03.2022 – 19.03.2022

மார்ச் - 13 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மாசி - 29
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : ஏகாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்ச்சியடைவீர்கள். மனம் லேசாகும்படியான சம்பவம் நடைபெறும். முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். அரசியல்வாதிகளுக்குச் சிறப்பான வாரம். முதலீடும், சேமிப்பும் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சகஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். கடனாக கொடுத்த பணம் வசூலாகும். குடும்ப சம்பந்தமான வேண்டுதல்கள் பலிக்கும். நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். மனதில் உற்சாகம் கூடும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இனிய நிகழ்வுகள் உண்டு. பெரியவர்களின் ஆலோசனையைப் பின்பற்றுவதால் அனுகூலம் காண்பீர்கள். எடுத்த விஷயத்தை வெற்றிகரமாக முடிக்க முயற்சியை முடுக்கி விடுவீர்கள். தொழில், வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். அலுவலகத்தில் பேசும் போது உணர்ச்சி வசப்பட வேண்டாம். பிரியமானவர்களின் அன்பு வெளிப்படும்படியான நிகழ்வு நடக்கும். பணி நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். பிள்ளைகள் உங்களைப் புரிந்து கொள்ள ஆரம்பிப்பர். சிக்கனம் தேவைப்படும் வாரம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பொது இடங்களில் பேசும் போது கோபமின்றி நிதானத்துடன் பேசுங்கள். பயணங்கள் செல்லும் திட்டங்களில் தடைகள் இருக்கும். எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்படும். பணியிடத்தில் சிறப்பாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரும். முன்பிருந்ததை விட தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அதிகக் கவனம் செலுத்துவது நன்மையளிக்கும். உங்களின் பக்குவமான போக்கும், நடத்தையும் பல வகையிலும் நன்மையை உண்டாகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பணியிடத்தில் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பேச்சும் நடவடிக்கையும் நன்மை தரும். கடன் பிரச்னை குறையும். பணியிடத்தில் மறைமுக உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். நினைத்ததை முடிப்பதில் கவனமாக இருப்பீர்கள். இழுபறியாக இருந்த நன்மைகள் முயற்சி காரணமாகச் சாதகமான முறையில் முடிவுக்கு வரும். விடா முயற்சியுடன் செயலாற்றி, சாதகமான பலன் பெறுவீர்கள். மனகுழப்பம் நீங்கும். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கருணை உள்ளம் காரணமாக மற்றவர்களின் பிரச்னையைத் தீர்த்துப் பாராட்டுப் பெறுவீர்கள். கணவர் அல்லது மனைவிக்கு உங்களாலும் உங்களுக்குத் அவராலும் நன்மைகள் உண்டாகும். குழந்தைகளின் தன்னம்பிக்கை அதிகரிக்கும். கொடுத்த தொகை அதிக முயற்சியின்றித் திரும்ப வந்து சேரும். பெரிய மனிதர்களின் நட்பால் நன்மை ஒன்று நிகழும். பக்தியும் ஆன்மிக சிந்தனையும் அதிகரிக்கும். தாயாருடன் கருத்து பேதம் வேண்டாம். வாகனப் பராமரிப்புக்குச் செலவு செய்ய வேண்டி வரலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பொறுப்புகள் அதிகமாகலாம். உழைப்புக்கேற்ற லாபம் இல்லை என்ற எண்ணம் ஏற்படலாம். பொறுமை பலன் தரும் என்ற உண்மை புரியவரும். குடும்பத்தில் பிரச்னைகள் காணாமல் போகும். நண்பர்களின் வீட்டு விசேஷ நிகழ்வுகளில் பங்கேற்பீர்கள். உடன்பிறப்புகளின் நன்றியுணர்வு வெளிப்படுவதால் சந்தோஷம் ஏற்படும். குடும்பச்சூழலில் இருந்த மகிழ்ச்சி குறையாது. நிதி சம்பந்தமான முயற்சி கைகூடும். குடும்பம் சீராக நடந்து வரும். உறவினர் அரவணைப்பில் கூடுதல் அன்பை பெறுவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

அலுவலக ரீதியாக வர வேண்டிய பணம் வந்து சேரும். வியாபாரம் பற்றிய பேச்சு முடிவுக்கு வரும். முக்கியமான முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். உறவினருடன் ஏற்பட்ட பிரச்னை மறையும். பணியாளர்கள் அதிகாரிகளின் வழிகாட்டுதலால் பயன் பெறுவர். நல்லவர்களின் உதவி கிடைக்கும். அலுவலக ரீதியாகவோ, வியாபாரம் அல்லது தொழில் மூலமாகவோ திடீர் லாபம் வரும். கடந்த கால உழைப்புக்கான பலன் தற்போது கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

யாருடைய பிரச்னையில் தலையிட வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. தன்னம்பிக்கையும் தைரியமும் அகந்தையாக மாறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பேச்சிலும், செயலிலும் நிதானம் தேவை. பணவரவு சுமாராகத்தான் இருக்கும். அடமானத்தில் இருக்கும் நகைகளை மீட்டு மகிழ்ச்சியடைவீர்கள். எதிரிகளின் முயற்சியை உங்களையறியாமல் வெல்வீர்கள். பணவரவு தாமதத்துக்கு பிறகு கிடைக்கும். நினைத்த விஷயங்கள் விரும்பிய திசையில் முன்னேறுவதால் மன உறுதி அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பண விஷயத்தில் ஏற்பட்ட குழப்பங்கள், குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் சாதுர்யமான தீர்மானம் ஒன்றால் முடிவுக்கு வரும். எதிர்ப்போரின் முயற்சிகள் பலனின்றிப் போகும். ஆரோக்கியத்தில் இத்தனை காலம் இருந்து வந்த அச்சுறுத்தல்கள் படிப்படியாக முடிவுக்கு வரும். எதிர்பாலினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்யுங்கள். அரசாங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் நண்பர் ஒருவரின் உதவி கிடைக்கும். புதிய கலை கற்பதில் ஆர்வம் வரும். செய்வது நல்லது.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகாதபடி கவனமாகப் பணி செய்தும் கூடுதலாக உழைத்தும் நல்ல பெயர் எடுப்பீர்கள். நண்பர்ஃ தோழி வீட்டில் சுப நிகழ்ச்சி முடிவாகும். வாரக்கடைசியில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். பழைய கோபத்தைக் கிளறும் வகையில் உறவினர் மற்றும் குடும்பத்தினரிடம் வேண்டாம். சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். பேச்சில் மிகுந்த கவனம் தேவை. முயற்சி மிகச் சுலபமாகக் கைகூடும். கடந்த கால பாதிப்புகள் அகலும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

குடும்பத்தில் திருமணப் பேச்சுகள் இனிதே முடிவடையும். வீடு, நிலம் வாங்கும் முயற்சியில் அருமையான முன்னேற்றம் உண்டு. நண்பர்களின் உதவி கிடைக்கும். பணப்பற்றாக்குறையால் ஏற்பட்ட சிரமம் நீங்கும். அலுவலக சகாக்களின் எதிர்ப்பு அடங்கும். குடும்பத்தில் கவலை ஒன்று தீரும். ரிஸ்க் எடுக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும். நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும். கடன் பெறவோ, வாங்கவோ வேண்டாம். சகோதரருக்கு நன்மை நிகழும். தாயாருடன் முன்பிருந்த கருத்து வேறுபாடு முடிவுக்கு வரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

வயதில் சிறியவர்களிடமிருந்து பாடம் பெறுவீர்கள். பயணம் ஒன்று செல்ல நேர்ந்தால் பொருட்களில் அதிக கவனம் தேவை. ஆன்மிக சிந்தனை மேலோங்கும். பயணங்களால் புதிய அனுபவம் பெறுவீர்கள். நண்பர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. தாயாருக்கு நன்மை செய்து ஆசி பெறுவீர்கள். அன்பளிப்பு அல்லது பரிசு கிடைக்கும். எடுத்த பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த லாபம் சிறுதடை, தாமதத்துக்குப்பின் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பாக இருந்த சிக்கல் தீரும்.

# பிரார்த்தனைப் பகிர்வு

பகிர்வு -20

**கணபதி சர்வானந்தா**

பல வருடங்களுக்கு முன்னர் நாட்டிய சாலை ஓரங்களில் உள்ள மரங்களைப் பற்றி.. இன்று விருட்சங்களாகி நிற்கின்ற அவற்றிற்குப் பின்னால் உள்ள மனித நேயம் பற்றி.. அடுத்த தலைமுறையும் ஆரோக்கியமாக வாழவேண்டும் என அன்று அவர்கள் கொண்ட நற்சிந்தனைகள் பற்றி. அவர்கள் கொண்ட இயற்கையை நேசிக்கும் பண்பு பற்றி. இப்படிப் பலவாறான விடயங்களை உள்ளடக்கியவாறு நிமிர்ந்து நிற்கின்ற பல மரங்கள் உலகத்துக்கு அறத்தைப் போதிக்கின்றன.

1990 காலப்பகுதிவரை யாழ். மண்ணில் வாழ்ந்த அன்பர் மில்க்வைற் தொழிற்சாலையின் அதிபர் திரு.க.கனகராசா அவர்கள். பல இலட்சம் விதைகளை இம்மண்ணில் விதைத்தவர் என்ற நற்பெயருக்குரியவர். அவர் அன்று விதைத்த விதைகள் இன்று பெரிய மரங்களாகி மனித குலத்துக்குப் பெரும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆரோக்கிய மான வாழ்க்கைக்கு வழி வகுத்துக் கொண்டிருக்கின்றன. அன்று அவர் பணியைப் பாரிய அளவில் மக்கள் கண்டுகொண்டதாக இல்லை. ஆனால் இன்று அவர் பல வழிகளிலே போற்றப்படுகிறார். அவர் பணிகளும் பல வழிகளிலே போற்றப்படுகின்றன. காரணம் அவர் எதிர்காலத்தின் பால் கொண்ட அக்கறை. இனி வருங்காலங்களிலும் மக்கள் நலமாக வாழ வேண்டும் என்று அவர் அன்று கொண்ட எதிர்பார்ப்பு. அதனை நேரில் கண்டு அனுபவித்தவன் என்றவகையில் நான்.

ஒரு மரத்தை நடுவதனூடாக மனிதரைப் பற்றிச் சிந்திப்பதென்பது. மனிதரைப் பற்றி மட்டுமல்ல, உலகத்தில் வாழும் அனைத்து உயிரினங்கள் பற்றியும் பலர் சிந்தித்தனர் என்பதற்குப் பல வரலாற்றுப் பதிவுகள் நம்மிடத்தே உண்டு. அன்றைய அவர்கள் சிந்தனைக்குப் பின்னால் மரம் நடுவது பற்றி மட்டுமல்ல அது தொடர்பான பல நல்லெண்ண நடவடிக்கைகளையும் நட்டு விட்டுச் சென்றிருக்கின்றனர். அதனால் தான் இன்றும் உலகம் உய்வுறுவதாகச் சொல்லப்படுகிறது.

மரம் நடுவதைப் பற்றியும், அவை தொடர்பான விதைகளை விதைப்பது பற்றியும் நற்சிந்தனை விதைப்பதாகப் பின்வரும் பிரார்த்தனையைக் கண்டேன். அதனை உங்களோடு பகிர்வதால் மரம் நடுவது பற்றியதொரு சிந்தனையை உங்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கிறேன்.

எனது உம்மா காலமாகி, நல்லடக்கம் செய்து இன்றுடன் ஒரு மாதமுமாகிறது. எனது மேசையில் ஒரு பை கவனிக்கப்படாமலே இருக்கிறது. அதனை என்னவென்று பார்க்கத் திறக்கிறேன். உம்மா சத்திர சிகிச்சைக்காகக் கொழும்புக்குச் செல்வதற்கு முன் கடைசியாகத் தந்த பை அது. அதற்குள் புளியம் விதைகள் இருக்கின்றன. விதைப்பந்துகளுக்கான புளியம் விதைகளைப் பெரும்பாலும் உம்மாவே சேகரித்துத் தந்தார். அவரின் வீட்டுக்கு முன் அவருக்குத் தெரிந்தவர்களின் சாப்பாட்டுக் கடை ஒன்றும் இருந்தது. அங்கு சமையலுக்குப் பயன்படுத்தப்படும் புளியம் விதைகளை அவர்களிடமிருந்து சேகரித்து வைத்திருந்து தந்தார். இது அவரின் கடைசிச் சேகரம். மிகவும் உணர்வுபூர்வமான தருணம். முன்பு உம்மா சேகரித்து தந்த விதைகள் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத தொலை துாரத்தில் இப்போது பெரு மரங்களாகியிருக்கும். அது போல இந்த விதைகளும் ஒரு நாள் பெரு மரங்களாகும். அவை உணவு கொடுக்கும். நிழல்கொடுக்கும். காக்கை, குருவி, பருந்துக்கு இடம் கொடுக்கும். மழை கொடுக்கும். விதைகளும் கொடுக்கும். விதைகள் ஒருபோதும் வீணாவதில்லை. அதுபோல உம்மா பெருமரங்களாக நிலைத்திருப்பார். உம்மாவைப் பெரும் மரங்களாயும், பசிய வனங்களாயும் காண வேண்டும். இறைவா உம்மாவின் பாவங்களை மன்னித்து நிறைவான சுவர்க்கத்தைக் கொடுப்பாயாக, என முகநூல் நண்பர் ஒருவர் தனது அன்னைக்கான பிரார்த்தனைக் குறிப்பொன்றில் மேற் கண்டவாறு தெருவித்திருக்கிறார்.

இப்பதிவானது என்னைப் பலவாறு சிந்திக்க வைத்தது. மரத்துக்கும் மனித குலத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகளைப் பற்றிச் சிந்தித்தேன். மரங்கள் மனித குலத்துக்குப் பயன்படுவதைப் போல.. மனிதனுக்கு மட்டுமா? உலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் மரத்தைப் போல உதவுவார் யாருளர்? உலகுக்கு உயிரூட்டுக்கின்ற அனைத்துக் கைங்கரியங்களுக்கும் பின்னால் மரங்கள் உண்டு என்றுரைக்கிறார் திருவள்ளுவர்.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகையான் கண்படின் (குறள் : 217) என்ற திறக்குறளில் மரத்தை ஒரு நல்ல செல்வந்தருக்கு ஒப்பிடுகிறார் திருவள்ளுவப் பெருந்தகை. மரமானது நன்கு வளர்ந்ததும் இலை, காய், பட்டை, வேர், பழம் எனப் பலவகையாலும் உதவுகிறது. மக்களின் பிணிக்கு நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. அதைப் போல செல்வமானது ஒரு பெருந்தகையின் கைகளைச் சென்று சேருமானால் அது மக்களின் பசியை மட்மல்ல நோய்ப் பிணிகளையும் போக்கப் பயன்படும் என்றுரைக்கிறார் திருவள்ளுவர். மரத்தின் நன்மைகளைக் கூறி அதனை அவர் சிறப்பித்திருக் கிறார்.

பொதுவாக இலக்கியங்களில் மரங்களைக் கடவுளுக்கொப்பானவைகளாகவும் காட்டியுள்ளனர். டொக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்திய குடியரசுத் தலைவராக இருந்தபோது ஒரு வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டார். அங்குள்ள அதிகாரி ஒருவர் அவரிடம் பேசும்போது “நாங்கள் மரங்களை அதிகம் நேசிப்போம்” என்று குறிபிட்டாராம். அதற்கு டொக்டர் அவர்கள் “நாங்கள் மரங்களை நேசிப்பதோடு மட்டுமல்லாது அவற்றை வணங்கவும் செய்கிறோம்” எனப் பதிலளித்ததாக ஒரு பதிவினைக் கண்டேன்.

தமிழர் மரபிலே மர வழிபாடு குறிப்பிடத்தக்க வகிபாகத்தைக் கொண்டிருக்கிறது. தல விருட்சங்களாக மரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நெய்தல் நில பரதவர் பனையை வழிபட்டனர். பலராமன் பனைக் கொடியோன் எனப் பெயர் பெற்றான். பொதுவாக மக்கள் கூடும் மரத்தடியே மன்றம் என அழைக்கப்பட்டதாக நற்றிணை குறிப்பிடுகிறது. அம் மன்றங்களே மக்களுக்கு நீதி வழங்கும் இடங்களாகவும் காணப்பட்டன. எனவே மரங்கள் மக்களோடு பின்னிப் பிணைந்தவை. மனித இயக்கத்துக்குப் பின்னால் மரங்கள் உண்டு. எம்மை நாம் ஆரோக்கியமானவர்களாகப் பார்க்க வேண்டுமாயின்.. நாம் மரங்களை ஆரோக்கியமாக வளரவிட வேண்டும்.

இதுவே எமது பிரார்த்தனையாகட்டும்.

## செபமே வாழ்வு



இயேசுவின் உருமாற்றமே லூக்கா நற்செய்தியிலிருந்து தரப்பட்டிருக்கின்றது. இயேசு மலைமேல் ஏறினார் என்பதன் வழியாக இறைவனின் உயர்ந்த இடத்தை லூக்கா குறிப்பிடு கின்றார்.

கடவுள் உயர்ந்தவர் வல்லமை உள்ளவர். என்பதை யும் உயர்ந்த இடமத்திலிருந்து கடவுள் எல்லாவற்றையும் பார்க்கின்றார். என்பதையும் லூக்கா குறிப்பிடுகின்றார். இயேசு தனிமை யைத் தேடி ஒழுக்கமாகச் செல்வது தம் தந்தையோடு உறவாடுவதற் காக என்பதை லூக்கா "இயேசு செபம் செய்ய மலை மீது ஏறினார்." (லூக் 9.28) என்பார். அது மட்டுமன்று "அவர் செபித்துக்கொண்டிருக்கும் போது அவரது முகத்தோற்றம் மாறுதலடைகின்றது" (லூக் 9.29) செபமே இயேசுவைத் தம் தம் உருமாற்றத்திற்கு இட்டுச்செல்கின்றது. செபம் தான் "இவரே என மைந்தர் நான் தேர்ந்து கொண்டது இவரே அவருக்கு செவி சாயுங்கள்" (லூக் 9:30) எனத் தந்தையார் தன் மகனுக்கு சாட்சியம் கூற வைக்கிறது. இயேசுவும் தமது வாழ்வின் முக்கிய கட்டங்களிலெல்லாம் செபிப்பதே விவிலியத்திலே காணக்கூடியதாக இருக்கின் றது. எனவே இயேசு விட்டுச்சென்ற செப வாழ்வை எமதாக்கி இத்தவக்காலத்தில் இவருடைய ஆசியிலும் அருளிலும் நாமும் பங்குபெற செபத்தின் வழி வாழ முயலுவோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா

# கச்சதீவு அந்தோனியாருக்கு திருப்பலி ஒப்புக்கொடுப்பு!

### குறைந்த பக்தர்களுடன் சிறப்பாக நடைபெற்றது



யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு நேற்று சனிக் கிழமை காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெப ரட்ணம் அடிகளார் தலைமை யில் ஒப்புக்கொடுக்கப்பட் டது.

நேற்றுமுன்தினம் கொடி யேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன.

இந்தத் திருவிழாவிற்கு இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே வருகை தந்ததுடன் அவர்கள் பக்திபூர்வமாக நிகழ் வில் கலந்து கொண்டனர்.

மேலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நிகழ்வில் , யாழ்ப்பா ணத்துக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிகக்கார, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கே. விமலநாதன், நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதி மற்றும் மதகுருமார்கள், வட மாகாண கடற்படை தளபதி பிரியந்த பெரேரா, ஓய்வுபெற்ற கடற்படை தளபதி அட்மிரல் விஜயகுணரட்ணகடற்படை இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் பக்தர் கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ஐ)

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக உரும்பிராயில் நேற்று கையெழுத்து




யாழ்ப்பாணம், மார்ச் 13

பயங்கரவாத தடைச் சட்டத் திற்கு எதிராக கையெழுத்து பெறும் நடவடிக்கை நாடு பூரா கவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று சனிக்கிழமை உரும்பிராயில் இடம்பெற்றது.

நீண்டகாலமாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் உள்பட பல வேறு செயல்களுக்கு காரண மாக அமைந்த பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக குறித்த கையெழுத்து போராட் டம் இடம்பெற்றது.

குறித்த கையெழுத்துப் பெறும் நடவடிக்கையில் பல பொதுமக்கள் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (ஐ)

## முள்ளிவாய்க்காலில் வெடிபொருட்கள் மீட்பு!

முல்லைத்தீவு, மார்ச் 13

முள்ளிவாய்க்கால் - இரட் டைவாய்க்கால் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து கடந்த வியாழக்கிழமை இரவு ஒரு தொகுதி வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள் ளன.

விமானப்படையின் புல னாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, விசேட அதிரடிப்படையினர் வெடிபொருட்களை மீட்டுள்ள னர்.

மீட்கப்பட்ட வெடி பொருட்களை சட்ட நடை முறைகளுக்கமைய அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக முல்லைத்தீவு இராணுவ படைத்தளம் தெரி வித்துள்ளது. (ஐ)

## கிளிநொச்சி மேல் நீதிமன்று புதன்கிழமை முதல் இயங்கும்!

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 16ஆம் திகதி - புதன்கிழமை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட் டுள்ளது.

இதன்படி, வடக்கு மாகா ணத்தில் 4ஆவது மாவட்டத் தில் மேல் நீதிமன்ற நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்படுகின் றன.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மேல் நீதிமன்றங்கள் மாகாண நீதிமன்றங்களாக நட வடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் மன்னார் மற்றும் கிளிநொச்சி மேல் நீதி மன்றங்கள் குற்றவியல் வழக்கு களை விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளவுள்ளன.

கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாக ஏ.எம்.எம். சகாப் தீன் நீதிச் சேவை ஆணைக்குழு வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அரச சட்டவாதி கலீமா பாயிஸ் சட்ட மா அதி பர் திணைக்களத்தினால் கிளி நொச்சி நீதிமன்ற அரச சட்ட வாதியாக நியமிக்கப்பட்டுள் ளார்.

கிளிநொச்சி மேல் நீதிமன் றப் பதிவாளராக எஸ். சிறீகரன் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உத்தியோகத்தர்களின் நிய மனங்களையும் நீதிச் சேவைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் வரும் 16ஆ ம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளது.

இதனால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விளக்கம் நடைபெறாமல் நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகள் கிளிநொச்சி மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கலை முன்னிட்டு சிரமதானம்

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி புளியம்பொக் கணை நாகதம்பிரான் ஆலயத் தின் வருடாந்த பொங்கல் உற்ச வத்தை முன்னிட்டு ஆலயத்தின் சுற்றுப்புறச்சூழல் அயல் கிராமங்களை சேர்ந்த மக்க ளால் சிரமதானப் பணிகள் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றா கவும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளைக் கொண்ட ஓர் ஆலயமாகவும் காணப்படுகின்ற புளியம்பொக்கணை நாகதம் பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்த நிலையில் ஆலயத்தில் சுற்றுப்புறச் சூழல்களை சிரமதா னம் மூலம் துப்பரவு செய்யும் பணிகள் அயல் கிராம மக்க ளால் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

நேற்றைய தினம் கிளி நொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஊரியான் கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த மக்களால் சிரம தான பணிகள் முன்னெடுக்கப் பட்டன. இதேபோல நேற்று முன்தினமும், அதற்கு முதல் நாளும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகள் முன்னெ டுக்கப்பட்டன என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# கிளிநொச்சி நகர அமைப்பு; திட்டமிடல் கலந்துரையாடல்




கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி நகர திட்டமிட லும் கிளிநொச்சி நகர வடிவ மைப்பில் புலம்பெயர் சமூகத் தின் பங்களிப்பு எனும் தொனிப் பொருளில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலி கிதன் தலைமையில் கரைச்சி பிரதேச சபையின் வளாகத்தில் கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி நகர வடிவ மைப்பில் விடுதலைப் புலிக ளின் தூர நோக்குடனான திட் டமிடல் தொடர்பிலும் கிளி நொச்சி மாவட்டத்தின் முன் னாள் அரச அதிபர் தி. இராச நாயகத்தின் பங்களிப்பு தொடர் பிலும் கலந்துரையாடப்பட் டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, மூத்த நிர்வாக சேவை அதிகாரி யும், பொருளாதார, சமூக ஆய்வாளருமான ம.செல்வின், திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன், கிளி பீப்பிள் அமைப்பின் ஸ்தாபகர்த் தலை வர் வைத்தியர் சதானந்தன், வைத்தியர்கள் பொறியியலாளர் கடம்பசோதி, முன்னாள் கல் விப் பணிப்பாளர்கள், அதி பர்கள், புலம்பெயர் உறவுகள், துறை சார் நிபுணத்துவம் பெற்றவர்கள், வர்த்தகர்கள், செய்தியாளர்கள், பொது அமைப்புகள் சிலவற்றின் பிரதி நிதிகள் எனப் பலர் பங்கேற்ற னர். (ஐ)

# மின் கட்டணமும் அதிகரிக்கின்றது

கொழும்பு, மார்ச் 13

**நீண்டகால முறைமைக்கு அமைய மின் கட்டண அதிகரிப்பு இடம்பெறவேண்டும். இதற்கான தயாரிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதனிடையே, மின்சாரத்துக்கான கட்டணத்தையும் அதிகரிப்பதற்கு அனுமதிக்குமாறு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளது.

டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு குறைவடைந்தமையைத் தொடர்ந்து நாட்டில் அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன. இந்த நிலையில், எரிபொருட்களும் வெகுவாக அதிகரித்துள்ளன.

இந்த நிலையிலேயே மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரிப்பைக் காரணம் காட்டி கட்டணத்தையும் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)

# நிதியமைச்சர் பஸில் திட்டமிட்டு நெருக்கடியை ஏற்படுத்துகிறார்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பின்னால் பெருமளவிலான சூழ்ச்சிகள் உள்ளதாகவும், நிதி அமைச்சர் நிலைமையை தெரிந்துகொண்டே நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றார். அமெரிக்ககாரரின் சதியால் நாடு நாசமாகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியினர் சபையில் குற்றம் சுமத்தினர்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் நிதி அமைச்சர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் வெள்ளிக்கிழமை சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்த போது ஏற்பட்ட சர்சையின் போதே சமிந்த விஜயசிறி மற்றும் நளின் பண்டார ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

சமிந்த விஜயசிறி எம். பி இது குறித்து கூறுகையில், பாராளுமன்றத்தில் எரிபொருள் நெருக்கடி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போது இறுதி நேரத்தில் நிதி அமைச்சர் இந்த சபைக்கு வந்தார்.

ஆனால், அவர் அந்த ஆசனத்தில் இருந்து எந்தவொரு விடயத்திற்கும் பதிலளிக்கவும் தயாராகவும் இருக்கவில்லை, நாங்கள் கூறும் எதனையும் கண்டு கொள்ளாது. நாட்டின் நிலைமை தொடர்பாக அவர் பதிலளிப்பாராக இருந்தால் சிக்கல் இருக்காது.

அவர் நாட்டில் பொருளாதார நெருக்கடியை தெரிந்து கொண்டே மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் விதமாக செயற்படுகின்றார் - என்றார்.

(ஐ)

# நாட்டின் வங்குரோத்துக்கு மஹிந்த ஆட்சியே காரணம்!

## சந்திரிகா குமாரதுங்க சாடல்

கொழும்பு, மார்ச் 13

நாடு இன்று வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளமைக்கான காரணம் 2005 - 2014 வரையான மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் இடம்பெற்ற பெரும் மோசடிகளே ஆகும் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எனது ஆட்சியின் இறுதி கட்டத்தில் பெறுமதியுடைய விமானங்கள் , ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டமையாலேயே ராஜபக்ஷவால் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவர முடிந்தது எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த அரசாங்கத்தால் பல ட்ரில்லியன் பணம் கொள்ளையிடப்பட்டது. இவ்வாறு இடம்பெற்ற மோசடிக்கான பணத்தை செலுத்துவதற்காகவே நாம் இன்றும் கடன் மேல் கடன் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். மோசடி செய்வதற்காகவே கடன் பெற்றனர்.

ஒரு இலட்சம் ரூபாயில் நிறைவு செய்யப்பட வேண்டிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை 3 இலட்சம் ரூபாயாக கினர். அனைத்து வேலைத் திட்டங்களையும் இதேபோன்று மூன்று மடங்காக்கினர். இவ்வாறு இடம்பெற்ற மோசடிகளை அவதானித்து சர்வதேசம் கடன் வழங்குவதை நிறுத்தியது.

எந்தவொரு நாட்டிலும் அரசாங்கம் தனியார் வங்கிகளை நாடுவதில்லை. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமும் மேலும் நட்பு நாடுகளிடம் மாத்திரமே கடன் பெற்றுக் கொள்ளப்படும்.

இவற்றிடமிருந்து ஆகக் கூடியது நூற்றுக்கு ஒரு சதவீத வட்டிக்கு மாத்திரமே கடன் பெறப்படும். ஆனால், இவர்கள் நூற்றுக்கு 9 சதவீத வட்டிக்கு கடன் பெற்றனர்.

தற்போது மத்திய வங்கியும் இவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. சிறிமாவோ பண்டாரநாயக்க காலப்பகுதியில் இவ்வாறான மோசடிகள் ஒருபோதும் இடம்பெறவில்லை. அவரை பின்பற்றி எனது ஆட்சி காலத்தில் நானும் மோசடிகளுக்கு இடமளிக்கவில்லை. இதன் காரணமாகவே யுத்தத்திற்கு மத்தியிலும் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் தவிர்க்க முடிந்தது. எனது ஆட்சி நிறைவடையும் போது நான்கில் மூன்று வீதம் யுத்தம் நிறைவடைந்திருந்தது.

எனது ஆட்சியின் இறுதி கட்டத்தில் பெறுமதியுடைய விமானங்கள் , ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன. இவற்றின் மூலமே ராஜபக்ஷ அரசாங்கம் யுத்தத்தை முழுமையாக நிறைவுக்கு கொண்டு வந்தது. எனது ஆட்சியில் மோசடிகளுக்கு இடமளிக்காமையின் காரணமாகவே இதனை செய்ய முடிந்தது. எனது ஆட்சியில் யுத்தத்திற்கு மத்தியில் தனிநபர் வருமானத்தை மூன்று மடங்காக அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

அரச வருமானம் , அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டது. தனியார் துறையும் அதற்கு சமாந்தரமாக வளர்ச்சியடைந்தது. நான் ஆட்சியைக் கைப்பற்றும் போது வறுமையான 200 நாடுகளில் 175 ஆவது இடத்திலிருந்த இலங்கை 75 இடத்திற்கு முன்னேற்றப்பட்டது. தெளிவான அபிவிருத்தி திட்டங்களுடன் , ஏனைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இன்று அவ்வாறு எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்கவைப் போன்று தற்போது தலைவரொருவர் காணப்பட்டால் நாட இந்த நிலைமையை அடைந்திருக்காது - என்றார்.

(ஐ)

# ஏற்றுமதி தொடர்பில் புதிய வர்த்தமானி

கொழும்பு, மார்ச் 13

“ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்” தொடர்பில் சில விதிகளை அறிமுகப்படுத்தி, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விதிகள் “2022 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்” என எடுத்துக் காட்டப்படுதல் வேண்டும்.

16 விதிகள் அடங்கிய இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், நேற்று நள்ளிரவு வெளியானதுடன் இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பில்,விடயத்திற்கேற்றவாறு, கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குக ம. உ. கண்காணிப்பகம் வலியுறுத்து!

நியூயோர்க், மார்ச் 13

பாலியல் வன்புணர்வின் விளைவாகக் கருத்தரிக்கும் சந்தர்ப்பங்களுக்கென கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குதல் குறித்துப் பரிசீலிப்பதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளமை முக்கியமான முன்னேற்றமாகும் என்று சுட்டிக் காட்டியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், பாலியல் வன்புணர்விற்கு உள்ளானவர்களுக்கு மாத்திரமன்றி அனைவருக்கும் கருக்கலைப்பை சட்டபூர்வமாக்கக்கூடியவாறான சட்டமொன்றை அறிமுகப்படுத்துவது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது.

கூட்டு வன்புணர்வால் பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு சில நிபந்தனைகளின்கீழ் கருக்கலைப்புச் செய்வதற்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கான முன்மொழிவுகளைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக நீதியமைச்சர் அலி சப்ரி கடந்த செவ்வாய்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்து தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. மேலும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

உலகிலேயே மிகுந்த மட்டுப்பாடுகளைக்கொண்ட கருக்கலைப்புச்சட்டம் இலங்கையில் நடைமுறையில் இருக்கின்றது. அவ்வாறிருக்கையில் பாலியல் வன்புணர்வின் விளைவாகக் கருத்தரிக்கும் சந்தர்ப்பங்களுக்கென கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குதல் குறித்துப் பரிசீலிப்பதாக நீதியமைச்சர் அலி சப்ரி அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளமை முக்கிய முன்னேற்றமாகும்.

இலங்கையில் கடந்த 1883 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி, பெண்ணின் உயிர்ப் பாதுகாப்புத் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக வேண்டுமென்ற கருவைச் சிதைப்பது மூன்று வருடத்திற்கும் அதிக காலம் சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றமாகும். இதேபோன்று ஒரு பெண் தனது கருச்சிதைவதற்குக் காரணமாக இருக்கும்போதும் அல்லது கருவைக்கலைக்கும்போதும் மேற்குறிப்பிட்ட தண்டனை வழங்கப்படும்.

குடும்ப உறுப்பினர் ஒருவரால் வன்புணரப்பட்டதன் பின்னர் கருத்தரித்ததாகக் கூறப்படும் முல்லைத்தீவைச்சேர்ந்த 13 வயது சிறுமியொருவர், சட்டவிரோத கருக்கலைப்பின் விளைவாக உயிரிழந்த சம்பவமொன்று கடந்த டிசெம்பர் மாதம் பதிவாகியிருந்தது. கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு நடவடிக்கைகள் இலங்கையில் கர்ப்பந்தரித்தலுடன் தொடர்புடைய 10 - 13 சதவீதமான மரணங்கள் இடம்பெறுவதற்குக் காரணமாக அமைந்திருப்பது கண்டறியப்பட்டது.

இந்தக் கருக்கலைப்புச் செயன்முறை சட்டவிரோதமானதாக இருப்பதே அதற்குக் காரணமாகும். அதேபோன்று பெரும்பாலும் 15 - 49 வயது வரையான பெண்கள் மத்தியிலேயே 1 - 20 கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன. இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 658 கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன என கடந்த 2016 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு மதிப்பீடு செய்திருந்தது.

பெண்களுக்கு பாதுகாப்பானதும் சட்டபூர்வமானதுமான கருக்கலைப்பிற்குரிய வாய்ப்பை மறுப்பதானது உயிர்வாழ்தல், ஆரோக்கியம், மிகமோசமான நிலவரத்திலிருந்து பாதுகாப்புப் பெறல், முறையான விதத்தில் நடத்தப்படுதல், சமத்துவம், பிள்ளைகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தில் உள்ளடங்களாக மனித உரிமைகள் அச்சுறுத்தல்மிக்க நிலைக்குத் தள்ளப்படுவதற்கு வழிவகுக்கும். பாலியல் வன்புணர்வின் விளைவாகக் கருத்தரிக்கும் சந்தர்ப்பங்களின்போது கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குவதற்கான பரிந்துரைகள் கடந்த 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் சட்ட ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டதுடன் கருக்கலைப்பு தொடர்பான சட்டத்தை மறுசீரமைக்குமாறு பல தசாப்தகாலமாக வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

இருப்பினும் அதற்குரிய புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அனைத்து அரசாங்கங்களும் தவறியிருக்கின்றன. இவ்விடயத்தில் அரசாங்கம் உரியவாறு செயல்படவேண்டும். பாலியல் வன்புணர்விற்கு உள்ளானவர்களுக்கு மாத்திரமன்றி அனைவருக்கும் கருக்கலைப்பை சட்டபூர்வமாக்கக்கூடியவாறான சட்டமொன்றை நீதியமைச்சர் அறிமுகப்படுத்தவேண்டும் - என்றுள்ளது.

(ஐ)




# தமிழ்க் கட்சிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய அழைப்பு: டெல்லியை சமாதானப்படுத்துவதற்கா?

நான் எதிர்பார்த்தபடியே நடந்துமுடிந்தது. மக்கள் தொகை நிறைந்த உத்தரப் பிரதேசம் உட்பட நான்கு மாநிலங்கங்களுக்கு நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் சோனியா-ராகுல்-பிரியங்காவின் காங்கிரஸை துவம்சம் செய்தது மோடி அலை. அதிலும் குறிப்பாக, உத்தரப் பிரதேசத்தில் 70 ஆண்டுகால வரலாற்றில் இரண்டாம் முறை ஆட்சியைப் பிடித்த ஒரே முதல்வர் என்ற சாதனையைப் புரிந்திருக்கிறார் யோகி ஆதித்யநாத். ஓர் ஆச்சரியப்படத்தக்க முடிவு பஞ்சாப் மாநிலத்திலிருந்து வந்தது - அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி, டெல்லியில் அவர் தந்துகொண்டிருக்கும் ஊழலற்ற அரசாலும் முன்னேற்றங்களாலும் பஞ்சாபில் வெற்றி பெற்றிருக்கிறது. ஆம் ஆத்மி கட்சி பஞ்சாபில் வெற்றி பெற்றது என்பதில் பெரிய ஆச்சரியமில்லை. ஆனால், 117 இடங்களில் அது 92 இடங்களைப் பிடித்திருக்கிறது என்பதுதான் ஆச்சரியம்.


உத்தரப் பிரதேசத்தின் பல மதங்கள் கொண்ட வாக்கு வங்கியும், பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா போன்ற பாஜக தலைவர்களின் யோகி ஆதரவுபற்றியும் பாஜகவினர் பலரும் சந்தேகம் தெரிவித்துவந்த சூழலில், முன்னாள் துறவியான இந்த அரசியல்வாதி, தன்மீது சந்தேகம் தெரிவித்தவர்களின் கருத்துக்களை மாற்றி அமைக்கும் வண்ணம் 2017ஆம் ஆண்டில் பெற்ற 39.7 வாக்கு விகிதத்தைவிட கூடுதலாக, 41.6 வாக்கு சதவிகிதம் பெற்றிருக் கிறார். தடைகளும் ஊழல்களும் இல்லாமல், மோடியின் நல்வாழ் வுத் திட்டங்களைக் கொண்டு சேர்த்ததை மக்களுக்குத் தெரி விப்பதே அவரது தேர்தல் பிரச்சாரத்தின் அடிப்படையாக இருந்தது. யோகியின் உரத்த இந்துத்துவா கருத்துக்கள் மற்றும் கோயிலை மையப்படுத்திய பாஜக தலைமையின் செயல்கள் ஆகியவை பெரும்பான்மை இந்துக்களில் நடுநிலைமை கொண்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரை பயமுறுத்தி விரட்டிவிடும் என்ற ஓர் அச்சமும் இருந்தது. ஆனால், ஒரு முதல்வராக தன்னுடைய செயல்பாடுகளை வெளிப்படைத் தன்மையுடனும், ஊழல் இல்லாமலும் அவர் நடத்தி வந்துள்ளார், உள்கட்டமைப்பு, மேம்பாடு, சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது, குண்டர்களுக்குப் பெயர்போன ஒரு மாநிலத்தில் சமூக விரோதிகளை அடக்கி ஒடுக்கியது போன்ற பல முக்கிய செயல்பாடுகளை அவர் திறம்பட நடத்தியுள்ளார் என்பதால், எதிர்கட்சிகளின் அந்த எதிர்பார்ப்பும் பொய்யானது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள குற்ற எண்ணிக்கை குறைந்து அந்த சூழல் மாறியிருக்கிறது என்பதால், உத்தரப்பிரதேசத்தின் அரசு மற்றும் யோகியின் தலைமை ஆகியவற்றில் பெண்களுக்கு நம்பிக்கை வந்திருக்கிறது. அதனாலேயே இந்தத் தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்கு உத்தரப் பிரதேசப் பெண்கள் வாக்களித்ததோடு, பெரும்பாலான வாக்குகளை பா.ஜ.கவுக்குத் தந்திருக்கிறார்கள்.

ஐந்து மாநிலத் தேர்தல்களில் நான்கு மாநிலங்களில் பாஜக பெற்றிருக்கும் வெற்றி, மோடி அலை இன்னும் ஓயவே இல்லை என்பதைக் காட்டுகிறது. உத்தரப் பிரதேசத்தைத் தவிர, உத்தரகாண்ட் (70 இடங்களில் 47 இடங்களில் பாஜக வெற்றி பெற்று, காங்கிரஸ/க்கு 19 இடங்களை மட்டுமே விட்டுத் தந்திருக்கிறது), மணிப்பூர் (60 இடங்களில் 32இல் பா.ஜ.க, காங்கிரஸ் - 5) ஆகிய மாநிலங்களிலும் பா.ஜ.க. வெற்றியைத் தக்கவைத்திருக்கிறது.

“2019 பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவின் வெற்றிக்குப் பிறகு, சில ஞானிகள், 2017இல் வந்த உத்தரப் பிரதேச முடிவுகள் 2019 முடிவுகளை நிர்ணயித்தன என்று கூறினார்கள். இப்போதும் இந்த ஞானிகள் 2022 முடிவுகள் 2024 பாராளுமன்ற தேர்தல்களை நிர்ணயிக்கும் என்று தைரியமாகக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்” என்று, டெல்லியின் பா.ஜ.க. தலைமையகத்தில் வியாழக்கிழமையன்று வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்திய மோடி கூறினார். இந்திய பாராளுமன்றத்தின் 543 இடங்களில் உத்தரப் பிரதேசத்துக்கு 80 இடங்கள் உண்டு என்பதால், மத்தியில் யார் ஆட்சி அமைப்பார்கள் என்பதில் உத்தரப் பிரதேசத் தின் தாக்கம் இருக்கும் என் பதே உண்மை. ஆகவே, அவ ரது நம்பிக்கை நியாயமானது.

ஒரு காலகட்டத்தில் காங்கிரஸின் கோட்டை என்று புகழப்பட்ட உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கடும் சரிவை சந்தித்திருக் கிறது. இந்தத் தோல்வியைக் கருத்தில் கொண்டால்



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

வது நேரு பரம்பரை விசிறிகள், காங்கிரஸின் தலைமையை மாற்றுவதா, அவர்களின் கொள்கைகளை மாற்றுவதா என்று தீவிரமாக யோசிக்க வேண்டும். சோனியா - ராகுல் - பிரியங்காவின் பிடி காங்கிரஸுக்கு ஆபத்தாகவே இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, உத்தரப் பிரதேசத் தில் காங்கிரஸின் பிரச்சாரத்தை முன்னின்று நடத்திய பிரியங்கா, 204 பேரணிகளை நடத்தினார். இது, யோகி ஆதித்யநாத் நடத்திய 209 பேரணிகளை கிட்டத்தட்ட நெருங்கினாலும், தேர்தல் முடிவுகள் காங்கிரஸுக்கு சாதகமாக இல்லை.

மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான குலாம் நபி ஆசாத், “இந்த சூழ்நிலை அபாயகரமானது” என்றார். இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தியுடன் நட்பு பாராட்டியதாக சொல்லப்படும் ஆசாத், இப்போது சோனியா தலைமையில் காங்கிரஸ் இயங்கக்கூடாது என்று செயல்பட்டுவரும் காங்கிரஸ் மூத்த தலைவர்களைக் கொண்ட ஜி-23 அமைப்பிற்குத் தலைமையேற்று வருகிறார். “காங்கிரஸ் இவ்வாறு இறப்பதை எங்களால் பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்ல. பஞ்சாப்பில் என்ன நடந்தது என்று பாருங்கள். திடீரென்று எங்கிருந்தோ வந்த ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றுவிட்டது, காங்கிரஸ் மோசமாகத் தோல்வி அடைந்தது, முதல்வரும் மாநில காங்கிரஸ் தலைவரும்கூட தோல்வி அடைந்தார்கள்” என்கிறார்.

அன்னா ஹசாரேவின் 2011 ஊழல் எதிர்ப்பு இயக்க நண்பர்களோடு சேர்ந்து, அரவிந்த் கெஜ்ரிவால் நவம்பர் 2012இல் ஆம் ஆத்மி கட்சியைத் துவக்கியபோது, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய முக்கிய தேசியக் கட்சிகளுக்கு ஓர் ஊழலற்ற மாற்றுக்கட்சியாக ஆம் ஆத்மி விளங்கும் என்று கெஜ்ரிவால் கூறினார். இப்போது இரண்டாம் இடத்திலிருந்து காங்கிரஸை ஓரம் கட்டும் தன்னுடைய நோக்கத்தில் அவர் வெற்றியை நெருங்கிவிட்டார் என்றே சொல்லவேண்டும், ஏனென்றால், தன்னுடைய சொந்த மாநிலமல்லாத ஒரு மாநிலத்தின் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பிடித்த ஒரே பிராந்தியக் கட்சி என்ற பெருமை ஆம் ஆத்மிக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு உள்ளிட்ட பல பிற மாநிலங்களிலும் அலுவலகங்களைக் கொண்ட ஆம் ஆத்மி கட்சி, இப்போது காங்கிரஸுக்கு மாற்றுக்கட்சி என்று தன்னை அறிவித்துக்கொள்கிறது.

## ஸ்டாலினின் உதவியைக் கோரவேண்டும் ஆனால், டெல்லியை பகைத்துக்கொள்ளக்கூடாது

கெஜ்ரிவாலின் நண்பரான தமிழக முதல்வர் ஸ்டாலின், பெப்ரவரி 2020இல் கெஜ்ரிவால் இரண்டாவது முறையாக டெல்லியில் ஆட்சியைப் பிடித்த போது அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் முந்திக்கொண் டார். 2019ஆம் ஆண்டு நடக்க இருந்த பாராளுமன்றத் தேர்தல் களில் பாஜகவுக்கு எதிரான எதிர் கட்சிகளின் கூட்டு செயல்பாட்டுக்காக 2018ஆம் ஆண்டு டெல்லியில் ஒரு பெரிய கூட்டம் நடந்தபோது, அதில் கெஜ்ரிவாலைக் கலந்துகொள்ள வைத்த திலும் ஸ்டாலினின் பங்கு முக்கியமானது. காங்கிரஸுக்கு எதிரான மனநிலை யைக் கைவிட்டு, பா.ஜ.கவைத் தோற் கடிக்கும் ஒற்றை நோக்கத்துடன், இரண்டாவது முறை நரேந்திர மோடி ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காக பிற எதிர்க்கட்சிகளோடு இணைந்து செயல்படவேண்டும் என்று ஸ்டாலின் கெஜ்ரிவாலிடம் கேட்டுக்கொண்டார்.

ஏனோ தெரியவில்லை, ஸ்டாலின் ராகுல் காந்தியிடம் மிகவும் அன்பும் மரியாதையும் காட்டி வருகிறார். எதிர் கட்சிகளின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்மொழிந்துததும் அவரே. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் இதற்கு உடனே எதிர்ப்பு தெரிவித்தனர். இப்போது, பாஜக அல்லாத பிற கட்சிகளின் மாநில முதல்வர்களை ஒருங்கிணைத்து, மோடிக்கு எதிராக செயல்பட வைப்பதில் ஸ்டாலின் முனைப்பு காட்டி வருகிறார். மாநிலங்களுக்கு வரவேண்டிய அதிகாரம் மற்றும் நிதி ஒதுக்கீடு தரப்படுவதில்லை என்று பிரதமர்மீது குற்றம் சாட்டுகிறார். முன்னாள் ஐ.பி. எஸ் அதிகாரியான அண்ணாமலையை தமிழக பாஜகவுக்குத் தலைவராக ஆக்கி யதன் மூலம், திராவிட மாநிலத்தில் காவிக் கட்சியின் அதிகாரத்தைப் பரப்புவதற்கும், 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஸ்டாலினிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் பா.ஜ.க. முயற்சி செய்து வருகிறது.



பாக் ஜலசந்திக்கு அப்பால் இருக்கும் நண்பர்களிடம் உதவிக்கரம் நீட்டும்போது, கவனமாக இருக்கவேண்டும் என்பதை என்னுடைய ஈழ அரசியல் நண்பர்களிடம் கூறுவதற்காகவே இவற்றையெல்லாம் விளக்கினேன். அரசியல் உரிமைகளுக்கான போராட் டத்தை வலுப்படுத்துவதற்கு ஸ்டாலின் உதவியைக் கோரவேண்டும், ஆனால் அதேநேரம், டெல்லியை நாம் பகைத்துக்கொள்ளக் கூடாது, அதில் கவனமாக இருக்கவேண்டும். எதிர்கட்சிகள் சிதறிப் போயிருக்கும் சூழலில், அடுத்த சில ஆண்டுகளுக்கு பா.ஜகவும் நரேந்திர மோடியுமே மத்தியில் ஆட்சியாளர்களாகத் தொடர்வார்கள் என்பதே அப்பட்டமான உண்மை.

இந்த அழகான ஞாயிற்றுக்கிழமை காலையில் உங்களது காலை உணவைத் தொடர்வதற்கு முன்பாக, மார்ச் 15ஆம் திகதியன்று தமிழ்க் கட்சிகளை ஜனாதிபதி கோட்டாபய பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பது பற்றிப் பேச விரும்புகிறேன். தங்களது நிலங்களை சிங்களவர்கள் ஆக்கிரமிப்பது, மனித உரிமை மீறல்கள், பாதுகாப்பின்மை போன்ற தமிழர்களின் பிரச்னையைப் பற்றிப் பேசுவதற்கான கோரிக்கைகளை இப்போதுவரை அவர் நிராகரித்திருக்கிறார். ஆனால், தன்னுடைய சொந்தக் காரணங்களுக்காக அவர் இப்போது அழைப்பு விடுத்திருக்கிறார். தமிழர்களின் பிரச்னையைப்பற்றிப் பேச வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருப்பதால், இந்தியாவை சமாதானப்படுத்துவதற்காகவும், அதன்மூலம் கொழும்பின் பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காக உதவும்படி டெல்லியிடம் கோருவதற்காகவும் இருக்கக்கூடும்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார் என்றும், ஆனால் அதற்கு முன்பாகத் தங்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான நியாயமான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்றும், அப்போதுதான் எங்களுக்கு வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த மக்களுக்கு நம்பிக்கை தொடரும் என்றும் தமிழ்க்கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கூறுவது சரியாகவும் அரசியல் ரீதியாக நியாயமாகவும் இருக்கும். என்னுடைய அன்பார்ந்த ‘ஈழநாடு’ வாசகர்கள், வரும் நாட்களில் இதுபற்றிய பல செய்திகளைக் கேள்விப்படுவார்கள் என்று நம்புகிறேன்.

வணக்கம், மீண்டும் சந்திப்போம்.

# மொட்டு கட்சிக்குள் பெரும் வெடிப்பு; ஜனாதிபதியின் அடுத்த நகர்வு என்ன?

அகிலன்







ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் நெருக்கடியின் உச்சத்துக்குச் சென்று விட்டார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்காமையால் ஜெனீவாவில் நெக்கடி, ஐரோப்பிய ஒன்றிய அழுத்தம் என்பன ஒரு புறம். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த உபாயமும் இல்லாமையால் அதிகரிக்கும் மக்களின் அதிருப்தி மறுபுறம். இரு அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டமையால் சீற்மடைந்திருக்கும் பங்காளிக் கட்சிகளின் நெருக்குதல் மறுபுறம் என அரசு தடுமாறிக்கொண்டிருக்கின்றது. பாராளு மன்றத்தில் அரசுக்கான பெரும்பான்மை கேள்விக் குறியாகலாம் என்ற நிலையும் உள்ளது. இவ்வளவு நெருக்கடிகளையும் ராஜபக்ஷக்கள் எப்படிச் சமாளிக்கப்போகின்றார்கள்?

அமைச்சர் பதவியிலிருந்து விமல் வீரவன்ச வையும், உதய கம்மன்பிலவையும் துக்கி எறிவ தென்பது நெருக்கடிகளை உருவாக்கக்கூடிய முடிவு என்பது ராஜபக்ஷக்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. பொருளாதாரப் பிரச்சினையால் நாட்டு மக்கள் அனைவருமே அதிருப்தியின் உச்சத்தில் இருக்கின்றார்கள். ஆளும் கூட்டணியில் இருக்கும் பங்காளிக் கட்சிகள் அனைத்துமே ராஜபக்ஷக் களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கிக்கொண்டி ருக்கின்றன. மொட்டுக் கட்சிக்குள்ளேயே அதிருப் தியாளர் குழு ஒன்று உருவாகியிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலையில், சிங்கள - பௌத்த மக்களின் அபிமானத்தைப் பெற்ற இருவரைத் தூ க்கி எறிவது அரசின் இருப்பையே ஆட்டங்காணச் செய்யக்கூடிய ஒன்றாக மாறலாம் என்பது ராஜ பக்ஷக்களுக்கு தெரியாததல்ல. ஆனால், அவ் வாறு செய்வதற்கு ராஜபக்ஷக்கள் எவ்வாறு துணிந்தார்கள்?

ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் அவர் கள் பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட் டார்கள். குறிப்பாக மொட்டு கட்சியின் ஸ்தாப கரும், அதன் மூளையாக வர்ணிக்கப்படுபவருமான பஸில் ராஜபக்ஷவை இலக்குவைத்து விமல் வீர வன்ச தொடர்ச்சியாகத் தாக்குவதைப் பொறுத் துக்கொண்டிருப்பது என்பது ராஜபக்ஷக்களைப் பலவீனமானவர்களாக காட்டிவிடும். அத்துடன் விமல் சொல்வது அனைத்தும் உண்மை என்ப தையும் அவர்களே ஏற்றுக்கொள்வது போலாகி விடும். மக்களும் அதனை நம்பத் தொடங்கி விடுவார்கள். ராஜபக்ஷக்களின் அதிரடிக்கு இது முதலாவது காரணம்.

அரசுக்கு எதிராக அணி திரளக்கூடியவர்க ளுக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்கும் எனவும் அவர்கள் கருதுதியிருக்கலாம்.

இந்தப் பின்னணியில்தான் கடந்த வாரம் அதிரடியாக விமல் வீரவன்சவும், உதய கம்மன்பில வும் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கப்பட்டனர். பஸில் கொடுத்த அழுத்தத்தையடுத்தே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த அதிரடி முடிவை எடுத்தார். இருந்த போதிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த முடிவுடன் ஒத்துப்போகவில்லை எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் ஒரு கதை உள்ளது. மஹிந்தவின் மீளெழுச்சிக்கு துணையாக இருந்தவர்கள் இந்த இருவரும்தான்.

"நாடு எதிர்நோக்கி இருக்கும் நெருக்கடி நிலைமையில் இருந்து அதனை எவ்வாறு மீட்பது" என்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் அடங்கிய தேசிய கொள்கை பிரகடனம் மார்ச் 2 ஆம் திகதி வெளி யிட்டு வைக்கப்பட்டது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளில் 11 கட்சிகள் ஒன்றாக இணைந்து இந்தப் பிரகடனத்தை வெளியிட்டன. அரசுக் குள் இருந்துகொண்டே இவ்வாறான பிரகடனம் ஒன்றை வெளியிடுவதென்பது அரசுக்கு சவாலான ஒன்று என்பது ராஜபக்ஷக்களின் சீற்றத்துக்கு முதலாவது காரணம்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டார். அத்துடன் அமைச்சர் களான திஸ்ஸ விதாரண வாசுதேவ நாணயக்கார உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர். அதுமட்டமன்றி தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல். எம். அத்தாவுல்லாவும் பங்கேற்றிருந்தார்.

ஜயவர்தனபுர கோட்டை மொஹான் இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச் சர் விமல் வீரவன்ச உரையாற்றுகையில் பஸில் ராஜபக் ஷவை இலக்கு வைத்து கடுமையாகத் தாக்கினார். ராஜபக்ஷக்களின் சீற்றத்துக்கு பிரதான காரணம் இது தான். இதனையடுத்தே அடுத்த நாள் அவரையும் உதய கம்பன்பிலவையும் பதவி நீக்கும் தீர்மானம் அதிரடியாக எடுக்கப்பட்டது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இதனை வன்மை யாகக் கண்டித்திருப்பதுடன், அமைச்சரவைக் கூட்டங் களில் தான் பங்கேற்கப்போவதில்லை எனவும் அறிவித் திருக்கின்றார். மற்றொரு இராஜாங்க அமைச்சர் இராஜி னாமா செய்திருக்கின்றார்.

மொட்டுக் கூட்டணியில் ராஜபக்ஷ சகோதரர்கள் பிரதானமாக இருந்தாலும், அதில் 11 கட்சிகள் பங்காளி களாக உள்ளன. பங்காளிக் கட்சிகளை ராஜபக்ஷக்கள் எவ்வாறு நடத்துவார்கள் என்பதற்கு இரு அமைச்சர்கள் தூக்கப்பட்டது சிறந்த உதாரணம். ஏனைய கட்சிகளுக் கும் இது எச்சரிக்கையாக இருக்கும் என ராஜபக்ஷக்கள் நினைத்தாலும், அதில் அவர்களுக்கும் ஆபத்து உள்ளது.

மொட்டுவில் உள்ள 15 வரையிலான பின்வரிசை உறுப்பினர்கள் அதிருப்தியடைந்தவர்களாக உள்ளனர் என ஒரு தகவல் உள்ளது. பங்காளிக் கட்சி கள் வெளியேற முற்பட்டால் இவர்களும் வெளியேறலாம். இது தொடர்பில் இரகசியப் பேச்சுக்களும் நடந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அரச புலனாய்வுப் பிரிவு இது குறித்து எச்சரிக்கை விடுத்த தையடுத்தே மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரப் பேச்சுக்குச் சென்றிருந்தார் எனச் சொல்லப்படுகிறது,

பங்காளிக் கட்சிகளில் 31 பாராளு மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இதனை விட, மொட்டுவின் பின்வரிசை உறுப்பி னர்கள் 15 பேர் அதிருப்தியாளர்களாக இருக்கின்றார்கள். நிலைமை மோசமா னால் இந்த 46 பேரும் அரசிலிருந்து வெளியேறினால் அரசு ஆட்டம்காணும்.

மைத்திரியுடன் பேசி அவரை சமாதா னப்படுத்துவதன் மூலம் இந்த ஆபத்தை தவிர்க்கலாம் என ராஜபக்ஷக்கள் முன்னெடுத்த நகர்வுதான் கடந்த செவ்வாய்கிழமை இரவு ஜனாதிபதி செயலகத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்திய பேச்சு. மைத்திரி தலைமையில் 14 உறுப்பினர்கள் உள்ள னர். மைத்திரியை சமாளித்தால் வீரவன்ச குழுவுக்கு அஞ்சத் தேவையில்லை என்பது ராஜபக்ஷக்களின் கணிப்பு!

மைத்திரியை இலகுவாக சமாளிக்க லாம் என ராஜபக்சக்கள் கணக்குப் போடுவதற்கு பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக - உயித்த ஞாயிறு தாக்கு தலுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர் மைத்திரிதான் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சொல்லிவருகின்றார். வத் திக்கான், ஜெனிவா எனவும் நீதி கேட்டு அவர் யாத்திரையை ஆரம்பித்துவிட் டார். ஆக, மைத்திரியின் தலைக்கு மேல் கத்தி ஒன்று தொங்கிக்கொண்டுள்ளது. அதனால், ராஜபக்ஷக்களுடன் பகையை வளர்க்க அவர் விரும்பமாட்டார்.

மறுபுறத்தில் இன்றைய நெருக்கடி யிலிருந்து ராஜபக்ஷக்களைப் பாது காக்கக்கூடியவராக மைத்திரிதான் உள்ளார். அதனால்தான் மைத்திரியின் கோரிக்கையை ஏற்று சர்வகட்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கின்றார். மைத் திரியை டீல் பண்ணுவது இலகுவானது என ராஜபக்ஷக்கள் மதிப்பிடுகின்றார்கள். பங்காளின் கட்சிகளின் சீற்றத்தினால் வரக்கூடிய ஆபத்தை சமாளிக்க மைத் திரியை கைகளுக்குள் போட்டுக்கொண் டால் போதுமென்ற நிலையில்தான் அவருடனான பேச்சுக்களுக்கு அவர்கள் இணங்கினார்கள்.

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சி கள் நடைபெறுவதாகவும் ஒரு செய்தி கசியவிடப்பட் டது. ரணில் அதனை மறுத்தார். "நீங்கள் வெளியேறினா லும் பிரச்சினையில்லை நாங்கள் தேசிய அரசாங்கத்தை அமைத்து நிலைமைகளை சமாளிப்போம்" என பங்கா ளிக் கட்சிகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இந்தச் செய்தி கசியவிடப்பட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்தும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் உள்ளது.

எது எப்படியிருந்தாலும் மொட்டு கூட்டணியில் பெரும் வெடிப்பு ஒன்று ஏற்பட்டுவிட்டது. அதனை ஒட்டுப்போட்டு அடைப்பது இனி கடினமானதாகவே இருக்கும் என்பது மட்டும் உண்மை. அரசின் மோசமான பொருளாதாரக் கொள்கையால் உருவாகியுள்ள நெருக் கடி - வாழ்வாதார பிரச்சினைகளால் மக்கள் விரக்தியின் உச்சத்துக்கே சென்றுவிட்டார்கள். இந்த நிலையில், அரசைப் பாதுகாத்துக்கொண்டிருப்பதென்பது தமது எதிர்கால அரசியலுக்கே ஆபத்தானதாகலாம் என பங்காளிக் கட்சிகள் கருதும் நிலையும் உருவாகிவிட்டது. ■

# ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்!

**ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே, அடுத்த களம் உக்ரைன்தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.**



தி.முருகன்

ஒரு போர்க்களத்தில் யாரும் கவனிக்காத பகுதியில்தான் முக்கியமான சம்பவங்கள் நிகழும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் இரண்டு வாரங்களைத் தாண்டிய நிலையில், பலரும் கவனிக்க மறந்த மூன்று விஷயங்கள் முக்கியமானவை.

▸▸ இரண்டாம் உலகப் போரில் பல நாடுகளின் அழிவுக்குக் காரணமாக இருந்தது ஜெர்மனி. அதன்பின் ஆயுதங்களுக்குச் செலவழிக்கவே கூச்சப்படுகிற நாடாக அது இருந்தது. முதல்முறையாக இப்போது ரஷ்யாவைப் பார்த்து பயந்து இராணுவ பட்ஜெட்டுக்கு 8,35,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

▸▸ சீனா வரும் ஆண்டுக்கான இராணுவ பட்ஜெட்டைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. 17,73,000 கோடி ரூபாய் என்பது இதுவரை இல்லாத செலவு.

▸▸ உலகின் மிகப்பெரிய ஆயுத நிறுவனங்கள் அமெரிக்காவின் ரேத்தியான் மற்றும் லாக்ஹீட் மார்ட்டின். ஹஉக்ரைன் பிரச்னையால் நமக்கு நல்ல வியாபாரம் கிடைத்துள்ளது” என்று இந்த இரு நிறுவனங்களும் வெளிப்படையாகத் தங்கள் முதலீட்டாளர்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளன. இரண்டுமே ஏவுகணைகளை அதிகம் தயாரிக்கும் நிறுவனங்கள். பணவீக்கம் காரணமாக அமெரிக்காவின் பல ஆயுத நிறுவனங்களின் பங்குகள் சரிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. உக்ரைன் போர் ஆரம்பித்த நாளிலிருந்து அவற்றின் மதிப்பு உயர்ந்துவருகிறது.

ஒரு போரைப் பேரழிவாகவும் உயிரிழப்பாகவும் எளிய மக்கள் பார்த்துப் பதைபதைக்கின்றனர். கௌரவப் பிரச்னையாகவும், சண்டையில் ஏதோ ஒரு பக்கம் நிற்க வேண்டிய நெருக்கடி நிலையாகவும் தேசத் தலைவர்கள் கருதித் தூக்கம் தொலைக்கின்றனர். ஆயுத வியாபாரிகளோ, தங்கள் வியாபாரம் சூடு பிடிக்கும் என்று உற்சாகம் அடைகின்றனர்.

மரணத்தையும் அழிவையும் வைத்தே ஆயுத வியாபாரம் நடக்கிறது. உலகின் பெரிய நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் எல்லா ஆயுதங்களும் நன்றாக விற்க வேண்டும் என்றால், அவர்களுக்கு ஒரு போர் தேவை. ஆப்கானிஸ்தானை மையமாக வைத்து தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய போர், ஈராக், சிரியா என்று பல நாடுகளுக்குப் பரவி ஆயுத நிறுவனங்களை வாழ வைத்தது. ஆப்கன் இப்போது தாலிபன் கைகளுக்குப் போய்விட்டது. ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு காணாமல்போய்விட்டது. ஆப்பிரிக்க தேசங்களில் நிகழும் உள்நாட்டுப் போர்களால் ஆயுத வியாபாரம் பெரிதாக நடப்பதில்லை.

இந்த அமைதியைக் குலைத்து ஒரு பெரிய போர் நடந்தால்தான் ஆயுதங்களுக்குத் தேவை ஏற்படும். புதிய ஆயுதங்களைப் பரிசோதனை செய்து பார்க்கவும், யார் உருவாக்கிய ஆயுதங்கள் வலிமையானவை என்பதை நிரூபிக்கவும் போரே சரியான வழி.

ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே, அடுத்த களம் உக்ரைன்தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டே உக்ரைனுக்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆயுதங்களை விற்க ஒப்புதல் அளித்தார், அப்போதைய ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப். ஹஇது சமாதான முயற்சிகளைச் சிக்கலாக்கி, ரஷ்ய ஜனாதிபதி புடினை போர்முனைக்குக் கொண்டுவந்து நிறுத்தும்” என்று அப்போதே பலர் எச்சரித்தனர். ட்ரம்ப் போய் ஜோ பைடன் வந்தபிறகும் இது மாறவில்லை. அமெரிக்க ஏவுகணைகள் அடுக்கடுக்காகப் போய் அங்கே இறங்கியதைப் பார்த்து வெகுண்டார் புடின். விளைவாகப் போர் வந்திருக்கிறது.

உலகின் ஆயுத சந்தையை கட்டுப்படுத்தும் முதுல் 5 நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ். உலக நாடுகள் பயன்படுத்தும் 75.9 சதவிகித ஆயுதங்களை இவையே வழங்குகின்றன. இஸ்ரேல், இத்தாலி, தென் கொரியா, ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகியவை அடுத்த இடங்களில் இருக்கும் ஐந்து நாடுகள். இவை 14.4 சதவிகித ஆயுதங்களை வழங்கின்றன.

இவற்றில் குறிப்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் மட்டுமே 57 சதவிகித ஆயுத சந்தையை வசப்படுத்தி வைத்துள்ளன. உலகின் முதல் 10 ஆயுத நிறுவனங்களில் அமெரிக்காவில் மட்டுமே ஐந்து உள்ளன. உலகின் பெரிய ஆயுத நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின், டாங்கிகளை அழிக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்குக் கொடுத்திருக்கிறது. பிரிட்டனில் இருக்கும் சாப் நிறுவனம், டாங்கிகளை அழிக்கும் ராக்கெட் லாஞ்சர்களைக் கொடுத்திருக்கிறது. ஜெர்மனி, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை விற்றிருக்கின்றன. வரலாற்றில் முதல்முறையாக ஐரோப்பிய யூனியன் தன் செலவில் ஆயுதங்களை வாங்கி உக்ரைனுக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளது. இயற்கைச் சீற்றங்களின்போது உதவி செய்வதற்காகத் தன்னார்வலர்களை அழைப்பது போல, தங்களுக்காகப் போர் புரிய தன்னார்வலர்களை அழைத்திருக்கிறது உக்ரைன். ஆயுதங்களின் வாசமே அறியாத பலர் போர்க்களத்தில் இப் போது ஆயுதமேந்தி நிற்கிறார்கள். மொத்தத்தில் ஆயுத வியாபாரம் சூடுபிடித்துவிட்டது.

இந்தச் சூழலில் சாமர்த்தியமாக இன்னொரு விஷயத்தையும் செய்ய நினைக்கிறது அமெரிக்கா. ஒட்டுமொத்தமாக ரஷ்யாவின் ஆயுத வியாபாரத்தை முடக்கிவிட்டு, அதைத் தன்வசப்படுத்தும் முயற்சியே அது. போர் விமானங்கள், கவச வாகனங்கள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், எலெக்ட்ரானிக் போர் அமைப்புகள், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் போன்றவற்றைச் செய்யும் 22 ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்திருக்கிறது. “இனி புதிதாக ஆயுத விற்பனை செய்வதோ, ஏற்கெனவே விற்ற ஆயுதங்களுக்குப் பராமரிப்புப் பணி செய்வதோ இனி இந்த நிறுவனங்களுக்குக் கடினமாக இருக்கும்” என்கிறது அமெரிக்கா.

ரஷ்யாவுக்குப் பெரும் வருமானத்தைத் தருவது ஆயுத ஏற்றுமதிதான். அவர்கள் பெரிதாக மேற்கத்தியத் தொழில்நுட்பங்களை நம்பி இல்லை. அதனால் இந்தத் தடை தங்களை ஒன்றும் செய்யாது என்கிறார்கள் அவர்கள். தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் அளவுக்கு வலிமையான போர் வாகனங்களைச் செய்வதற்கான மெட்டலர்ஜி நுட்பம், சென்சார் மற்றும் ராடார் தொழில்நுட்பம் போன்றவற்றில் அமெரிக்காவைவிட ரஷ்யா சிறப்பாக உள்ளது. காஷ்மீரின் உறைபனிச் சூழலிலும், அரேபியாவின் தகிக்கும் பாலைவனத்திலும் தடையில்லாமல் இயங்கும். விலையும் குறைவு. அதனாலேயே ரஷ்யப் போர்க்கருவிகள் பலராலும் விரும்பப்படுகின்றன. இந்தியா, சீனா, எகிப்து, அல்ஜீரியா, வியட்நாம், ஈரான், லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை ரஷ்ய ஆயுதங்களை அதிகம் பயன்படுத்துகின்றன.

ரஷ்யாவின் S-400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை இந்தியா வாங்கியுள்ளது. அடுத்து ஏ.கே 203 துப்பாக்கிகளை ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து இந்தியாவில் தயாரிக்கவுள்ளன. உலகின் மிக வேகமான ஏவுகணையாகக் கருதப்படும் இந்தியாவின் பிரமோஸ் ஏவுகணையை மேம்படுத்த ரஷ்யா உதவி செய்யவுள்ளது. அமெரிக்காவின் தடை இந்தத் திட்டங்களை என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை.

இரண்டாம் உலகப்போர் நடந்த நேரத்தில்தான் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெரிய ஆயுத நிறுவனங்கள் உருவாகின. போர் முடிந்ததும் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், “எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் பெரும் ஆயுத நிறுவனங்களை வளர்த்துவிட்டோம். அவை அகோரப் பசியுடன் இயங்குகின்றன. முடிவில்லாத போர்களே தங்களுக்குக் கொழுத்த லாபம் கொடுக்கும் என்று அவை நினைக்கின்றன. அவற்றின் அதிகார வேட்டை, ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக மாறும்” என்று எச்சரித்தார்.

அது நிஜம் என்பதை ஒவ்வொரு போரும் நிரூபிக்கிறது.



# மலச் சிக்கலுக்கு தீர்வு என்ன?

**எந்த வேளையில் மலம் வெளியேறுகிறதோ அதே வேளையில் தினமும் மலம் போனால் போதும். என்றாலும் காலையில் மலம் கழித்து விட்டால் மனதளவிலும் உடலளவிலும் உறுப்புகள் இயல்பாகச் செயல்படத் தயாராகி விடும் என்பதையும் மறுக்கமுடியாது.**

கு.கணேசன்

காலையில் எழுந்ததும் குடல் காலியாகாவிட்டால், பலருக்கு அந்த நாள் முழுவதும் எந்த வேலையும் ஓடாது. எனவே வெறும் வயிற்றில் லிட்டர் கணக்கில் தண்ணீர் குடிப்பார்கள். சூடாக கோப்பி, தேநீர் அருந்துவார்கள். சிகரெட் புகைப்பார்கள். இன்னும் சிலர் எப்படியாவது மலத்தை வெளியேற்றியே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு கழிப்பறையில் உட்கார்ந்துகொண்டு மூச்சை இழுத்துப் பிடித்து முக்குவார்கள்.

இந்தப் பகீரதப் பிரயத்தனங்கள் எதுவும் தேவை இல்லை. தினமும் காலையில் எழுந்ததும் மலம் கழித்தே ஆக வேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை. மலம் காலையில் வரலாம். மாலையில் வரலாம். இரவிலும் வரலாம். ஒரு நாளைக்கு ஒருமுறை வரலாம். இருமுறை வரலாம். எதுவும் தப்பில்லை. எந்த வேளையில் மலம் வெளியேறுகிறதோ அதே வேளையில் தினமும் மலம் போனால் போதும். என்றாலும் காலையில் மலம் கழித்துவிட்டால் மனதளவிலும் உடலளவிலும் உறுப்புகள் இயல்பாகச் செயல்படத் தயாராகிவிடும் என்பதையும் மறுக்க முடியாது.

**எது மலச்சிக்கல்?**

வழக்கத்திற்கு மாறாக மலம் வெளியேறாமல் இருப்பது, மலம் இறுகிப் போவது, மலம் கழிப்பதில் சிக்கல், மலம் முழுவதுமாகப் போகவில்லை என்கிற உணர்வு, மலம் கொஞ்சம்கூட போகாமல் ஆசனவாயை அடைத்துக் கொள்வது போன்ற நிலைமைகளை “மலச்சிக்கல்“ என்று அழைக்கிறோம். மருத்துவ மொழியில் சொன்னால் ஒருவருக்கு வாரத்துக்கு மூன்று முறைக்குக் குறைவாக மலம்போவது “மலச்சிக்கல்“.

**அடிப்படைக் காரணம்**

நாம் சாப்பிட்ட உணவு இரைப்பை, முன் சிறுகுடல், சிறுகுடல் என்று பயணம் செய்து தன்னிடமிருந்த சத்துகளையெல்லாம் இரத்தத்துக்குக் கொடுத்துவிட்டு, ஒரு சக்கை உணவாகப் பெருங்குடலுக்கு வரும். அதில் 80 % தண்ணீர்தான் இருக்கும். இந்தத் தண்ணீரில் பெரும்பகுதியை உறிஞ்சி எடுத்துக்கொண்டு சுமார் 250 மி.லி. அளவில் மலத்தில் வெளியேற்ற வேண்டியது பெருங்குடலின் வேலை. சமயங்களில் அது தண்ணீர் முழுவதையும் உறிஞ்சிக் கொள்ளும். இதனால் மலம் கட்டியாகி மலச்சிக்கலை ஏற்படுத்தும். இப்படித் தண்ணீர் அதிகமாக உறிஞ்சப்படுவதை ஊக்கப்படுத்த பல காரணிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர்த்தால் மலச்சிக்கல் ஏற்படாது. அந்தக் காரணிகள் என்ன?

**தூண்டும் காரணிகள்**

மலச்சிக்கலுக்கு முக்கியக் காரணி நம் உணவு முறை. கொழுப்பு மிகுந்த மேற்கத்திய உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவது. பால் சார்ந்த உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவது, பிஸ்ஸா, பேர்கர், நூடுல்ஸ் போன்ற விரைவு உணவுகளையும் பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் அதிக அளவில் சாப்பிடுவது. நார்ச்சத்துள்ள உணவு வகைகளைக் குறைவாகச் சாப்பிடுவது தண்ணீர் குறைவாகக் குடிப்பது, காய்கறி, கீரை, பழங்களைச் சாப்பிடாதது போன்ற தவறான உணவுப் பழக்கங்கள்தான் பலருக்கும் மலச்சிக்கலை உண்டாக்குகின்றன.

அடுத்து, தினமும் மலம் கழிக்கும் முறை சரியாக அமையாவிட்டால் அது நாளடைவில் மலச்சிக்கலுக்குப் பாதை அமைக்கும். குறிப்பாக, மலம் வருகின்ற உணர்வு உண்டாகும்போது கழிப்பறை அருகில் இல்லாதது, முக்கிய வேலையில் ஈடுபட்டிருப்பது, பயணத்தில் இருப்பது போன்ற காரணங்களால் மலம் கழிப்பதைத் தவிர்த்தால் காலப்போக்கில் பெருங்குடலில் உள்ள உணர்வு நரம்புகள் செயலிழந்து மலத்தை வெளியேற்ற வேண்டும் என்கிற உணர்வைத் தெரிவிக்காது. இதன் காரணமாக மலச்சிக்கல் ஏற்படும்.

பொதுவாகவே வயது ஆக ஆக மலம் போவது குறையும். முதுமையில் உணவு முறை மாறுவது, உடற்பயிற்சி குறைவது, தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிக்காதது மலச்சிக்கலுக்கு வழிவிடும். மூட்டுவலி, இடுப்புவலி உள்ள முதியவர்கள் அடிக்கடி மலம் கழிப்பதைத் தவிர்ப்பதால் அவர்களுக்கு மலச்சிக்கல் வருகிறது. கர்ப்பக் காலத்தில் மசக்கை காரணமாக தண்ணீர் அதிகமாகக் குடிக்காமல் இருப்பது, கருவில் வளரும் குழந்தை தாயின் குடலை அழுத்துவது, ஹார்மோன் மாற்றம், ஆசனவாய் சுருங்குதல் ஆகிய காரணங்களால் கர்ப்பிணிகளுக்குத் தற்காலிகமாக மலச்சிக்கல் உண்டாகலாம்.

வேறு உடல் பிரச்சினைகளுக்காக நாம் சாப்பிடும் மருந்துகளும் மலச்சிக்கலுக்குக் காரணமாகலாம். எடுத்துக் காட்டாக, இரைப்பைப் புண்ணுக்குச் சாப்பிடப்படும். ‘அலுமனியம்’, ‘கல்சியம்’ கலந்துள்ள மருந்துகள், இரும்புச்சத்து மாத்திரைகள், வயிற்று வலி மாத்திரைகள், வலிப்பு மருந்துகள், மன அழுத்த மருந்துகள், ‘ஓப்பியம்’ கலந்த வலி நிவாரணிகள் போன்றவை மலச்சிக்கலை ஏற்படுத்துகின்ற மருந்துகளில் முக்கியமானவை. இன்னொன்று, மலச்சிக்கலைப் போக்குவதற்காக பேதி மாத்திரைகளைச் சாப்பிடுகிறோம். ஆனால், அந்த பேதி மாத்திரைகளை அடிக்கடி சாப்பிட்டாலும் நாளடைவில் மலச்சிக்கல் உண்டாகும்.

காய்ச்சல், வாந்தி, பசிக்குறைவு போன்ற பொதுவான பிரச்சினைகள் ஏற்படும்போதும், வெயிலில் அதிகம் அலையும்போதும் உடலில் நீர்ச்சத்து குறைந்துவிடும். அப்போது மலச்சிக்கல் ஏற்படும். மூலம் நோய், ஆசனவாய் வெடிப்பு, ஆசனவாய் சுருங்குதல், குடல் அடைப்பு, குடலில் கட்டி, பெருங்குடல் புற்றுநோய், ‘டைவர்ட்டிகுலைட்டிஸ்’ எனும் குடல் தடிப்பு நோய், நீரிழிவு நோய், தைராய்டு குறைவாகச் சுரப்பது, பேராதைராய்டு அதிகமாகச் சுரப்பது, குடலிறக்கம், பித்தப்பைக் கற்கள், பார்க்கின் நோய், மூளைத்தண்டுவட நோய்கள், மன அழுத்தம், தூக்கமின்மை ஆகிய பாதிப்புகள் இருக்கும்போது மலச்சிக்கல் ஒரு முக்கியமான அறிகுறியாக வெளிப்படும்.



இளம் பெண்களுக்குப் பெருங்குடல் சுவரில் தளர்ச்சி ஏற்பட்டு ‘இடியோபதிக் டிரான்சிட் கோலன்’ எனும் நோய் வரலாம். அப்போது அவர்களுக்கு மலச்சிக்கல் உண்டாகும். குழந்தைகளுக்குத் தாய்ப்பாலை நிறுத்திவிட்டு செயற்கைப் புட்டிப்பால் தரப்படும்போது மலச்சிக்கல் ஏற்படலாம். கழிப்பறையை எப்படிப் பயன்படுத்துவது என்ற தெரியாத குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் மலச்சிக்கல் வரலாம்.

வயதுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாதது, முதுமையின் காரணமாகவோ அல்லது நோயின் காரணமாகவோ படுக்கையில் நீண்டகாலம் படுத்தே இருப்பது போன்றவையும் மலச்சிக்கலை வரவேற்பதுண்டு.

**எப்போது கவனிக்க வேண்டும்?**

மலச்சிக்கலை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் விட்டால் ஆசனவாயில் விரிசல் ஏற்பட்டு வலி உண்டாகும். அஜீரணம், வாயுத் தொல்லை, வயிற்று உப்புசம், குடலிறக்கம், குடல் அடைப்பு, சிறுநீர் அடைப்பு ஏற்படலாம். எனவே, மலச்சிக்கலுடன் கீழ்க்காணும் அறிகுறிகள் தெரிந்தால் உடனே மருத்துவரிடம் பரிசோதித்துக்கொள்ள வேண்டும்:

- இரண்டு வாரங்களுக்கு மேல் மலச்சிக்கல் பிரச்னை தொடரும்போது.
- மலம் போவதில் சிக்கல் உண்டாகி வயிறு வலிக்கும்போது.
- குமட்டல் மற்றும் வாந்தி வரும் போது.
- மலம் கழிக்கும்போது ஆசனவாய் வலித்தால்.
- மலத்துடன் ரத்தம், சீழ், சளி வெளியேறும்போது.
- உடல் எடை குறையும்போது.
- பென்சில் போல் சிறிய அளவில் மலம் போனால்.
- காய்ச்சல், தலைவலி வாய்க்கசப்பு இருந்தால்.
- மலச்சிக்கலும் வயிற்றுப்போக்கும் மாறி மாறி வருமானால்.
- வயிறு உப்புசம், பசிக்குறைவு இருக்குமானால்.
- சுவாசத்தில் கெட்ட வாசனை வருமானால்.

**என்ன பரிசோதனை?**

மலச்சிக்கலுக்குக் காரணம் தெரிந்து சிகிச்சை பெற்றால் நிரந்தரமாகக் குணப்படுத்தலாம். முழு ரத்தப் பரிசோதனையைச் செய்து பொது ஆரோக்கியம் எப்படி உள்ளது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நீரிழிவு, ரத்தக்கொழுப்பு, தைராய்டு பிரச்னைகளுக்கான பரிசோதனைகளும் அவசியம். என்டோஸ்கோப்பி, கொலனோஸ்கோப்பி போன்ற பரிசோதனைகளும் தேவைப்படும்.

**சிகிச்சை என்ன?**

வயதைப் பொறுத்து, அடிப்படை நோயைப் பொறுத்து, மலச்சிக்கலின் தன்மையைப் பொறுத்து மருந்து தேவைப்படும். ஆகவே, மருத்துவரிடம் ஆலோசனை பெற்று மருந்து சாப்பிடுங்கள். மலச்சிக்கலுக்குச் சுய சிகிச்சை செய்ய வேண்டாம். குறிப்பாக, பேதி மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் சாப்பிடும்போது பெருங்குடலில் உள்ள உணர்வு நரம்புகளை அவை பாதிக்கும்.

**தவிர்ப்பது எப்படி?**

ஆரோக்கியமாக உள்ள ஒருவர் சரியான உணவுமுறையைப் பின்பற்றி, தேவையான அளவுக்குத் தண்ணீர் குடித்து, தினமும் உடற்பயிற்சி செய்து, மலம் கழிக்க வேண்டும் என்கிற உணர்வு வந்ததும் மலம் கழித்துவிடுகிற பழக்கத்தைப் பின்பற்றினாலே போதும், தினமும் சரியான நேரத்தில் மலம் கழிப்பது வழக்கமாகிவிடும். இதன் பலனால், அவருக்கு மலச்சிக்கல் ஏற்படுகிற வாய்ப்பு 90 % குறைந்துவிடும்.

**நார்ச்சத்து உணவுகள் உதவும்!**

நாம் சாப்பிடும் உணவுகளில் நார்ச்சத்து நிறைந்த கோதுமை, கேழ்வரகு, தினை, வரகு, கொள்ளு போன்ற முழுத் தானிய உணவுகள் மலச்சிக்கலைத் தவிர்க்க உதவும். வாழைத்தண்டு, கரட், முள்ளங்கி, கோவா, பாகற்காய், புடலங்காய், அவரைக்காய், போன்ற காய்கறிகள், பொட்டுக்கடலை, கொண்டைக் கடலை, மொச்சை போன்ற பருப்புகள், கீரைகள், கொய்யா, மாதுளை, அத்திப் பழம், பேரிச்சை, மாம்பழம் போன்ற பழங்களில் நார்ச்சத்து அதிகம். இவற்றை தினசரி உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மிளகு, ஓமம், கொத்து மல்லி, மிளகாய் போன்றவற்றிலும் நார்ச்சத்து அதிகம். இவற்றில் தயாரிக்கப்பட்ட உணவுகளை அதிகப்படுத்த வேண்டும்.


எடுத்துக் காட்டு: மிளகு ரசம், கொத்துமல்லிச் சட்னி.

தினமும் 3 லிட்டருக்குக் குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும். பால், மற்றும் பால் சார்ந்த பொருள்கள், கோப்பி, தேநீர், மென்பானங்கள் போன்றவற்றைக் குடிப்பதைக் குறைத்துக் கொண்டு, இளநீர், பழச்சாறுகள் குடிப்பதை அதிகப்படுத்த வேண்டும். இனிப்பு வகைகளையும் கொழுப்பு உணவுகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும். விரைவு உணவுகளை நிறுத்த வேண்டும். இரவில் இரண்டு பழங்கள் சாப்பிட வேண்டும். வாழைப்பழம்தான் சாப்பிட வேண்டும் என்பது இல்லை. பருவத்துக்குத் தகுந்த எந்தப் பழத்தையும் சாப்பிடலாம்.

தினமும் நடைப்பயிற்சி செய்ய வேண்டியது மிக அவசியம். இயலாதவர்கள் வீட்டிலேயே செய்யக் கூடிய உடற்பயிற்சிகளைச் செய்யலாம். புகைபிடிக்கக் கூடாது. மது அருந்தக் கூடாது. தேவை இல்லாமல் வெயிலில் அலையக் கூடாது. மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் எந்த மருந்தையும் அடிக்கடி பயன்படுத்தக்கூடாது. மலம் கழிப்பதற்கென்று போதுமான நேரத்தை ஒதுக்க வேண்டியது மிகவும் முக்கியம். வேலை அவசரம் காரணமாக குறைந்த நேரத்தில் மலம் கழிக்கக் கூடாது. மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு வந்துவிட்டால் அதை அடக்காதீர்கள். காலை நேரமானாலும் சரி, மாலை நேரமானாலும் சரி தினமும் ஒரே நேரத்தில் கழிப்பறைக்குச் செல்லும் வழக்கத்தை உண்டாக்கிக்கொண்டால் அடுத்தடுத்த நாட்களிலும் அதே நேரத்தில் மலம் வெளியேறிவிடும்.

# மென்மை.... வலிமை..... திறமை.... பெண்களுக்கு உதவும் வாழ்க்கைக் கலை!

**பெண்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்னைக்குமான அடிப்படைக் காரணம் என்ன என்பதையும், அதை எப்படி முழுமையாகக் களைவது என்பதையும் ஆசிரியை தன்னுடைய அனுபவம், ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் நிஜவாழ்க்கை உதாரணங்கள் மூலம் அனைத்து அத்தியாயங் களிலும் தெள்ளத்தெளிவாக விளக்கியுள்ளார்.**






பெண்மையின் இயல்பு குணமான மென்மையுடனும் அதே நேரம் வலிமையுடனும் இருக்கும் கலையைச் சொல்லித் தரும் மருத்துவர் ஷாஷா ஷில்கட் என்பவர் எழுதிய புத்தகமான ‘பிட்வீன் க்ரிட் அண்ட் க்ரேஸ்’ எனும் புத்தகத்தை இந்த ஆண்டு மகளிர் தினம் கொண்டாடப்பட்டுள்ள நிலையில் இந்த வாரம் நாம் பார்ப்போம். இந்தப் புத்தகத்தை எழுதியதற்கான காரணத்தை ஆசிரியரே சொல்கிறார்...

“நான் பார்த்த பல பெண்கள் எப்போதுமே தாங்கள் கொண்டிருக்கும் தகுதியில் (திறமை/அறிவு/சாதுரியம் போன்றவை) இருந்து தங்களை சற்றுக் குறைந்தவர்களாகக் காட்டிக் கொண்டும், போட்டியான சூழல்கள் வருவதை/அது போன்ற சூழல்களில் செயல்படுவதை ஒட்டுமொத்தமாகத் தவிர்த்துக் கொண்டுமே வாழ்ந்து வருகிறனர். இது எதனால் தெரியுமா?

சுற்றியிருப்பவர்களிடம் நல்ல பெண்மணி என்ற பெயரெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டிருப்பதாலேயே தான். இப்படி நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுக் கொடுத்து தங்களிடம் இருக்கும் திறன்கள் அனைத்தையுமே வெளியே காட்டாமல் கடைசியில் திறமையேதும் இல்லாத வெற்று ஆள் போன்ற தோற்றத்துடனேயே இருந்துவிடுகின்றனர். இதற்காகவே பெண்கள் தங்களுடைய ஐடியாக்களை வெளியே சொல்லாமலும், வார்த்தைகளை விழுங்கியும், அவர்களிடம் இருக்கும் அநாயாசமான திறமையை மறைத்தும், தலைமைப்பண்பை வெளிக்காட்டாமல் ஒளித்து வைத்துக் கொண்டும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், பெண்கள் மென்மையாகவும் அதே சமயம் வலிமையாகவும் இருக்க முடியும். முதல் நிமிடத்தில் ஒரு புரட்சியை உருவாக்கவும் அடுத்த நிமிடம் அந்தப் புரட்சியில் பங்கெடுத்துக் கொள்வதற் காக நம் பின்னே திரள்பவர்களைப் பரிவுடன் கவனித்துக் கொள்ளவும் பெண்களால் முடியும் என்பதை ஆணி அடித்தாற்போல் நான் கூறவிரும்புகிறேன்.

பெண்களே உங்களுடைய முழுத்திறனையும் இந்த உலகுக்கு பறைசாற்றி உங்களுடைய உண்மையான வாழ்க்கையை வாழ முயலுங்கள். திறமையைப் பறைசாற்ற வேண்டிய வேளையில் ஓடி ஒளிந்துகொள்ளாதீர்கள். கருணை கொண்டவளாகவும் கெட்டவளாகவும் (பணியிட கண்டிப்புகளில்) உங்களால் ஒரே நேரத்தில் இரண்டு ரூபத்தில் செயல்பட முடியும். அதில் தவறேதும் இல்லை என்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை.

**முத்திரைக்கு பயந்து, சுயத்தை இழந்து...**

ஆண்களைப் போலவே பெண்களும் தனித்தன்மை கொண்ட, விருப்பு வெறுப்புகள் கொண்ட, நினைத்ததை செய்து முடிக்கிற நோக்கத்துடன் திகழ்கிற, புதியவற்றைத் தெரிந்து கொண்டு எதிர்கொள்ளும் ஆர்வம் கொண்டவர்களாகவே படைக்கப்பட்டவர்கள். ஆனால், இந்தக் குணாதிசயங்களுடன் செயல்பட அனுமதி மறுக்கப்பட்டவர்கள். ஆண் எதை வேண்டுமென்றாலும் செய்து வெற்றி பெறலாம். பெண்ணோ இந்த உலகம் ஒப்புக்கொள்ளும் அளவுக்கான நியதிகளைப் பின்பற்றி மட்டுமே வெற்றி பெற வேண்டும்.

ஏனென்றால், உலகம் பெண்கள் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இந்த எதிர்பார்ப்புகளைத் தாண்டி ஒரு பெண் நடக்க ஆரம்பித்தால் உடனே இந்த உலகம் இந்தப் பெண் மூடுக்கு தகுந்தாற்போல் நடப்பவள், எளிதில் உணர்ச்சிவயப்படுபவள், எளிதில் புரிந்துகொள்ள முடியாதவள் என்று முத்திரை குத்திவிடுவார்கள். ஏன் இந்த நிலை என்று சிந்தித்துப் பாருங்கள். நம்மில் (பெண்களில்) பெரும்பாலானோர் அடுத்தவர்களுக்கு நம்மைப் பிடிக்க வேண்டும், நம்மை நல்லவர்கள் என அவர்கள் நினைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவதாலேயே தான். பெரும் பாலானோர் இப்படி நல்லவர்களாக இருப்பதற்காக முயற்சி செய்து தங்களுடைய சுயத்தை ஒளித்து வைத்துக்கொண்டு செயல்படும்போது ஒரு சிலர் தங்களுடைய சுயத்தை வெளிக்காட்டும்போது அவர்களுக்கு இது போன்ற முத்திரை குத்தப்படுகிறது. இதனாலேயே ஒரு பெண் உலக எதிர்பார்ப்பு களுக்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிக்கொள்ளாமல் தன்னுடைய சுயத்துடன் செயல்படுவதற்கு நிறையவே ஊக்கம் தேவைப்படுகிறது.

“பணியிட அன்றாட வாழ்க்கை, பதவி உயர்வு ஏன் பணியிடம் அல்லாத தனிமனித வாழ்க்கை என எதிலும் பெண்ணுக்கென்ற ஒரு எழுதப்படாத சட்டத்தைப் பின்பற்றவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கவே செய்கிறது. இதை மீறி நடந்து வெற்றி பெறவேண்டும் எனில், அது கடினமான ஒன்றாக இருக்கிறது. அதற்கென அன்றாடம் தேவைப்படும் தைரியத்தின் அளவும் மிக அதிகமானதாக இருக்கிறது. இதற்கான பாதையில் பயணிக்கும் சின்னச்சின்ன முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றாலே அதற்கு தைரியம் மிக அதிக அளவு தேவைப்படும். அது மட்டுமல்ல, இதைச் செய்யப்போகிறோம் என்ற தீர்க்கமான தீர்மானத்துடன், எச்சரிக்கையுடன், மற்றும் அதீத தைரியத்துடன் இந்தப் பாதையில் ஒவ்வொரு பெண்ணும் பயணிக்க வேண்டியுள்ளது.

ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியான படிப்பு, ஒரே மாதிரியான பணியிட சட்ட திட்டங்கள், ஒரே மாதிரியான அனுபவம் போன்றவற்றைக் கொண்டிருந்தபோதிலும் பதவி உயர்வு என்று வரும் போது ஆணுக்கு சுலபமாக அது சென்று விடுகிறது. நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தேன் தெரியுமா என்று நாம் மனதினுள் புழுங்கி சாகிறோம். என்ன செய்தோம்? கஷ்டப்பட்டு உழைத்தோம். அதை யார் பார்த் தார்கள்? பார்க்க வேண்டி யவர்கள் பார்க்கட்டும் என்று காத்திருந்தோம். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறோம். நம்மை உழைப்பை பார்த்து பதவி வரவேண்டும் என்று நினைக்கிறோம். நான் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறேன் எனக்கு இந்தப்பதவி தரவேண்டும் என்று நேரிடையாகக் கேட் போமா? கேட்க மாட்டோம். ஏன்? அப்படிக் கேட்டால் கிடைக்காது. சரி, கேட்காமல் இருந்ததால் கிடைத்ததா என்ன? இல்லையே...! ஒருவேளை கேட்டு கிடைக்காமல் போயிருந்தால் கூட என்னவாயிருக்கும். நம் மனப்புழுக்கம் இருந்திருக்காது. இல்லையா” என்று கிண்டலாகக் கேட்கிறார் ஆசிரியர்.

**பதவி உயர்வைத் தவிர்ப்பது ஏன்?**

ஒரு பெண்ணாக நம்முடைய கடினமான உழைப்பும் பங்களிப்பும் அதுவாக பார்க்க வேண்டியவர்களால் பார்க்கப் படவேண்டும் என்று காத்திருக் கிறோம். அலுவலகத்தில் நம்முடைய பதவியைத் தாண்டிய அதிகாரம் தேவைப்படும் விஷயங்களைச் செய்ய நீங்கள் இதைச் செய்யுங்கள் என்று யாராவது கூறும்வரை காத்திருக் கிறோம். நம்முடைய அறிவுத் திறனை வெளிக்காட்டவும் தயங்குகிறோம். என்ன இந்தப் பெண் இப்படிப் பேசுகிறது என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தில் சரியான தருணம் வரும் வரை (பல தடவை அந்தத் தருணம் வரவே வராது போய் விடும்) நம்முடைய (நமக்குத் தோன்றும்) அறிவுரையை சொல்லாமல் கடந்து போய் விடுகிறோம். தோற்றுவிட்டால் வெட்கமாகிவிடுமே என்று எந்த ஒரு பதவி உயர்வுக்கான போட்டியிலும் வெளிப்படையாகக் கலந்து கொள்ளாமல் தவிர்க்கிறோம். முன்னேற்றம் தடைபட இவை யெல்லாம் போதாதா என்ன என்று கேட்கிறார் ஆசிரியை.

ஹெவ்லெட்-பெக்கார்ட் (Hewlett-Packard) நிறுவனத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் ஒரு ஆண் ஒரு பதவிக்குத் தேவையான தகுதியில் 60 சதவிகிதத்தைக் கொண்டிருந்தாலே அந்தப் பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்றும், அதே சமயம் ஒரு பெண் 100% தகுதிகளை அடைந்த பின்னரே விண்ணப்பிக்கிறார் என்றும் கண்டறிந்துள்ளனர். இதிலிருந்து பெண் இந்த நிலையில் இருப்பதற்கு காரணமாக இருப்பது யாருடைய தவறு என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது இல்லையா? என்று கேட்கிறார் ஆசிரியை.

வீட்டுப் பொறுப்பையும் அலுவலகப் பொறுப்பையும் ஒரு பெண் எப்படி சமநிலையில் நிர்வகிக்கிறாள் என்பது குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், பிரச்னைகளைத் தவிர்க்க வீட்டிலும் சரி, அலுவலகத்திலும் சரி, அவர்கள் மறைவில் இருந்து பணிகளை முடித்துக் கொடுத்துவிட்டு முன்னால் நிற்கும் பணிகளை எப்போதுமே முழுமையாகத் தவிர்க்கின்றனர்.

ஏனென்றால், எல்லோருக்கும் நல்லவளாக இருந்தால் மட்டுமே வீடு-அலுவலக சமநிலையை சீரான நிலையில் இருக்க வைக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர் என்று கண்டறிந்துள்ளனர். இதுவே ஆண்-பெண் என்ற பேதம் பெரிய அளவில் தழைத்தோங்க வழிவகை செய்கிறது என்கிறார் ஆசிரியை.

**முன்னேறிச் செல்லுங்கள்...**

“பெண்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்னைக்குமான அடிப்படைக் காரணம் என்ன என்பதையும், அதை எப்படி முழுமையாகக் களைவது என்பதையும் ஆசிரியை தன்னுடைய அனுபவம், ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் நிஜ வாழ்க்கை உதாரணங்கள் மூலம் அனைத்து அத்தியாயங் களிலும் தெள்ளத்தெளிவாக விளக்கியுள்ளார்.

இறுதியாக என்னதான் பிரச்னை இல்லாத வாழ்க்கை, அதற்குத் தேவையான பணம் எனப் பல்வேறு நல்ல விஷயங்களை நீங்கள் பெற்றிருந்தாலும் உங்களுடைய இயல்பான சுயத்தைத் தொலைத்துவிட்டு /விட்டுக் கொடுத்துவிட்டு ஊருக்காக வாழும் வாழ்க்கை முறையைக் கையில் எடுத்து வாழ ஆரம்பித்தீர்கள் எனில், அந்த வாழ்க்கை ஒரு நிம்மதியற்றதாகவே இருக்கும் என்பதால், இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி உங்களுடைய ஒரிஜனலை வெளிக்காட்டி (சுயத்தை இழக்காமல்) முன்னேறிச் செல்லுங்கள்” என்று கூறி முடிக்கிறார் ஆசிரியை.

பணிக்குச் செல்லும் பெண்கள் அனைவரும் இந்தப் புத்தகத்தை அவசியம் ஒருமுறை படிக்கலாம்!

**- நாணயம்**



## விஜயுடன் இணையும் ராஷ்மிகா?

நெல்சன் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள பீஸ்ட் திரைப்படம் ஏப்ரல் மாதத்தில் திரைக்கு வருகிறது. விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார்.

இதற்கு பின் தெலுங்கு பட இயக்குனர் வம்சி இயக்கத்தில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் உருவாக இருக்கும் படத்தில் விஜய் நடிக்க இருக்கிறார்.

இப்படத்தின் கதாநாயகி யார் என நீண்ட நாட்களாக தெரியாமல் இருந்த நிலையில் விஜய்க்கு ஜோடியாக முதன்முதலில் ராஷ்மிகா மந்தனா இணைந்து நடிக்கவுள்ளார் . இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய தொழிலில் சமந்தா

நடிகையர்கள் பலரும் வர்த்தகங்களை நடத்துவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வகையில், சாதி என்ற ஆடை வடிவமைப்பு நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார் பிரபல நடிகையான சமந்தா. இந்நிலையில் அவர் தனது தோழி ஒருவருடன் இணைந்து சஸ்ரெயின் ஹார்ட் என்ற நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிறுவனம் இயற்கை விவசாய பொருட்கள் - அவற்றில் தயாரான பொருட்களை ஒன்லைன் மூலம் விற்பனை செய்கிறது. இவற்றுடன், இயற்கையில் உருவான பொருட்கள் மூலம் தயாரிக்கப்பட்ட அழகு சாதனப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.





## மீண்டும் இயக்குநர் அவதாரம்

திடீரென மும்பைக்கு சென்று இயக்குநர் அனுராக் காஷ்யப்பைச் சந்தித்தார் சசிகுமார். இருவருமே அதற்கான காரணம் குறித்துச் சொல்லவில்லை. மீண்டும் படங்களை இயக்குவதற்காகத்தான் சசிகுமார் சந்தித்தார் என்று கூறப்படுகின்றனது.

படத்தின் கதை குறித்து சசிகுமார் சொல்ல முற்பட, "நீங்க என்ன கதை பண்ணினாலும் நான் நடிப்பேன். உங்களின் 'சுப்ரமணியபுரம்' படத்துக்கு நான் வாழ்நாள் அடிமை. படம் இயக்குவதை விட்டுவிட்டு நீங்கள் நடிக்கப்போனதில் எனக்குப் பெரிய வருத்தம்" எனச் சொல்லிச் சிலிர்க்கவைத்தாராம் அனுராக். இருவரும் இணைகிற படம் குறித்த அறிவிப்பு விரைவில் வரும் என்கிறார்கள்!

## சிவகார்த்திகேயனின் எழுச்சி



'மாநாடு' வெற்றிக்குப் பிறகு, தன் சம்பளத்தை 15 கோடியிலிருந்து 25 கோடியாக உயர்த்தினார் சிம்பு. 'சார்பட்டா' வெற்றிக்குப் பிறகு தன் சம்பளத்தை 15 கோடியாக உயர்த்தினார் ஆர்யா. அந்த வகையில் 'டாக்டர்' வெற்றிக்குப் பிறகு தன்னுடைய சம்பளத்தை 35 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார் சிவகார்த்திகேயன். '35 கோடி கொடுத்தாலும் சிவகார்த்திகேயனின் திகதி கிடைக்குமா எனத் தெரியவில்லை' எனத் தவிக்கிறார்களாம் தயாரிப்பாளர்கள். 'டாக்டர்' வெற்றிக்குப் பிறகு அந்த அளவுக்கு அவருக்கு பட வாய்ப்புக்கள் நிறைந்துள்ளன.

## திரை விமர்சனம்




| | | |
|---|---|---|
| திரைப்படம் | - | எதற்கும் துணிந்தவன் |
| நடிப்பு | - | சூர்யா, பிரியங்கா மோகன், சத்யராஜ் |
| இயக்கம் | - | பாண்டிராஜ் |
| இசை | - | இமான் |

'சூரரைப் போற்று, ஜெய் பீம்' என சூர்யா நடித்து வெளிவந்த படங்கள் அவர்மீதான ரசிகர்களின் பார்வையை நிறையவே மாற்றியது. சூர்யா வேறு ஒரு தளத்திற்குச் சென்று விட்டார் என்றுதான் நினைக்கத் தோன்றியது. ஆனால், இந்தப் படத்தில் அவரை மீண்டும் வர்த்தகத்தின்னபக்கம் கீழிறக்கி விட்டாரோ இயக்குநர் பாண்டிராஜ் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

இந்த சமூக வலைத்தள, யூ ரியூப் காலத்தில் பெண்களின் ஆபாச காணொலிகள் பரவிய பொள்ளாச்சி சம்பவம்தான் படத்தின் மையக் கரு. அதை வைத்து உணர்ச்சிகரமான ஓர் அதிரடி படத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் பாண்டிராஜ். ஆனால், கதையில் அழுத்தமும் குறைவு, உணர்ச்சிகரமும் குறைவு. கதாபாத்திரங்களை சரியாக உருவாக்காததே இதற்குக் காரணம்.

வட நாடு, தென்னாடு என்று இரண்டு பகுதிகளில் அமைந்துள்ள சில கிராமங்கள். தென்னாட்டு கிராமங்களில் இருந்து வடநாட்டிற்குப் பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பார்கள். ஆனால், பெண்ணின் ஒரு தற்கொலையால் இரண்டு பகுதி கிராமங்களுக்கும் தீராத பகை. தென்னாடு பகுதி கிராமத்து இளைஞர் வக்கீல் சூர்யா, வடநாடு பகுதி பெண்ணான பிரியங்காவைக் காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். அது ஒரு புறமிருக்க, தென்னாடு பகுதிப் பெண்களை ஏமாற்றி ஆபாச காணொலி எடுத்து அவர்களை பெரிய மனிதர்களுக்கு இரையாக்குகிறார் மத்திய அமைச்சர் மகன் வினய். இது சூர்யாவுக்குத் தெரிய வர, அதன் பின் என்ன நடக்கும் என்பது அனைவருக்குமே தெரிந்த ஒன்றுதான்.

வேட்டி கட்டினால் இறங்கி அடிக்கும் வீரன் சூர்யா, கோர்ட் போட்டால் வாதாடி ஜெயிக்கும் சூரன் சூர்யா என்று சொல்ல ஆசைதான். ஆனால், மனைவியின் ஆபாச காணொலியையே வில்லன் எடுக்கும் அளவிற்கு கோட்டை விடுகிறார். அடுத்து வில்லனின் சூழ்ச்சியால் நீதிமன்றிலும் வெற்றி பெற முடியாமல் சிறைக்கும் செல்கிறார். ஒரு நாயகனின் கதாபாத்திரத்தில் இப்படி ஒரு தடுமாற்றம் இருந்தாலும் தன் நடிப்பால் தனது கதாபாத்திரத்தை எப்படியோ கரை சேர்க்கிறார் சூர்யா. படத்தின் ஆரம்பக் காட்சிகளில் நேரம் போவது தெரியாமல் தன் காதல் நடிப்பில் கரை சேர வைப்பவர் பிரியங்கா மோகன். அந்தக் கண்ணும், குறும்பான பார்வையும் தமிழுக்கு இன்னொரு ரேவதி கிடைத்துவிட்டார் என்று சொல்ல வைக்கிறது.

படத்தில் வில்லன் வினயை விடவும் அதிகக் காட்சிகளில் வருபவர்கள் சூர்யாவின் பெற்றோர் சத்யராஜ், சரண்யா. சில பல சுவாரசிய காட்சிகளில் இருவரும் போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். பிரியங்காவின் பெற்றோர்களாக இளவரசு, தேவதர்ஷினி, சில காட்சிகள்தான் என்றாலும் சிரிக்க வைக்கிறார்கள். படத்தில் சூரியும் இருக்கிறார் என்பதுடன் அவரது கதாபாத்திரம் இருக்கிறது.

இமான் பின்னணி இசையில் எப்படியோ சமாளித்துவிடுகிறார். ஆனால், பாடல்களில் ஏமாற்றி விட்டார். 'சும்மா சுர்ருன்னு..' பாடல் மட்டும் கொஞ்சமாக ஆட்டம் போட வைக்கிறது. மற்ற பாடல்கள் பரவாயில்லை ரகம் கூட இல்லை. 'உள்ளம் உருகுதையா' பாடலில் ரசிகர்கள் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

எதற்கும் துணிந்தவன் படம் பெயருக்கேற்றாற் போல் இல்லை.

## 7 மொழி படத்தில் ஸ்ரேயா

மழை படத்தில் நாயகியாக அறிமுகமான ஸ்ரேயா சரண் தெலுங்கு, ஹிந்தி என 50இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். ரஷ்ய நாட்டவரை திருமணம் செய்து வெளிநாட்டில் வசிக்கும் அவர், தமிழ், தெலுங்கு படங்களிலும் நடித்து வருகிறார்.

தற்போது அவர் நரகாசுரன், சண்டைக்காரி படங்களில் நடித்து முடித்துள்ளார். இந்த நிலையில் அவர் 'கப்ஜா' இந்தியளவில் உருவாகும் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரியா, மராத்தி, ஹிந்தி என 7 மொழிகளில் உருவாகிறது.

கன்னட நடிகர்கள் உபேந்திரா, கிச்சா சுதீப் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள். ஆர். சந்துரு இயக்குகிறார்.



# பென்சிமாவிடம் வீழ்ந்த இமயங்கள்



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ரியல் மட்ரிட் எதிர் பாரிஸ் சென் ஜெர்மைன் ஆட்டம் எதிர்பார்த்த அனைத்து விசயங்களையும் ரசிகர்களுக்கு கொடுத்தது. பாரிஸில் நடந்த முதல் போட்டியில் எம்பாப்பே அடித்த கோலால் 1-0 என்ற முன்னிலையுடன் இந்த ஆட்டத்தைத் தொடங்கியது பி.எஸ்.ஜி. அதே உத்வேகத்தில் முதல் பாதியிலும் சிறப்பாக விளையாடியது அந்த அணி. இடது பக்கமிருந்து எம்பாப்பே தொடர்ந்து அடிக்க, எளிதில் முதல் கோலை அடித்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ரியல் மட்ரிட் கோல் காப்பாளர் கோர்ட்வா கஷ்டப்பட்டு போராடி எம்பாப்பேவின் முயற்சிகளைத் தடுத்துக்கொண்டிருந்தார்.

அவ்வப்போது மட்டுமே ரியல் மட்ரிட் அணி பி.எஸ்.ஜி பொக்ஸை முற்றுகையிட்டது. பென்சிமா மேற்கொண்ட ஒன்றிரண்டு முயற்சிகளையும் சிறப்பாகக் கையாண்டு கொண்டிருந்தார் கியான்லூயி டொன்னரும்மா. 34ஆவது நிமிடத்தில் அட்டகாசமான மரண அடி மூலம் கோல் அடித்தார் எம்பாப்பே. ஆனால், அவருக்கு தட்டிக் கொடுத்த நூனோ மெண்டஸ் ஒவ் சைட் பொசிஷனில் இருந்ததால், அந்த கோல் மறுக்கப்பட்டது. இருந்தாலும் அடுத்த நான்கே நிமிடங்களில் பி.எஸ்.ஜிக்கு அந்த கோலை அடித்துக்கொடுத்தார் எம்பாப்பே.

சில நிமிடங்களாக பந்தை வசப்படுத்தியிருந்த ரியல் மட்ரிட், 39ஆவது நிமிடம் பி.எஸ்.ஜி ஏரியாவுக்குள் பந்தை இழந்தது. கர்வகால் பந்தை இழக்க, அதைப் பெற்ற நெய்மர், எம்பாப்பேவுக்கு பந்தைத் தட்டிக் கொடுத்தார். மிட் லைனுக்கு அந்தப் பக்கம் இருந்த எம்பாப்பே புயல் வேகத்தில் பறந்து பந்தை தன்வசமாக்கி கோலாக்கினார். போட்டியின் முதல் கோலாக இருந்தாலும், முதல் சுற்றில் அடித்த கோலால், 2 கோல்கள் முன்னிலை பெற்றது பி. எஸ். ஜி.

முதல் பாதியில் ரியல் மட்ரிட் மேற்கொண்ட முயற்சிகள் பலன் கொடுக்காமல் போக, 1-0 என முடிந்தது. இரண்டாவது பாதியில் அதிகமாக "பிரஸ்" செய்யத் தொடங்கியது. நம்பிக்கையாக இரண்டாவது பாதியைத் தொடங்கினாலும், ஆட்டத்தின் இரண்டாவது கோலை அடித்தது என்னவோ பாரிஸ் சென் ஜெர்மைன் அணிதான். ஆனால், 54ஆவது நிமிடத்தில் எம்பாப்பே அடித்த கோல் மீண்டும் "ஒவ் சைட்" என்று மறுக்கப்பட்டது. ஒருவேளை அந்த கோல் அனுமதிக்கப்பட்டிருந்தால் ஆட்டமே வேறு மாதிரி மாறியிருக்கும்.

60 நிமிடம் வரை ஆட்டம் 1-0 என்றுதான் இருந்தது. 2-0 என முன்னிலை பெற்றிருந்தது பி.எஸ்.ஜி. இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது என்றுதான் எல்லோரும் நினைத்தனர். ஆனால், அந்த 30 நிமிடம் ரியல் மட்ரிட் அணிக்கு போதுமானதாக இருந்தது. ஆட்டத்தை மொத்தமாக மாற்றியது கார்லோ அன்சலோடியின் அணி.

61ஆவது நிமிடத்தில், தனக்குத் தரப்பட்ட பந்தை தன்வசமே வைத்திருந்தார். பென்சிமா வேகமாக பிரஸ் செய்ய, அதை மோசமாக கடத்தினார். பொக்ஸுக்குள் அதைப் பெற்ற வினிசியஸ் ஜூனியர், பெனால்டி ஏரியாவுக்குப் பந்தை அனுப்ப, அங்கு நின்றிருந்த பென்சிமா எளிதாக அதை கோலாக்கினார். 1-1. இந்த யுத்தம் 2-1 என்றானது.

அந்த கோல் சன்டியாகோ போர்னபோ மைதானத்திலிருந்த ரசிகர்கள் அனைவரையும் உற்சாகப் படுத்த, அவர்களின் கோஷத்துக்கு நடுவே இன்னும் சிறப்பாக விளையாடத் தொடங்கியது ரியல். 76ஆவது நிமிடத்தில் தங்கள் ஏரியாவில் பந்தைப் பெற்ற லூகா மோட்ரிச், சிறப்பாக முன்னேறினார். வினிசியஸுக்கு த்ரூ பாஸ் கொடுக்க, வேகமாக பி.எஸ்.ஜி பொக்ஸுக்குள் நுழைந்தார் வினிசியஸ். ஆனால், இலக்கு செய்வதற்கான சரியான கோணம் அமையாததால், மீண்டும் பின்வாங்கி பந்தை ரொடேட் செய்தார். மோட்ரிச் வசம் பந்து செல்ல, அதை பென்சிமாவுக்கு பந்தை அனுப்பினார் மோட்ரிச். அதை கோலாக்கி, போட்டியை சமனாக்கினார் பென்சிமா.

இரண்டாவது கோல் போன விரக்தியில் அடுத்த நிமிடமே இன்னொரு தவறை செய்தது பி.எஸ்.ஜி. இரண்டாவது கோல் விழுந்ததும், ரீ ஸ்டார்ட் செய்யப்பட்டபோது சிறப்பாக பிரஸ் செய்து மீண்டும் பந்தைக் கைப்பற்றினர் ரியல் மட்ரிட் வீரர்கள். மீண்டும் வினிசியஸ் பக்கம் பந்து செல்ல, அவரை கவர் செய்த மார்கினோஸ், பந்தை பக்கத்திலிருந்த வீரருக்குத் தள்ள நினைத்தார். ஆனால், பந்து பி.எஸ்.ஜி வீரரை அடையும் முன்பே அந்த இடத்துக்கு வந்து கோல் நோக்கி அதைச் செலுத்தினார் பென்சிமா. மூன்றாவது கோலும் அடிக்கப்பட, அவரின் ஹட்ரிக் நிறைவடைந்தது.



அதன்பிறகும் ரியல் மட்ரிட் அணி பந்தை தங்கள் வசம் வைத்திருந்ததால், பி.எஸ்.ஜி வீரர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. 90ஆவது நிமிடத்தில் ஒரு ப்றீ கிக் வாய்ப்பு கிடைத்தது. ஆனால், மெஸ்ஸி அடித்த ஷொட், கோல் கம்பத்துக்கு சற்று மேலே சென்றுவிட அந்த கோல் கிடைக்கவில்லை. டி மரியா, டிராக்ஸ்லர் போன்றவர்களை பொச்சடினோ இறக்கிப் பார்த்தும் அந்த கோல் கிடைக்கவில்லை.

இறுதியில் 3-2 என தோல்வியடைந்தது பி.எஸ்.ஜி. மீண்டும் சம்பியன்ஸ் லீக் வாய்ப்பை இழந்தது அந்த அணி. பென்சிமா, மோட்ரிச் போன்ற மட்ரிட் சீனியர்களின் ஆட்டம் பாராட்டப்பட, மெஸ்ஸி, நெய்மர் போன்ற பி.எஸ்.ஜி நட்சத்திரங்கள் விமர்சனங்களை சந்தித்து வருகின்றனர். ●

# 23 நிமிடங்களில் ஹட்ரிக்!

சம்பியன்ஸ் லீக் 16 அணிகள் சுற்றுப் போட்டியில் ஆர். பி. சால்ஸ்பெர்க் அணியை 7-1 என வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது பேயர்ன் மூனிச். போட்டி தொடங்கிய 23 நிமிடங்களிலேயே மூன்று கோல்கள் அடித்து, சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் விரைவில் ஹட்ரிக் கோல் அடித்தவர் என்ற சாதனையைப் படைத்தார் ரொபர்ட் லெவண்டோஸ்கி.

ரெட் புல் அரீனாவில் நடந்த முதல் சுற்றில் இரண்டு அணிகளும் ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்தன. ஜூலியன் நகில்ஸ்மேன் பலமான அணியைக் களமிறக்கியிருந்தாலும், சால்ஸ்பெர்க் அணி மிகச் சிறப்பாக விளையாடி அவர்களை கட்டுக்குள் வைத்தது.

சொல்லப்போனால் 90ஆவது நிமிடம் வரை அந்த அணிதான் முன்னிலை வகித்தது. கிங்ஸ்லி கோமன் அடித்த கடைசி நிமிட கோலால்தான் போட்டியை போட்டியை செய்தது பேயர்ன் மூனிச்.

இரண்டாவது சுற்று இன்னும் பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், ஆட்டம் மொத்தமாக வேறு மாதிரி இருந்தது. 11ஆவது நிமிடத்தில் லெவண்டோஸ்கியைத் தள்ளி விட்டு பேயர்னுக்கு பெனால்டியை தாரைவார்த்துக் கொடுத்தார் மேக்ஸிமிலியன் வோபர். அதை லெவண்டோஸ்கியே கோலாக்க, சீக்கிரமே முன்னிலை பெற்றது பேயர்ன்.

8 நிமிடங்கள் கழித்து மீண்டும் அதே தவறை செய்தார் வோபர். மீண்டும் ஒரு பெனால்டி. அதே இடத்தில் அடித்து இந்த கோலையும் நிறைவு செய்தார் லெவண்டோஸ்கி. 21ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்தவர், அடுத்த இரண்டு நிமிடங்களிலேயே மூன்றாவது கோலையும் அடித்து ஹட்ரிக்கை நிறைவு செய்தார். முல்லர் கொடுத்த பந்தை பொக்ஸுக்குள் பெரும் பிரச்னையை ஏற்படுத்த, அதைப் பயன்படுத்தி அந்த கோலை அடித்தார்.

1996ஆம் ஆண்டு ரோசன்பெர்க் அணிக்கெதிரான ஆட்டத்தில் மிலன் வீரர் மார்கோ சிமோன் முதல் 24 நிமிடங்களிலேயே ஹட்ரிக் அடித்து அசத்தியிருந்தார். இப்போது அந்தச் சாதனையை முறியடித்திருக்கிறார் லெவண்டோஸ்கி.

லெவண்டோஸ்கி அடித்து நொறுக்க, இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று மற்ற வீரர்கள் மிரட்டத் தொடங்கினார்கள். 31ஆவது நிமிடத்தில் கிங்ஸ்லி கோமன் கொடுத்த அற்புதமாக் கடத்திக் கொடுத்த பந்தை செர்ஜ் கனேப்ரி கோலாக்கினார். சால்ஸ் பெர்க் கோல் காப்பாளர் கோன் சரியாக பந்தைத் தடுக்காமல் போக, பேயர்ன் மூனிச் அணிக்கு அரை மணி நேரத்திலேயே நான்கு கோல்கள் கிடைத்தன.

முதல் பாதியிலேயே 4 கோல்கள் பெற்றதால் இரண்டாம் பாதியில் இரண்டு மாற்றங்களோடு களமிறங்கியது சால்ஸ்பெர்க். இருந்தாலும் எதுவுமே மாறவில்லை. 54ஆவது நிமிடத்தில் ஐந்தாவது கோலை அடித்தது மூனிச். இம்முறை கரம் கோத்தவர்கள் தோமஸ் முல்லரும், லெராய் சனேவும். பெனால்டி பொக்ஸுக்குள் சனேவே கோலடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இருந்தாலும், அதை அவர் தோமஸ் முல்லருக்கு பந்தை தட்டிக்கொடுக்க அதை அவர் கோலாக்கினார்.


போட்டி மொத்தமாக முடிந்து போன நிலையில், 70ஆவது நிமிடத்தில் ஆறுதல் கோலடித்தது ரெட்புல் சால்ஸ்பர்க். பேயர்னின் நடுகள வீரர்களை ஏமாற்றி முன்னேறிய பிரெண் டன் ஆரோன்சன் கடத்திக் கொடுத்த பந்தை அற்புதமாக கோலாக்கினார் மாரிட்ஸ் ஜெகார்ட். ஆனால், பேயர்ன் வீரர்கள் எங்கே ஆறுதலாக இருக்கவிட்டனர். அதன்பிறகும் இரண்டு கோல்கள் அடித்தனர்.

லெராய் சனே கடத்திக் கொடுத்த முல்லர் 83ஆவது நிமிடத்தில் கோலாக்க, மூன்று நிமிடங்கள் கழித்து சனேவே தனக்கான கோலை அடித்தார். ஹட்ரிக் அடித்தபின் எந்த கோலிலும் பங்களிக்காத லெவண்டோஸ்கி, ஏழாவது கோலுக்கு அசிஸ்ட் செய்தார்.

7-1 என இந்தப் போட்டியையும், 8-2 என இந்த சுற்றையும் வென்று காலிறுதிக்கு முன்னேறியது பேயர்ன் மூனிச்.



# டிஜிட்டல் திரையில் வாசிப்பது மூளையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகிறது?



**மனித மூளை வடிவமைப்பின் முக்கிய அமைப்பை மாற்றும் சக்தி கொண்டது வாசிப்பு. இது பார்வை திறன், மொழிதிறன், சிந்தனை திறன், உணர்வு திறன் ஆகியவற்றுக்குள் ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்த உதவுகிறது. ஒவ்வொரு புதிய வாசிப்பாளருக்கும் உண்மையில் புத்துணர்ச்சியை தருகிறது.**

வாசிப்பு போன்று ஓர் இயல்பான விஷயம் எதுவும் இல்லை. வாசிப்பு பழக்கம் என்பது நமது சிந்தனையை மாற்றும் திறன் கொண்டது. அனைவரும் புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தகங்கள் ஒரு வாழ்க்கை அனுபவம் புத்தகங்கள் அறிவு சார்ந்தது. புத்தகங்கள் ஒரு சமூகம். புத்தகங்கள் இல்லையென்றால் மனிதர்களுக்கு தற்போது இருக்கும் பண்புகள் இருந்திருக்காது. மனித இனத்தின் மிகச் சிறந்த கண்டுப்பிடிப்புகளில் ஒன்று, படிப்பறிவு.

நம் பரிணாம வளர்ச்சி எனும் கடிகாரத்தில், கண் இமைக்கும் நொடியில் வாசிப்பு உருவானது. வாசிப்பு பழக்கம் தொடங்கி வெறும் ஆறாயிரம் ஆண்டுகளே ஆனது. எத்தனை மது பாத்திரங்கள் அல்லது கால்நடைகள் நம்மிடம் உள்ளன என்பதை குறித்ததில் தொடங்கியது வாசிப்பு. எழுத்துக்கள் தோன்றியதால் அறிவை சேமிக்கவும், நினைவில் வைத்து கொள்ளவும் ஒரு சிறந்த முறை உருவானது.

மனித மூளை வடிவமைப்பின் முக்கிய அமைப்பை மாற்றும் சக்தி கொண்டது வாசிப்பு. இது பார்வை திறன், மொழி திறன், சிந்தனை திறன், உணர்வு திறன் ஆகியவற்றுக்குள் ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்த உதவுகிறது. ஒவ்வொரு புதிய வாசிப்பாளருக்கும் உண்மையில் புத்துணர்ச்சியை தருகிறது. அது நம் மூளையில் இயல்பாக உருவாக வில்லை.

படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டிய ஒவ்வொரு நபரும் தங்கள் மூளையில் ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டும்.

ஒரு நல்ல கதையை வாசிப்பது என்பது பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை விட அதிக நன்மைகள் அளிக்கக்கூடியது. வாசிப்பு பழக்கத்திற்கு பல மருத்துவ ரீதியான நன்மைகள் உள்ளன. வாழ்வில் ஏற்படும் நோய்களுக்கு தீர்வாக புனைவுகளை பரிந்துரைக்கும் கலையே நூலியல் மருத்துவம் பிப்லியோதெரபி. படைப்பாற்றலும், அறிவாற்றல், கருணை ஆகிய மூன்று அற்புதமான திறன்களை வாசிப்பு அளிக்கிறது.

நீங்கள் படிக்கும் போது, உங்கள் மூளை தியான நிலைக்கு செல்கிறது. உங்கள் இதயத் துடிப்பு சீராகி, உங்களை அமைதிப்படுத்தி, பதட்டத்தைக் குறைக்கும் ஒரு செயல்முறையாக வாசிப்பு உள்ளது.

நாம் மேலோட்டமாக படிக்கும்போது, நாம் தகவலை மட்டும் பெறுகிறோம். நாம் ஆழமாகப் படிக்கும்போது, நமது பெருமூளைப் புறணியை (cerebral cortex) அதிகம் பயன்படுத்துகிறோம். ஆழ்ந்த வாசிப்பு என்பது நாம் தொடர்பு முறையை உருவாக்குவதாகும். நாம் அனுமானங்களை உருவாக்குகிறோம். இது நம்மை உண்மையிலேயே விமர்சனம், பகுப்பாய்வு, கருணை கொண்ட மனிதர்களாக உருவாக்குகிறது.

புத்தகம் வாசிப்பை ஒரு வேலை என்று நாம் நினைக்கிறோம், ஆனால் புத்தகம் வாசிப்பு ஒரு விநியோக செயல் திறன் கொண்டது (Delivery Mechanism).

### வாசிப்பில் புதுமை

வாசிப்பு பழக்கம் புதுமை அடைந்து வருகிறது. அலைபேசியில் படிக்க வேண்டுமென்றே எழுதப்படும் அற்புதமான புத்தகங்கள் வந்துவிட்டன.

இந்த மாதிரியான புதிய முறைகள், புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு அதிக பலன்களை கொடுக்கின்றன. அவர்கள் தடைகளைக் கடந்து செல்ல வேண்டியதில்லை. “நல்ல எழுத்து” இதுதான் என்ற கட்டமைப்பை அது உடைக்கிறது. மேலும் இது உண்மையில் மக்களைப் பேசவும் கதைகளைப் பகிர்ந்து கொள்ளவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு அளிக்கிறது.

எதில் வாசிக்கிறோம் என்பது முக்கியமில்லை, எப்படி கிடைக்கிறது என்பது முக்கியமில்லை, கதைதான் முக்கியத்துவம் பெறுகிறது. புத்தகம் என்பது ஒருவேளை இதுதான் என்ற மாயையை வழங்குகிறத் உண்மையில் அது அப்படி இருந்தும் இருக்காது, இது ஒரு சிந்தனை செயல்முறைக்கான ஒரு வழி.

“முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், விஞ்ஞானிகளும் ஒன்றிணைத்து, வாசிப்பில் டிஜிட்டல் மயமாக்கலின் தாக்கம் குறித்து ஆய்வு செய்தோம். இந்த ஆய்வில், உங்கள் கைப்பேசியில் சமமாக நன்றாகப் படிக்கக்கூடிய நிறைய விஷயங்கள் உள்ளன் நீங்கள் சிறிய செய்தியையும் படிக்கலாம். ஆனால் அறிவாற்றல் அல்லது உணர்ச்சி ரீதியாக சவாலான ஒன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்தோம். காகிதத்தில் படிப்பதை விட டிஜிட்டல் திரையில் படிப்பது மோசமான வாசிப்பு புரிதலுக்கு வழிவகுக்கிறது” என்று கூறுகிறார் இ-ரீட் என்ற அமைப்பின் தலைவர் அன்னா மன்கேன்.






உண்மையில், நாம் எதைப் படிக்கிறோம் அல்லது எவ்வளவு படிக்கிறோம் என்பது அல்ல, ஆனால் எப்படிப் படிக்கிறோம் என்பதுதான் மிகவும் முக்கியம். ஸ்கிம்மிங் செய்ய, அதாவது மேலோட்டமாக படிக்க, நமக்கு ஒரு நாட்டம் இருப்பதால் , எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. வாசிப்பு மூளையில் ஒரு பிளாஸ்டிக் சுற்றமைப்பை (Circuit) உருவாக்குகிறது. இது அது படிக்கும் ஊடகத்தின் பண்புகளை பிரதிபலிக்கும். டிஜிட்டலின் குணாதிசயங்கள் சுற்றமைப்புகள் பிரதிபலிக்கும்.

வாசிப்பிற்கான திறன்களைப் பயிற்றுவிக்காவிட்டால், இறுதியில் மிகவும் சிக்கலான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளும் திறனையும், ஒருவேளை ஈடுபடும் மற்றும் கற்பனை செய்யும் திறனையும் நாம் இழக்க நேரிடும்.

மனிதனின் கற்பனை ஓர் அற்புதமான விஷயம் - நாம் எளிதில் ஒன்றை பழக்கக் கூடியவர்கள் . நமக்குக் கிடைத்திருக்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டு நாம் விரும்பியதைச் செய்வதற்கான வழிகளைக் காண்கிறோம்.

“மக்கள் இருமொழி மற்றும் மும்மொழி பேசக்கூடியவர்களாக இருப்பதைப் போலவே, நாம் ஒரு இரு அறிவுத்திறன் கொண்ட மூளையை வளர்த்துக்கொள்வோம் என்று நான் நம்புகிறேன். வாசிப்பு நம் இனத்திற்குக் கொடுத்த அசாதாரணமான பரிசை இழக்காமல் இருக்க, நாம் படிக்கும் சாதனம் அல்லது வழியை, மிகவும் பொருத்தமாக் தேர்வு செய்ய நம்மை நாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்” என்கிறார் எழுத்தாளர் மரியானே ஊல்ஃப்.

-பி.பி.சி.



# என் செல்லக்கிளி

தேவகி கருணாகரன் சிட்னி, அவுஸ்திரேலியா

சிட்னி முருகன் கோயில் வாசல் நிலையைப் பிடித்துக்கொண்டு தன் பருமனான உடம்பை தூக்கமுடியாமல் நடையைக் கடந்து வரவும், பின்னாலே, "சிந்து எப்படி இருக்கிறாய் உன்னைக் கண்டு கனநாள்?" எனச் சிந்தாமணியின் தோளைத் தட்டினார் சினேகிதி வரலட்சுமி.

திரும்பிப்பார்த்த சிந்தாமணி, "லட்சுமியா? ஏதோ என் வாழ்க்கை போய்க்கொண்டிருக் கிறது. ஊம்! என்ன செய்வது. என் மகள்மார்களின் வாழ்க்கை இப்படியாப் போச்சே," என பெருமூச்செறிந்தவர்

"நீ எப்படியிருக்கிறாய் லட்சுமி?" எனக் கேட்டார்

"நான் நல்லா இருக்கிறேன். அடிலேய்டில் மகனோடிருந்து விட்டு நேற்றுத்தான் சிட்னிக்கு வந்தனான். உண்ட மகள் கண்ணம்மா அடிலேய்டிலே தான் இருக்கிறாள், தெரியுமா?

"என்ன!!.......கண்ணம்மாவைக் கண்டியா? எப்படி இருக்கிறாள்? அவளோடு கதைத்தியா? சந்தோசமாக இருக்கிறாளா?

"பொறு, பொறு சிந்து, கண்ணம்மா நல்லா சந்தோசமா இருக்கிறாள். எல்லா கேள்விக்கும் பதில் சொல்லுறேன். முதலிலே ஒரு இடத்திலே இருப்போமா?"

"பக்கத்திலே தானே எங்கள் வீடு, அங்கே போய் ஆறுதலாகப் பேசலாம், வா," என வரலட்சுமியுடன் தனது பென்ஸ் காரில் ஏறி வீட்டை நோக்கி ஒட்டினார் சிந்தாமணி. போகும் வழியில், "பத்து வருசத்திற்கு முன் வீட்டை விட்டு பிரன்சுக்காரனோடு போனவளைப் பற்றி எந்த விவரமும் கிடைக்கவில்லை. பிரான்சுக்குத்தான் போய்விட்டாள் என்றல்லவா முடிவெடுத்தோம்." என்றார் சிந்தாமணி.

"அவள் அடிலேய்டில், என் மகன் வீட்டுக்கு இரண்டு தெரு தள்ளித்தான் குடியிருக்கிறாள்." என வரலட்சுமி சொல்லிக் கொண்டிருக்கவும் வீட்டை அடைந்தனர். சிந்தாமணியின் வீட்டின் அழகை இரசித்தபடி சோபாவில் அமர்ந்த வரலட்சுமிக்குச் சுடச்சுட மெசினில் தயாரித்து நுரைதள்ளும், கப்பச்சீனோவை கொடுத்துவிட்டு,

"என் கண்ணம்மாவைப் பற்றிச் சொல்லு?" சோபாவின் நுனியில் அமர்ந்தபடி கேட்டார் சிந்தாமணி.

"நான் வழக்கம் போலக் காலை வாக்கிங் போன போது கண்ணம்மா, நடை பாதையால் ஒரு சொப்பிங் ரொலியை இழுத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தாள். 'கண்ணம்மா' எனக் கூப்பிட்டதும், திரும்பிப்பார்த்தவள்," 'ஆண்டி நீங்கள் எப்படி இங்கே?' என ஆச்சரியப்பட்டாள்.'

"இரண்டு மாதமாக மகனோடு தங்கியிருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்?"

'ஆண்டி நல்ல சந்தோசமாயிருக்கிறேன். நீங்கள் அப்படியேதான் இருக்குறீங்கள். வீட்டுக்கு வாங்கோ,' என ஒரு கையால் ரொலியை இழுத்துக்கொண்டு மற்றதால் என் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள்."

"ஏன் இந்தப் பாரத்தை இழுத்துக் கொண்டு...?" எனக் கேட்டேன்.

'எங்கள்ளிட்ட இப்ப கார் இல்லை. என் கணவர் ஏட்ரியனுக்கு வேலை போனதோட காரை வித்துப் போட்டம். காரென்டால் இன்சுயரன்ஸ் பெட்ரோல் எண்டு செலவுதானே. இப்படி நடந்துபோய் வீட்டுக்கு வேண்டியதை சூப்பர் மார்க்கட்டில் வாங்கிக்கொண்டு வாறது உடம்புக்கு நல்லம் தானே. ஜிம்முக்கும் போகத்தேவையில்லை....' என்றாள்.

"ஐயையோ!! என் செல்லம் காரும் இல்லாமல் கக்ஷ்டப்படுறாளா...!" எனத் துடித்தார் சிந்தாமணி.

"சிந்து! மிச்சத்தையும் கேள். தன் கணவர் தன்னை நல்லா, அன்பா பாத்துக் கொள்கிறாராம். வீட்டு வேலைகளை தன்னோடு சேர்ந்து செய்கிறாராம், எங்கட ஊர் ஆம்பிளைகளைப் போலில்லாமல் சமைக்கிறாராம், துணித்தோய்க்கிறாராம், தோட்டவேலை எல்லாம் அவரே செய்கிறார் என்று தன்னுடைய வாழ்க்கையை பற்றிச் சொல்லிக் கொண்டு எனக்கு டீயும் போட்டுக் கொடுத்தாள்.

வீடு சின்னதுதான் ஆனால் நல்ல நேர்த்தியாகச் சுத்தமாகவும் வைத்திருக்கிறாள். வாங்கிக் கொண்டு வந்த பொருட்களைச் சுறுசுறுப்பாக கபோர்ட்டிலே வைத்தபடி தொடர்ந்து, ஏட்ரியனுக்கு நேற்றுதான் ஒரு சுப்பர்மார்க்கட்டிலே வேலை கிடைத்திருக்கிறது, மகனைப் பாத்துக் கொள்ளுவதற் காகக் கண்ணம்மா பகுதிநேர வேலை செய்வதாகவும். காசுத் தட்டுப்பாடு தான் என்றாலும் சிக்கனமாக வாழ்வதாகவும், தங்களுக்குள் அன்புக்கும் சந்தோசத்திற்கும் குறைவேயில்லை, என்றும் சொன்னாள். அவள் முகத்திலும் அது பிரதிபலித்தது."

"மகனும் இருக்கா? எத்தனை வயது? பெயர்... என்ன ....?" ஆவலில் குரல் கிரீச்சிட்து

"அவனுக்கு ஆறு வயது. பெயர் வரன், அப்பாவின் நினைவாக அந்தப் பெயரை வைத்திருக்கிறாளாம். மேசைமேல் இருந்த போட்டோவை என் செல்போனில் படம் எடுத்தேன்." என புகைப்படத்தைக் காட்டினார். புகைப்படத்தில் கண்ணம்மாவின் முகச்சாயலோடு ஏட்ரியனின் சிவந்த நிறத்தோடு இளம் பொன் நிற முடியு டன் சிந்தாமணியின் பேரன் சிரித்தபடி நின்றான்.

"பேச்சுவாக்கிலே கண்ணம்மா வோடு சேர்ந்து ஒரு செல்பியும் எடுத் தேன்." என அதையும் காட்ட, சிந்தாமணி பறியாத குறையாக அதை ஆவ லோடு வாங்கிப் பார்த்தார். அதில் சந்தோசமாக சிரித்தபடி இருந்த கண்ணம்மாவிற்கும் பத்து வருடத்திற்கு முன் வீட்டை விட்டுப்போன அவரது செல்ல மகளுக்கும் உள்ள வேறு பாட்டைப் பார்த்து, சிந்தாமணி ஏங்கிப்போனார். வட்டமான முகத் தில் கொழுகொழு எனவிருந்த கன் னம் வடிந்து அவள் குண்டான உடலும் ஒடுங்கி கோயிற் சிலையின் வளைவுகளோடு, இடை வரை நீண்டிருந்த முடி காதளவிற்கு வெட்டப்பட்டு மெல்லிய செந்நிறமாக கலர் பண்ணியிருந்தது. கண்ணம்மாவின் கண்களில் உவகை தாண்டவமாடியது.

"நல்லா, செந்தளிப்பா ஹப்பியா இருக்கிறாள் இல்லையா. சந்தோசம் தானே?" என்றார் வரலட்சுமி.

"அவள் எங்கே இருக்கிறாள் எனத் தெரிந்ததில் சந்தோசம். அவள் எவ்வளவு...மாறிவிட்டாள்....? இந்த போட்டோக்களையும் கண்ணம்மாவின் மொபைல் நம்பரையும் என் மொபைலுக்கு அனுப்பி விடுறியா?"

"சரி," என எழுந்த வரலட்சுமியை காரில் ஏற்றிக் கொண்டுப் போய் அவர் வீட்டில் இறக்கிவிட்டு, திரும்பிய சிந்தாமணியின் மனம் பல வருடம் பின்னோக்கி ஓடியது.

சிந்தாமணியும் அவர் கணவர் டொக்டர் வரதராஜனும், 1988 ஆம் ஆண்டு சிறீலங்காவின் சூழ்நிலையால் சிட்னி நகரத்திற்குக் குடியேறினார் கள். வந்ததும் வெஸ்ட்மீட் மருத்துவமனையில் நிபுணர் ஆக வேலையும் பார்க்கத்தொடங்கி விட்டார். அதன் பின் தான் ஜெயந்தியும், கண்ணம்மாவும் பிறந்தனர். கொழும்பிலிருந்த பெறுமதியான வீடு காணி எல்லாம் விற்ற பணத்துடன் தமிழர் செறிந்து வாழும் இடமான ஸ்டரத்பீல்டில் ஒரு அழகான வீடும் கட்டி, கிரக பிரவேசத்திற்கு ஐயர் மந்திரம் ஓதக் குடிபுகுந்தனர்

சிட்னியில் வாழ்ந்தாலும் வரதராஜனும் சிந்தாமணியும் தங்களுடைய தமிழ்க் கலாச்சாரம் பண்பாடுகளைக் கைவிடவில்லை. பிள்ளைகளைச் சனிக்கிழமைகளில் தமிழ் பாடசாலைக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் சைவ சமயப்பாடங்க ளுக்கும் அனுப்பினார்கள். வீட்டில் தமிழில் தான் பேசவேண்டும் எனக் கட்டளை. பெண்களை செல்லமாக வளர்த்தார்கள். சமைப்பதற்கும் வீடு சுத்தப்படுத்துவதற்கும் வேலையாட்கள் வந்துபோனார்கள். சுகபோக வாழ்க்கைதான்.

மூத்தவள் ஜெயந்திக்கு யூனிவசிட்டி படிப்பு முடிந்தவுடனே ஊரிலிருந்து தங்கள் சாதி சனத்திலே பார்த்து அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்ப பெரிய உத்தியோகத்திலே இருக்கிற ஒருவனைத் தேர்ந்தெடுத்து உறவுகள் நண்பர்கள் முன் மிகவும் விமரிசையாகத் திருமணம் செய்து வைத்து மனம் மகிழ்ந்தார்கள். ஜெயந்தி பெற்றோரின் வார்த்தையை வேத வாக்காக எடுப்பவள். ஆனால் கண்ணம்மா அப்படியில்லை. வரதராஜன் தம்பதிகளுக்கு கண்ணம்மாவின் போக்கு கவலையைக் கொடுத்தது.

யூனிவசிட்டி முடிந்து நேரே வீடு திரும்பாது ஒருவனோடு ஊர் சுற்றித் திரிந்துவிட்டு வருகிறாள் எனக் கேள்விப்பட்டு, ஒருநாள் அதைப்பற்றி அவளிடம் விசாரித்தார் வரதராஜன்.

"கண்ணம்மா, நீ ஒரு வெள்ளையனோடு சினிமா கிளப் பெல்லாம் . சுத்திவாரியாம். அதை நிறுத்திக் கொள். எங்கள் பண்பாடு கலாச்சாரத்திற்கு இதெல்லாம் ஒத்துவராது," என்றார்.

ஆனால் கண்ணம்மா கேட்கிறதாகவில்லை. துணிவோடு, "ஓம் அப்பா எனக்கு ஒரு பொய்ஃப்ரண்டு இருக்கிறார். இது என் வாழ்க்கை. நான் இன்னும் குழந்தையில்லை. என் வாழ்க்கையைப் பற்றி முடிவெடுக்க வேண்டியது நான். அவரைத்தான் கல்யாணமும் கட்டப் போறேன். அக்காவுக்குத் திருமணம் செய்தபோது அவவிண்ட ஆசை, விருப்பங்கள் கேட்டீங்களா?. இவனைக் கட்டு என்று சொல்ல, அவவும் மறு பேச்சில்லாமல், உங்களை நம்பி அத்தானைக் கல்யாணம் கட்டிக் கொண்டாள். நீங்கள் அக்காவிற்குக் குடுத்த சீதனத்திற்காகவும், தனக்கு அவுஸ் திரேலிய குடியுரிமை கிடைக்கிறது என்பதற்காகவும் தான் அத்தான், அக்காவைக் கலியாணம் கட்டியிருக் கிறார். அத்தான் ஒரு வெள்ளைக்கார பொம்பிளையை வைத்திருக்கிறாராம். அக்காவுக்குக் காசு பணம் நிறை யவேயிருக்கு, ஆனால் தாம்பத்திய வாழ்க்கையிலே சந்தோசமா இருக்கிறாவா? இல்லையே. கணவர் குழந்தைகள் என்று கடைமைக்காக வாழ்கிறா. பாவம் அக்கா மனதாலே மிகவும் வேதனைப் படுறா." எனப் பொரிந்து தள்ளிய கண்ணம்மா தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

இரண்டு வருடப் பட்டப் படிப்பு முடிந்த கையோடு கண்ணம்மா தனது பொய்ஃப்ரண்ட் ஏட்ரியனை பெற்றோருக்கு அறிமுகப்படுத்துவதற்காக வீட்டிற்கு அழைத்து வந்தபோது ஏட்ரியன் உள்ளே வரவும் வரதராஜன், அவர்களை வரவேற்காமல் முறைத்துக் கொண்டு, 'மருத்துவமனையிலிருந்து அவசர அழைப்பு வந்திருக்குது.' என வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். கண்ணம்மாவின் முகமோ வாடிவிட்டது. அந்த நாள் அப்படியே சிந்தாமணியின் மனதில் பதிந்திருந்தது. சிந்தாமணிதான் டீயும் வடையும் கொடுத்து ஏட்ரியனை உபசரித்தார். அதற்கு இரண்டு நாட்களின் பின், 'நான் ஏட்ரியனை பதிவு திருமணம் செய்து கொண்டு அவருடன் வாழப்போகிறேன்' என்னைத் தேட வேண்டாம்', என எழுதி வைத்துவிட்டுப் கண்ணம்மா வீட்டைவிட்டு போய்விட்டாள்.

செல்லமகள் தன்னை மீறி வீட்டைவிட்டு போனதால் இருதய நோயாளியான வரதராஜன் படுக்கையில் விழுந்துவிட்டார். அதே நேரத்தில் மூத்தவள் ஜெயந்தியும், கணவர் விவாகரத்து கேட்டதும் கொடுத்துவிட்டு பிள்ளைகளோடு பெற்றோரிடம் வந்துவிட்டாள். பாவம் வரதராஜன் இதையெல்லாம் தாங்கமுடியாமல், பரலோகம் போய்விட்டார். சிந்தாமணி தனிமனுசியா இத்தனையும் தாங்கவேண்டியிருந்தது.

அலைபேசியில் லஷ்மி அனுப்பிய கண்ணம்மாவின் படத்தைப் பார்த்தபடி சிந்தாமணி மனதுக்குள் பலதும் நினைத்து வருந்தினார். "செல்வம் கொழிக்கும் குடும்பத்திலே சீரும் சிறப்போடு எனது செல்லக் கிளியை வளர்த்தேன். அவள் நடை பயலும் நாட்களில் பாட்டியும் நானும் கண்ணம்மாவை உண்ண வைக்க பராக்காகக் கதை சொன்னோமே. சத்துள்ள சாக்கலட்டுப் பாலும் உயர்ந்த ரக சீஸ்பண்ணையும் கையில் ஏந்திக் கொண்டு, எங்களை அவள் பின் ஓட வைப்பாளே! குறும்புக்காரி. கேம் விளையாடும் மொபைல் போனை மறைத்து வைத்து, சாப்பிட்டால் தான் தருவோம் என மிரட்டு வோமே. என் செல்லக் கிளி இப்போது சத்துள்ள உணவு சாப்பிடுகிறாளோ? வயது வந்ததும் அவள் விரும்பிய இடத்திற்குப் போய் வர அவளுக்கென்று ஒரு சிறிய பென்ஸ் கார் வாங்கிக் கொடுத்திருந்தோம். இப்போது தன் வீட்டுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு வர ஒரு கார் கூட இல்லை ஆனால், நடப்பது உடலுக்கு நலம் எனச் சமத்தாக சமாளிக் கிறாள். எங்களோடு இருந்தபோது படிப்பதிலும் கூட்டாளிகளோடு சேர்ந்து கும்மாளம் அடிப்பதிலும் பொழுதைக் கழித்து, வீட்டில் எந்த வேலையும் செய்யா மல் இருந்த என் செல்லப் பெண்ணின் விளையாட்டுத் தனம் போய் எப்படி, பொறுப்பும் விவேகமுள்ளவளா னாள்? குறைந்த வருமானத்தோடு சிக்கனமாகக் கட்டுப்பாட்டோடு சீவிக்கும் சாமர்த்தியம், பக்குவம், அவளுக்கு எங்கிருந்து தான் வந்ததோ?"

கண்ணம்மா! நீ அமைத்து கொண்ட வாழ்க்கையிலே சந்தோசமாயிருக்கிறாய் எனக் கேள்விப்பட்டேன், அது போதும். ஆனால் பாவம் உன் அக்கா, நாங்கள் அமைத்துக் கொடுத்த வாழ்க்கை பிழைத்துப்போய் என்னோடு வந்திருக்கிறாள். என் செல்வங்களின் கண்களில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டும் அதை அறிவீர்களோ?"

என மனதுக்குள் எண்ணியவள் நெஞ்சு படபடக்க கண்ணம்மாவின் தொலைபேசி இலக்கத்தைச் அழுத்தினார்.

ஈழநாடு





# கச்சத்தீவில் கூடிய இந்தியா, இலங்கை மீனவர்கள் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன?

இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையில் கச்சத்தீவில் நேற்று முன்தினம் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கச்சத்தீவு புனித அந்தோணியார் தேவாலய உற்சவத்தில் பங்குப்பற்றுவதற்காக வருகை தந்துள்ள மீனவர்களுக்கு இடையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, இரண்டு நாட்டு மீனவர்களும், தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்திய மீனவர்களினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழிலினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து, இலங்கை மீனவர்கள் இதன்போது கருத்துரைத்திருந்தனர். வட மாகாண கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அன்னராசா இதன்போது கருத்து தெரிவித்தார்.

"தொப்புள் கொடி உறவிற்கு தடையாக இருக்கின்ற இழுவைமடி வலைத் தொழிலை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். கடல் வளங்களை பாதிக்காத நாட்டுப் படகு போன்ற தொழில் முறைகளில் இந்திய கடற்றொழிலாளர்கள் ஈடுபடும் பட்சத்தில், நிபந்தனைகளுடன் வளங்களைப் பகிர்ந்து கொள்ள இலங்கை கடற்றொழிலாளர்கள் தயாராக இருக்கின்றனர்" என தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இந்திய மீனவர்களும் இந்த சந்திப்பில் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

"இழுவைமடித் தொழிலால் வளங்கள் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். மாற்றுத் தொழில்முறைக்கு தயார்ப்படுத்த காலவகாசம் தேவைப்படுகின்றது" என இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், 2004ம் ஆண்டு முதல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்ற போதிலும், இந்திய - இலங்கை மீனவப் பிரச்னை தீர்க்கப்படாது உள்ளதாகவும் இந்திய மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் குறுகிய காலத்தினை நிர்ணயம் செய்து, அந்த காலப் பகுதிக்குள் இழுவைமடிப் படகுத் தொழிலிலிருந்து மாற்று தொழிலுக்கு செல்ல தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளும் பொறிமுறையொன்றை உருவாக்குவது சிறந்ததாக இருக்கும் என இந்திய மீனவர்கள் கூறுகின்றனர்.



மேலும், தமது படகுகள் ஏலத்தில் விற்பனை செய் யப்படுவதானது, தமக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளதாக இந்திய மீனவர்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந் துள்ளனர். இதற்கு இலங்கை மீனவர்கள் பதிலளித்துள்ளனர்.

இந்திய மீனவர்களினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு, படகுகளை ஏலத்தில் விற்பனை செய்வதில் கிடைக்கும் பணத்தை வழங்குமாறு, தாம் கடற்றொழில் அமைச்சரிடம் தொடர்ச்சியாக விடுத்த அழுத்தங்கள் காரணமாகவே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டார்.

"இன்றைய தினம் நடைபெற்ற சிநேகப்பூர்வ சந்திப் பில் இரண்டு தரப்பினருக்கும் தங்களது எதிர்பார்ப்புக்களையும், ஆதங்கங்களையும் வெளியிட்டமை, ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியிருக்கும் என நம்புகின்றேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரை சந்தித்து, கடற்றொழி லாளர்களின் உணர்வுகளை புரிந்துக்கொண்டு, உறவு களை பாதிக்காத வகையில் தீர்வொன்றை எட்டுவது தொடர்பாக கலந்துரையாடப்படும்" என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இராமேஸ் வரம் மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜா, "பாரம்பர்ய கடல் பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடிப்பதாக இலங்கை கடற் படையினர் தொடர்ந்து கைது செய்து வருகின்றனர்.

இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதோடு, மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் விடுதலை செய்யும் இலங்கை அரசு, விசைப் படகை அரசுடைமையாக்கி உத்தரவிடுவதால் படகு உரிமையாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. எனவே உடனடியாக படகுகளை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தோம்.

இதற்கு இலங்கை மீனவர்கள் இழுவை மடி மீன்பிடி முறையைக் கைவிட்டுவிட்டு கிடப்பில் போடப்பட்டுள்ள இந்திய-இலங்கை மீனவர் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இதுகுறித்து இந்திய, இலங்கை அரசுகளிடம் பேசி வருகின்ற மே மாதத்தில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையை கொழும்பில் நடத்துவது குறித்து ஆலோசித்துள்ளோம்," என்றார்.

முன்னதாக, கச்சத்தீவில் அந்தோணியார் தேவாலய திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதில் இந்தியாவில் இருந்து 76 பேரும் இலங்கையில் இருந்து 88 பேரும் கலந்து கொண்டனர்.

இந்தத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கொடியேற்று நிகழ்வில் நெடுந்தீவு பங்குதந்தை வசந்தம் மற்றும் வேர்கோடு பங்குதந்தை தேவ சகாயம் இருவரும் கலந்துகொண்டு அந்தோணியார் திருவுருவம் பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றி வைத்தனர்.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

- **கமல், ராமு, வசி, அஜித் ஆகிய நான்கு நண்பர்கள் நாற்சந்தியில் நின்று விட்டு பிரிந்து சென்ற விபரம் தரப்பட்டுள்ளது.**
  - கமல் என்பவர் வடக்குத் திசையில் சென்றார்.
  - ராமு என்பவர் கமல் சென்ற திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.
  - வசி என்பவர் கிழக்குத் திசையில் சென்றார்.
  - அஜித் என்பவர் கமல், வசி சென்ற திசையின் மத்தியிலுள்ள திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.


16. அஜித் சென்ற திசை யாது?

(1) வடமேற்கு (2) தென்கிழக்கு (3) தென்மேற்கு

17. 100 தொடக்கம் 110 வரை உள்ள எண்ணும் எண்களை இலக்கத்தில் எழுதும் போது பூச்சியம் எழுதப்படும் எண்களின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 11 (3) 10

18. பின்வரும் படங்களின் உதவியுடன் மாணவன் ஒருவன் கூறிய தகவல்களில் தவறெனக் கொள்ள முடியாத கூற்றைத் தெரிவு செய்க.





(1) கேத்தலில் உள்ள நீரையும் கோப்பையில் உள்ள நீரையும் சேர்த்தால் 2*l* 850***ml*** வரும்.

(2) பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750***ml*** ஆகும்.

(3) கூசா, கோப்பையில் உள்ள நீரின் மொத்த அளவு 2050***ml*** ஆகும்.

19. அருகே தரப்பட்டுள்ள கனவுருவில் புள்ளிக் கோடிடப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின் காணப்படும் பக்கங்கள், உச்சிகளின் எண்ணிக்கைகள் எத்தனை?



(1) பக்கங்கள் - 7 உச்சிகள் - 7

(2) பக்கங்கள் - 7 உச்சிகள் - 6

(3) பக்கங்கள் - 6 உச்சிகள் - 8

20. சந்தையில் மரக்கறி வியாபாரி ஒருவர் தனது வாடிக்கையாளரிற்கு பூசனிக்காயைக் கொடுப்பதற்காக ஒரு பூசனிக்காயை தராசின் ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் 2 கிலோகிராம் படிக்கல்லை வைத்தார். மேலும் பூசனிக்காய் உள்ள தட்டில் சில படிக்கற்களை வைத்தபோது தராசு சமநிலையில் காணப்பட்டது. பூசனிக்காயின் நிறை 1 கிலோகிராம் 625 கிராம் எனின் வியாபாரி பூசனிக்காய் உள்ள தட்டில் வைத்த படிக்கற்கள் எவை?

(1) 200g, 100g, 70g, 5g (2) 300g, 40g, 30g, 5g (3) 200g, 100g, 50g, 20g, 5g

- திங்கள் தொடக்கம் ஞாயிறு வரை P, Q, R, S, T, U, V ஆகிய ஊழியர்கள் வாரத்தின் ஏழு நாட்களும் கடமைக்குச் செல்லும் ஒழுங்குமுறை கீழே தரப்பட்டுள்ளது.
  - வாரத்தின் நடு நாளில் P என்பவர் கடமைக்குச் செல்கிறார்.
  - U, S, V ஆகியோர் ஒழுங்கு முறையில் மூன்று நாட்களும் கடமைக்குச் செல்கின்றனர்.
  - V மற்றும் R ஆகியோர் கடமைக்குச் செல்லும் நாட்கள் இரண்டிற்கும் இடையே இன்னொருவர் மட்டும் வேலைக்குச் செல்கிறார்.
  - Q சனிக்கிழமை கடமைக்குச் செல்கிறார்.

21. S, T ஆகியோர் கடைக்கு வரும் நாட்கள் முறையே

(1) செவ்வாய், ஞாயிறு (2) திங்கள், ஞாயிறு (3) வியாழன், புதன்

22. T கடமைக்கு வந்து அடுத்து மூன்று நாட்களும் கடமைக்கு வரக் கூடியவர்கள் யாவர்?

(1) U, S, F (2) S, R, U (3) U, S, V

23. ஒரு வாங்கில் இடமிருந்து வலமாக முறையே அண்ணா, அம்மா, அப்பா, தங்கை நான் அமர்ந்திருந்தோம். முதலில் நானும் அப்பாவும் எங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தோம். பின்பு அண்ணாவும் அப்பாவும் தங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தார்கள். மீண்டும் நானும் அப்பாவும் எங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தோம். இப்போது வாங்கின் நடுவில் இருப்பது யார்?

(1) நான் (2) அப்பா (3) அண்ணா

## விடைகள்

| | | |
|---|---|---|
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |
| 16. | (3) | தென்மேற்கு |
| 17. | (2) | 11 |
| 18. | (2) | பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750***ml*** ஆகும். |
| 19. | (1) | பக்கங்கள் - 7 உச்சிகள் - 7 |
| 20. | (3) | 200g, 100g, 50g, 20g, 5g |
| 21. | (1) | செவ்வாய், ஞாயிறு |
| 22. | (3) | U, S, V |
| 23. | (2) | அப்பா |

கல்வி tv CHANNEL-1

**06.03.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**06.03.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |








# கிழக்கு பல்கலை. பட்டமளிப்பு விழா கோலாகலமாக நேற்று ஆரம்பமானது!

யாழ்ப்பாணம், மார்ச் 13

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று சனிக் கிழமை வேந்தர் மருத்துவர் வேல்முருகு விவேகானந்தராஜா தலைமையில் மட்டக் களப்பு - வந்தாறுமூலை வளாகத்தின் நல்லையா கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.**

முதலாம் நாள் விழாவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசா ளர் சிரேஷ்ட பேராசிரியர் சந் தன பி உடவத்த கலந்துகொண் டார்.

கிழக்குப் பல்கலைக்கழகத் தின் வரலாற்றில் முதல்தடவை யாக 1958 உள்வாரி மற்றும் வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டப்பின் தகைமை பெறுப வர்களுக்கும் கௌரவப்பட்டம் பெறுபவர்களுக்கும் பட்டம் வழங்கப்பட்டன.

வணிக நிர்வாகத்தில் முது மாணி , முதுக்கலைமாணி, முதுக்கல்விமாணி, அபிவிருத் திப் பொருளியலில் முதுமாணி ஆகிய துறைகளில் 133 பேருக்கு பட்டப்பின் தகை மைகளுக்கான தகைமைகளும் இரண்டு பேருக்கு கௌர வப்பட்டங்களும் முதலாம் அமர்வில் வழங்கப்பட்டன. ஏனைய இளமாணி பட்டங் களுக்காக இரண்டாவது அமர்வில் 408 மாணவர்களும் 3 ஆவது அமர்வில் 340 மாணவர்களும் 330 பட்டம் பெற்றனர்.

இதேவேளை, இன்று ஞாயிற்றுக்கிழமை நடை பெறும் இரண்டாம்நாள் அமர் வில் 360 மாணவர்களும், 385 மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்படுவர் என்று பதிவாளர் அமரசிங்கம் பகீரதன் - தெரிவித்தார். (ஐ)

# குறிஞ்சாக்கேணிக்கு ஆளுநர் நேரில் வருகை

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.நிவாஸ் அவர் களின் வேண்டுகோளிற்கிணங்க நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் கிண்ணியா நகர சபைக்கு விஜயம் செய்து குறை பாடுகளை கேட்டறிந்தார்.

அத்துடன், குறிஞ்சாக்கேணி பால நிர்மாணப் பணிகளை பார்வையிட்டு கட்டட நிர்மா ணத்தை துரிதப்படுத்தும் நட வடிக்கையை மேற்கொள்ள உத் தரவாதம் வழங்கியதுடன், குறிப்பிட்ட படகு சேவையைப் பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பு அங்கிகளும் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது நகர சபையின் உறுப்பினர்களான எம்.எம். மஹ்தி, கலீபத்துல்லா, ஆசாத், நசுருத்தீன் ஆகியோ ரும், சபையின் செயலாளர் விஷ்ணு மற்றும் உத்தியோகத் தர்கள், ஊழியர்கள் அனை வரும் பங்கேற்றிருந்தனர்.

எதிர்காலத்தில் பிரதேசத் தின் அபிவிருத்திக்காக பலவழி களிலும் உதவி செய்து தருவ தாக ஆளுநர் இதன் போது தெரிவித்தார். (ஐ)

# கலாசார மத்திய நிலையம் அமைச்சர் திறந்து வைத்தார்

வாகரை, மார்ச் 13

வாகரை பிரதேச கலாசார மத்திய நிலையம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை உத்தி யோகபூர்வமாக திறந்துவைக் கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதி பதியின் 'நாட்டை கட்டி யெழுப்புவதற்கான சுபீட் சத்தின் நோக்கு' அபிவிருத்தித் திட்டங்களை யதார்த்தமாக்கும் பொருட்டு பொது நிதியின் மூலம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச் சால் நிர்மாணிக்கப்பட்ட வாகரை கலாசார மத்திய நிலை யத்தை தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரம நாயக்கவின் பங்குபற்றுதலுடன் பிரதேச கலைஞர்களிடம் நேற்று முன்தினம் கையளிக் கப்பட்டது.

வாகரை பிரதேச செயலாளர் எந்திரி ஜீ. அருணன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்



வில் பழங்குடி சமூகத்தின் தலை வர்கள், பிரதேச கலைஞர்கள், புத்தசாசன கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் பணிப்பா ளர் கலாநிதி பிரசாத் ரணசிங்க, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு மதி சுதர்சினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், வாகரை பிரதேச சபையின் தலைவர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மங்கள வாத்தியம் முழங்க பழங்குடியினர் மற்றும் பிரதேச கலைஞர்களால் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டமையைத் தொடர்ந்து, கொடி ஏற்றப் பட்டு மங்கள விளக்கேற்றலு டன் ஆரம்பமான நிகழ்வில் ஆசியுரை மற்றும் தலைமை யுரை என்பன இடம்பெற்ற தைத் தொடர்ந்து பிரதம அதிதி யினால் சர்வமத தலைவர் களுக்கு கௌரவமளிக்கப்பட் டது.

இதன்போது மண்முனை வடக்கு கலாசார மத்திய நிலை யத்தின் மாணவர்களால் கண் கவர் கலைநிகழ்வுகளும் அரங் கேற்றப்பட்டன. (ஐ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 04 . 1943



இறப்பு 08 . 03 . 2022

## சரவணை இரத்தினசிங்கம்

ஏழாலை மத்தி - அச்சுவேலி தெற்கு

**(CTB ரத்தினம்)**

சிவகுருவீதி ஏழாலை மத்தியை பிறப்பிடமாகவும், முத்துமாரி அம்மன் வீதி, அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சரவணை இரத்தினசிங்கம் கடந்த (08.03.2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை அன்னப்பிள்ளை அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்களின் பாசமிகு மருமகனும், தவமணிதேவி அவர்களின் பாசமிகு கணவரும், பிரபாகரன் (சுவிஸ்), கபிலநந்தினி (ஹொலண்ட்), சசிகரன் (லண்டன்), தயாநந்தினி, சர்வாநந்தினி (பிரான்ஸ்), துர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயபிரகாசினி (சுவிஸ்), தவராஜசிங்கம் (ஹொலண்ட்), சிவசுபா (லண்டன்), அமிர்த சாகரம், பிரபு (பிரான்ஸ்), மோகனா, ரூபவரன், ஆதீஸ்வரி, செல்வச் சந்திரன், மோகனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டிலக்சன், நிக்ஷன், நியா, கம்சிகா, பிறின்ஸ், ஹர்ஷா, ஹரிகாலன், லக்சிகா, வினோஜிகா, வர்ஷன், பிரதிக்கா, சபிஸ்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, இளைய தம்பி, நடராசா, புஸ்பரத்தினம் மற்றும் அருளானந்தம் (சுவிஸ்) ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2022) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முழங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

# ரமழான் நோன்பு நெருங்குவதால் பேரீச்சைக்கான தடையை நீக்குக!

## முஜிபுர் ரஹ்மான் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 13

அரசாங்கம் இறக்குமதி செய்ய தடை விதித்தி ருக்கும் பொருட்களில் பேரீச்சம் பழமும் அடங்கு கிறது. எதிர்வரும் மாதம் முஸ்லிம்களின் ரமழான் நோன்பு ஆரம்பிக்கப்படுவதால் பேரீச்சம் பழத் தின் தேவை அதிகரிக்கின்றது. இதனால் பேரீச்சம் பழம் இறக்குமதிக்கான தடையை அரசாங்கம் நீக்கவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனை வலியுறுத்தினார்.

மேலும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் டொலர் பிரச்னை காரணமாக அரசாங்கம் இறக்குமதி செய்யப்படும் 367 பொருட்களுக்கு தடைவிதித்து, அதற்கு அனுமதி பத்திரம் பெறவேண்டும் என அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

இந்த அனுமதி பத்திரத்தை அரசாங்கத்தின் வியாபாரிகளே பெற்றுக்கொள்வார்கள். இதனையே அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து செய்துவருகின்றது.

அரசாங்கத்துக்கு தேவையான வியாபாரிகளை வளர்ப்பதற்கு தேவையான முறையிலேயே அரசாங்கம் தீர்மானங்களை எடுத்து வருகின்றது.

அரசாங்கம் இறக்குமதிசெய்ய தடைசெய்திருக்கும் பொருட்களில் பேரீச்சம் பழமும் இருக்கின்றது. அடுத்த மாதம் ஆரம்பத்தில் முஸ்லிம்களின் ரமழான் நோன்பு ஆரம்பிக்கப்படுகின்றது. இது தெரிந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை நீக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

### எரிவாயு...

(கொழும்பில்) விற்பனையாகின்றது.

இந்த நிலையில், 835 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டால், சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 3,535 ரூபாயாக உயர்வடையும்.

### அதிகரிக்கும்...

யேற்றத்துடன் நாடு மற்றுமொரு பேர ழிவை எதிர்கொண்டுள்ளது எனவும் தனது சமூகவலைதளப் பக்கத்தில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து அனைத்துப் பொருட்களும் கிடுகிடுவென உயர்ந்து வரும் நிலையி லேயே வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாமல் மக்கள் கிளர்ச்சிக்குத் தயா ராகி வருகின்றனர் - என்றும் அவர் எச் சரித்துள்ளார்.

### வார...

தடை ஏற்படாது என்று அதிகாரிகள் குறிப்பிட்டாலும், நெருக்கடியான சூழல் காரணமாக வார இறுதியிலும் மின் வெட்டை நடைமுறைப்படுத்த அனு மதிப்பதாக அந்த ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இதன்படி, பி, கியூ, ஆர், எஸ்., ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை ஒரு மணி நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல் வலயங்களில் காலை 9 முதல் மாலை 5 மணி வரையான பகுதிகளில் 2 மணி நேர மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும். இந்த வலயங்களில் மாலை 5 மணி முதல் இரவு 10 மணிக் கிடையில் ஒரு மணி 15 நிமிட மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### அனைத்து...

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்ட ணியின் பேச்சாளர் க. அருந்தவபாலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

டான் தொலைக்காட்சியின் ஸ்பொட் லைற் நிகழ்ச்சிக்கு அளித்த நேர்காண லிலேயே மேற்படி குற்றஞ்சாட்டிய அவர்,

"13ஆவது திருத்தத்தைக் கோரி தமிழ் கட்சிகள் கையெழுத்திட்டார். அவரின் முடிவு அவரின் தனிப்பட்ட முடிவுதான் அது கட்சியின் முடிவல்ல. அப்படியான முடிவை ஊடகப் பேச்சாளரான நான் ஏற்கவுமில்லை", என்றும் தெரிவித்தார்.

மேலும், ஏற்கனவே இருக்கின்ற 13ஆவது திருத்தத்தை இப்போதும் கோருவது பொருத்தமான ஒன்றல்ல. அது தேவையற்ற விடயம். இந்த விட யத்தில் விக்னேஸ்வரன் தான் தனித்தே முடிவு எடுத்தார். கட்சியின் உறுப்பினர் களுடன் இது குறித்து அவர் எந்த கலந்தோலோசனையும் நடத்தவில்லை.

தமிழ் மக்கள் கூட்டணியை மக்கள் மயப்படுத்தும் செயல்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தலோ அல்லது உள்ளூராட்சி தேர்தலோ வந்தால் தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிடக்கூடிய நிலைமை இல்லை. காரணம் கட்சியின் செயல்பாடுகள் மக்கள் மயப்படுத்தப்பட வில்லை. அதற்கான நடவடிக்கைகளை தலைமை எடுக்கவில்லை.

வெறும் கதிரைகளுக்காகவும் பதவி களுக்காகவும் அரசியலில் இருப்பதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்வ தில்லை. அதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினேன். அங்கிருந்து வெளியேறிவிட்டு, நான் அங்கம் வகிக்கும் தற்போதைய கட்சியும் அதைச் செய்யுமானால் அதனை ஏற்றுக் கொள்ள நான் தயாரில்லை. வாக்கு அரசியலை விட மக்கள் அரசியலையே நான் விரும்புகிறேன். அதனால், வாக்கு அரசியலுக்கு விரைவில் விடைகொடுப் பேன். மக்கள் அரசியலில் தொடருவேன் - என்றும் சொன்னார்.

அருந்தவபாலன் பங்கேற்ற ஸ்பொட் லைற் நேர்காணல் நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு டான் தமிழ் ஒளி தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும். (ஐ)

# நானும் ரணிலும் நண்பர்கள்தான் ஆனால் நம் சித்தாந்தங்கள் வேறு!

## பத்திரிகை ஆசிரியர்களிடையே மஹிந்த

கொழும்பு, மார்ச் 13

நானும் ரணில் விக்கிரமசிங்கவும் நல்ல நண்பர்கள். ஆனால், எங்களின் கொள்கைள் மற்றும் அரசியல் சித்தாந் தங்கள் வேறுபட்டுள்ளன. இதனால், கூட்டு அரசாங்கத்தில் நாம் இணைந்து செயல்பட முடியாது என்று தெரிவித் துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று முன்தினம் அலரி மாளிகை யில் பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகப் பிரதானிகளை சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கி ரணில் விக்கிரமசிங்கவை பிரத மராக நியமிக்கவுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையல்ல என்றும் அவர் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டிய போதும், தேசிய அரசாங்கம் குறித்து நாம் எதுவும் பேசவில்லை என்றும் கூறினார்.

தற்போதைய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அனைத்துக் கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்நியச் செலாவணி நெருக்கடி குறித்து ஆராயப்பட்டு வருகிறது. விரைவில் மின் சாரம் மற்றும் எரிபொருள் நெருக் கடி யும் தீர்க்கப்படும் என்றும் கூறினார். (ஐ)

## அடுத்த வாரம் இந்தியா செல்கிறார் நிதியமைச்சர்!

கொழும்பு, மார்ச் 13

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ அடுத்த வாரம் இந்தியா செல்லவுள்ளார் என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிடமிருந்து பெறப்படவுள்ள ஒரு பில்லியன் டொலர் ஒப்பந்தம் தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைகள் இதன்போது முன்னெ டுக்கப்படவுள்ளன என்று அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல தெரி வித்தார்.

இயலுமான அனைத்து சந்தர்ப்பங் களிலும் இலங்கைக்கு உதவுவதாக இந் திய வெளிவிவகார அமைச்சர் உறுதி யளித்துள்ளதாகவும் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ருவிற்றர் பதிவில் குறிப்பிடப்பட்டிருந் தது.

இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங் களில், நிதியமைச்சர் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் இரத்து செய்யப்பட்டது.

இதனிடையே, கடன் மறுசீரமைப்பு மற்றும் டொலர் பற்றாக்குறையை முகாமைத்துவப்படுத்துவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சுக்களை ஆரம்பிக்க வுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுக்கள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளதாகவும் நேற்றுமுன் தினம் இரவு வெளியான அந்த செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மின்சாரம்...

இடத்தைச் சேர்ந்த நியாஸ் முஹம்மட் ஆசிக், முஹம் மட் இப்ராஹிம் என்ற சகோதரர்களே இவ்வாறு உயிரிழந்தனர். உயிரிழந்த வர்கள் இருவரும் 13, 12 வயதை உடையவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம் மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

### புதிய...

கோரிக்கை விடுக்கப்பட் டுள்ள நிலை யில், அதற்கான காரணமும் விவரிக் கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைத் திட் டமும் இதில் உள்ளடங் கும்.

நாட்டில் நிதி நெருக் கடி ஏற்பட் டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவை களுக்கு, தேவை களுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலேயே இந்தப் பரிந் துரை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## "இனப் பிரச்னை உண்டு என்பதை ஏற்றபிறகே ஜனாதிபதியுடன் பேச்சு!"

மட்டக்களப்பு, மார்ச் 13

"தமிழர்களுக்கு இந்த நாட்டில் இன ரீதியான பிரச்னை இருக்கின்றது என் பதை ஜனாதிபதி முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின் னரே அரசியல் தீர்வு தொடர்பில் பேசவேண்டும்", என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலா ளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பின ருமான கோவிந்தன் கருணாகரம் தெரி வித்தார்.

நேற்று மட்டக்களப் பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும், கூறுகையில்,

எதிர்வரும் 15ஆம் திகதி தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடனான சந்திப்புக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளாரென அறிகின்றோம். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார்.

ஆறு மாதங்களுக்கு முன்னரும் பேச் சுக்கு அழைத்து பின்னர் அவரே அதனை இரத்துச்செய்து வேறு திகதியை வழங்குவ தாக உறுதியளித்திருந்தார். அதன் பின்னர் எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை.

இருந்தபோதிலும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வட, கிழக்கில் நடைபெறும் காணி அபகரிப்பு தொடர் பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இயங் கும் 13 பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த போது ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கைய ளிக்க முயற்சித்தோம். ஆனால், அந்த நேரத்தில் ஜனாதிபதி இல்லை, பிறிதொரு திகதியை தருகின்றோம் என ஜனாதிபதி செயலகத்தால் அன்று கூறப்பட்டிருந்தது.

அந்த வகையில் காணி அபகரிப்பு தொடர்பில் பேசவேண்டுமாயிருந்தால் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரமல்லாமல் அந்த போராட்டத் தில் கலந்துகொண்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் அவர் பேசவேண்டும்.

ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு இனப் பிரச்னையில்லை, அவர்களுக்கு பொரு ளாதார பிரச்னையே உள்ளது என்று கூறுகிறார்.

முதலில் அரசியல் தீர்வு, இனப் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேசவேண்டு மாகவிருந்தால் தமிழினத்திற்கு இன ரீதி யான பிரச்னையிருக்கின்றது, அவர் களுக்கு ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என்பதை இந்த ஜனாதிபதி முதலில் ஏற் றுக்கொள்ளவேண்டும். - என்றார். (ஐ)

## பயங்கரவாத சட்டத்தை பயன்படுத்தி அரசாங்கம் கேலிக்கூத்து காட்டுகிறது

### கொக்கட்டிச்சோலை ஆலய பிரதமகுரு காட்டம்



மட்டக்களப்பு, மார்ச் 13

"போராட்டத்தில் ஈடு பட்டிருந்த போராளி களை அழித்தொழித்து விட்டதாக கூறிக்கொண்டு மீண்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தை தற் போதும் பயன்படுத்துவ தானது இந்த அரசாங் கத்தின் கேலிக்கூத் தான செயல்பாட்டையே காட்டுகிறது", என்று மட் டக்களப்பு கொக்கட்டிச் சோலை தான்தோரீஸ் வரர் ஆலயத்தின் பிரத மகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை கொக் கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலய சந்தியில் கையொப்பங் கள் சேகரிப்பு இடம்பெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சர்வதேச ரீதியில் அனைவரா லும் வியக்கத்தக்க வகையில் தமிழ் மக்களின் உரிமைகளைக் கேட்டு போரா டிக்கொண்டிருந்த போராளிகளுக்கு பயங்கரவாதிகள் என்று பெயரை சூட் டிக்கொண்டு பயங்கரவாத தடைச் சட் டத்தை இலங்கை அரசாங்கம் கொண்டு வந்து பல அட்டூழியங்களை செய்தது.

தமிழ் பேசும் மக்களை கொடூரமான முறையில் நடத்தி இறுதியாக போராட் டத்தில் ஈடுபட்டிருந்த போராளிகளை அழித்துஒழித்துவிட்டதாக கூறிக் கொண்டு அந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை இன்றும் வைத்துக்கொண்டி ருப்பதானது இந்த அரசாங்கத்தின் கேலி கூத்தான செயல்பாடாகவே இருக் கின்றது. எனவே, சர்வதேச ரீதியில் உள்ள நியாயவாதிகள் இந்தப் பயங்கர வாத தடைச்சட்டத்தை நீக்கி, தமிழ் மக்களுக்கு விடிவை ஏற்படுத்த வேண் டும் - என்றார்.

இந்தப் போராட்டத்தில் கொக் கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதமகுரு, ஆலய வண்ணக் காரர்கள், நிர்வாக சபையினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன், மட்டக் களப்பு மாநகர சபை முதல்வர் தி. சரவணபவன், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பொன் அணிகளின் போர் சென். பற்றிக்ஸ் வெற்றி!




யாழ்ப்பாணம், மார்ச் 13

105ஆவது பொன் அணிகளின் போரில் யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி அணி 10 விக்கெட்களால் மாபெரும் வெற்றி பெற்றது.

பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள் மோதிய பெருந்துடுப்பாட்டப் போட்டி வெள்ளிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதல் இனிங்ஸில் யாழ்ப்பாணக் கல்லூரி 98 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 133 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்திருந்த நிலையில் முதல்நாள் ஆட்டம் முடிவடைந்திருந்தது.

இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 156 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கீர்த்தன் 59, சௌத்ஜன் 27, டெஸ்வின் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்துவீச்சில் பிருந்தன் 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

58 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரிக்கு துடுப்பாட்ட வீரர்கள் மீண்டும் சொதப்பவே 32.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 84 ஓட்டங்களையே பெற்றது.

இதில், பிரதீப் 24, விஷ்ணுகாந்த் 17, சங்கீத் 17, ஓட்டங்களை அதிகமாகப் பெற்றனர்

சென். பற்றிக்ஸின் பந்துவீச்சில் அபிசன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்தினார்.

28 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலகு இலக்குடன் இரண்டாவது இனிங்ஸில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டியது.

இதில், சௌத்ஜன் 19 ஓட்டங்களையும், சியாந்சன் 7 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் எஸ். கீர்த்தன் தெரிவாக, அடுத்த சிறந்த வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் கீர்த்தன் தெரிவானார்.

சிறந்த பந்துவீச்சாளராக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஏ. எவ். டெஸ்வின் தெரிவாக, அடுத்த சிறந்த வீரராகவும் சென். பற்றிக்ஸின் வீரர் எஸ். அபிசன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த சகலதுறை வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் பி. பிருந்தன், சிறந்த களத்தடுப்பாளராக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஜே. ஜெஸ்ரிகன், அடுத்த சிறந்த களத்தடுப்பு வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் ஜே. ரைஸ் ஜென்சன், சிறந்த இணைப்பாட்ட வீரர்களாக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் எஸ். கீர்த்தன் - எம். சௌத்யன், போட்டியின் நாயகனாக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஏ. எவ். டெஸ்வின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த வீரர்களுக்கான விருது சென். பற்றிகஸின் எம். சௌத்ஜன், யாழ்ப்பாணக் கல்லூரியின் பி. பிரதீப் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. (ஐ)

# வடக்கு - கிழக்கில் காணிகளை அபகரிக்கும் செயலில் அரசாங்கம்!

## சாணக்கியன் எம். பி. சபையில் சாடல்

கொழும்பு, மார்ச் 13

வடக்கு - கிழக்கில் மிகவும் இரகசிய மான முறையில் காணிகளை அபகரிக்கும் செயலில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம், பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் வடக்கு - கிழக்கில் இருக்கும் காணிகளில் சிங்கள மக்களை குடியேறு வதற்கு அனைத்து நடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. மகாவலி, வன இலாகா, தொல்லியல் திணைக்களம் என அனைத்து வழிகளிலாலும், காணிகள் துண்டாடப்படுகின்றன.

நான் இங்கு பொய் பேச வரவில்லை. 29 வயதிலே உண்மை பேச இங்கு வந் தேன். கிழக்கு மாகாணத்தில் மரமுந்திரி செய்கை என்ற பெயரில் 500 பேர் வரை, வெளிமாவட்ட நபர்கள் கொண்டு வரப் பட்டுள்ளனர். இதே போல நீங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 500 பேரை அநுராதபுரத்தில் அனுமதிப்பீர் களா?

அரசு சம்மதம் தெரிவித்தாலும், மக்கள் விடமாட்டார்கள். ஏனென்றால் எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதில் அனைவரும் தெளிவாக இருக்கிறார்கள். இதற்காகத்தான் காணி அதிகாரங்களை மாகாண சபைக்கு தருமாறு கோருகின் றோம்.

கிழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேனைப் பயிர் செய்தவர்களை விரட்டு கிறீர்கள்.

முல்லைத்தீவில் குருந்தூர் மலையில் சூலத்தை இழுத்து எறிந்து, புத்தர் சிலையை வைக்கிறீர்கள். உங்கள் பிரதேசத்தில் நாம் ஏதும் இப்படி செய்கிறோமா? - என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

# தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக இந்தியா செயல்படக்கூடாது!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

திருகோணமலை, மார்ச் 13

"அபிவிருத்தி என்னும் போர்வையில் திருகோணமலை மாவட்டத்தில் கால் பதிக்கும் இந்தியா, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இருப்பை பயன்படுத்தக்கூடாது", என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஸ்ரீ.ஞானேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை கூறினார். திருகோணமலையின் எண்ணெய்க் குதங்களை நீண்ட கால குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தியுள்ள இந்தியா, தற்போது சம்பூர் பகுதியில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தினை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டு இருக்கின்றது.

இதன்மூலமாக திருகோணமலையின் இரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இந்தியாவின் கட்டுப்பாட்டில் செல்ல இருக்கிறது. இது ஒருபோதும் தமிழ் மக்களின் இருப்புக்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடாது - என்றார். (ஐ)

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது!

மன்னார், மார்ச் 13

தலைமன்னார் - பேசாலை பிரதேசத்தில் வீடொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக பேசாலையில் அமைந்துள்ள குறித்த வீட்டின் அலுமாரியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஒரு கிலோ 240 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இதன் போது கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக தலைமன்னாருக்கு எடுத்து வரப்பட்டதாகவும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் குறித்த வீட்டிலிருந்து 24 வயதுடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செயற்கை கால் பொருத்தும் முகாம் யாழில் இன்று ஆரம்பம்!

வடமராட்சி, மார்ச் 13

இந்திய அரசின் நிதியுதவியுடன், யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் "ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்" யாழ். இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை யாழ். மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலுவிழந்தோருக்கு சேவை செய்யும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி தொண்டு நிறுவனமும், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகமும் இணைந்து இந்த முகாமை நடத்துகின்றன.

வடக்கில் போரால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்தில்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பில் கடந்த மாதம் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் பங்கேற்றார்.

இந்த முகாமில் கலந்து கொள்ளும் பயனாளிகள் தமது பதிவுகளை தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-துள்ளாத மனமும் துள்ளும்
4.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்



**இரவு**
7.00 மணி : SPOTLIGHT-கந்தையா அருந்தவபாலன்-ஊடக பேச்சாளர் தமிழ் மக்கள் கூட்டணி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு